குருபாதம

ஞானசம்பந்தம்

மலர் 14] மன்மத ஆண்டு ஆவணித்திங்கள் 10—9—55 [இதழ் 1

ஆவணி மூல விழா மலர்

ஆசிரியர் வித்துவான், சோமசுந்தரத் தம்பிரான்

தருமபுர ஆதீன

உட்பொருள்

			பக்கம்
1.	ஆவணிமூலத் திருநாள்	...	க
2.	மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்	...	எ
3.	உண்மை விளக்கம்	...	1
4.	அரனும் ஐந்தொழிலும்	...	9
5.	சேக்கிழார் கண்ட இசைத்தமிழ்	...	11
6.	பூலோக விமர்சனம்	...	14
7.	மாதொருபாகன்	...	17
8.	சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய பாடல்	...	20
9.	வடமொழிச் செய்யுட்கணங்கள்	...	24
10.	குருட்டு நம்பிக்கை	...	29
11.	காலப்போக்கு	...	33
12.	தமிழின் ஒலிமாட்சி	...	37
13.	தமிழரே முதலோர்! தமிழே முதல்மொழி	...	39
14.	திருவிளக்கு வழிபாடு	...	44
15.	மாசில்வீணை	...	47
16.	திருவுந்தியார்	...	52
17.	செய்திகள்	...	57
18.	திருக்குற்ருல யாத்திரை	...	67
19.	வருங்காலம்	...	70
20.	திருக்கேதார யாத்திரை (அநுபந்தம்)	...	49-56
21.	மதிப்புரைகள்		16. 28. 99

அட்டைப்பட விளக்கம்

ஆவணிமூலத் திரு (மூன்ருவது) நாள் நாடகத் தமிழ் விழாவில், தருமபுரம் ஆதீனம் 25-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், டாக்டர் உயர்திரு. அ. சிதம்பரநாதஞ் செட்டியார் எம். ஏ., பி. எச். டி., அவர்களுக்கு வழங்கியருளிய "செந்தமிழ்க்காவலர்" என்ற பட்டம் பொறித்த பொற்பதக்கம் அணிந்து பொன்னுடைபோர்த்த நிலை.

நிழல்படம்:

மாயூரம், திரு. என். இராமகிருஷ்ணன். (அட்டைப்படம்)
தருமபுரம், எம். மீநாக்ஷிசுந்தரம். (பிறபடங்கள்)

உ

குருபாதம்

738

ஞானசம்பந்தம்

மலர் 14 } மன்மதஹூ ஆவணிமீ 10—9—55 { இதழ் 10

உ

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

ஆவணி மூலத் திருநாள்

முத்தமிழ் விழா

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளுரை

இன்று நன்னுள். ஆவணிமூலப் பெருநாள். மாணிக்க வாசகருக்குச் சோமசுந்தரப் பெருமான் திருவருட் பெருக்கம் காட்டிய சிறந்தநாள். அது மதுரையில் நடந்தது. முத்தமிழும் வளர்த்த நகரம் அம்மதுரையே.

“ ஆலந் தரித்தலிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம் — பாலொளியா
மத்தனே கூடல் மதுரா புரிஉமையாள்
அத்தனே ஆலவா யா ”

ஆவணிமூலத் திருநாளும் முத்தமிழ் விழாவும் கலந்தது மிக்க பொருத்தம். அதில் செந்தமிழ்ச்செல்வர் ஒருவர்க்கு, "**செந்தமிழ்க் காவலர்**" என்னும் பட்டம் வழங்குவது அதனினும் சாலப் பொருத்தம்.

இவ்விழா வெள்ளியம்பலச் சார்பினது. இத்தருமையாதீன வழிபாடு வெள்ளியம்பலவாணர் திருவடிக்கே உரியது. இதை அனைவரும் அறிவர். இங்குப் பொன்னம்பல முதல்வர் (சிதம்பர நாதர்) போந்து பட்டம் பெறுகின்றார். யாவும் சிவ மயம். எங்கும் அவன் திருவருள் நிறைவு. எல்லாம் சிவன் செயல். வெள்ளியம்பலம் பொன்னம்பலத்திற்கு (ப் பதக்கம்) அளிப்பது விந்தை என்று தோன்றும். 'எல்லாம் வைத்து வாங்க வல்லான்' என்றார் சேக்கிழார். வல்லவனுக்கு எது தான் நடவாது ? பொன்னம்பலவாணனுக்குப் பொன் இல்லை என்று எவரும் சொல்லார். ஆனால் வெள்ளியம்பலவாணன் வழங்கும் பொன் அங்கு இல்லை. இப்பொன் செந்தமிழ்ப் பொன். அது, செம்பொன். செம்பொன் அசித்து. செந்தமிழ்ப்பொன் சித்து. சித்தும் அம்பரமும் சேர்ந்ததே சிதம்பரம். சிதம்பரத்துக்கு நாதன் செந்தமிழ்ப் பொன்னைத் தேர்ந்து, அது கிடைக்கும் இடம் அறிந்து பெறுதல் இயல்பு.

அண்ணாமலையான் அருள் நினைவிற்கு உரியது. நினைக்கக் கிடைக்கும் பேரின்பம் அண்ணாமலையால். அண்ணாமலையருள்தான் சிதம்பரநாதரை நினைப்பித்தது. வருவித்தது. பட்டமும் பொற்பதக்கமும் வழங்கி, (சிதம்பரநாதச் செட்டியாரைச்) 'செந்தமிழ்க்காவலர்' எனச் செகமெலாம் புகழ்பெறச் செய்கின்றது. அவர் செந்தமிழ்க்குக் காவலராய் இருந்து, கடல் கடந்து சென்றும் தமிழ்த்தாய்க்கு இருக்கும் புகழ்பெருக்கினார். பொலிவை நோக்கினார். பூரிப்பும் ஆரிப்பும் உற்றார். இன்றும் திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில், மொழித்தொண்டு சிறக்கச் செய்து வந்திருக்கின்றார். எவ்வளவு ஆவல் ? எத்துணைக் காவல்? அவர்க்குத் தமிழன்னையைப் போற்றிவரும் காவலும் அதற்குரிய ஆவலும் அளவில் அடங்கமாட்டா. அதனால்தான் வெள்ளியம்பலவாணர் இருபொருளும் தோன்ற, "செந்தமிழ்க் காவலர்" என்னும் செஞ்சொல் தொடரால் ஆன பட்டத்தை வழங்கியருள்கின்றார்

இங்கு நாம் பேசியவற்றைக் கேட்டு நீதிவழங்க ஒரு நீதிபதி (உயர்திரு. S. A. அய்யாசாமிசெட்டியார் B.A.,B.L., அவர்கள்) இம்மேடையில் அமர்ந்திருக்கின்றூர்கள். அவர்கள் ஒரு பால் கோடிச் சொல்லமாட்டார்கள். சீகாழியில் ஒரு நீதிபதி சிவ பெருமானை முன்னிலையில் நிறுத்தி, ஆணையிட்டு நீதிசொல்லு மாறு விதித்தார். மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையை அறியாதார் யார் ? அவர்கள் பாடிய பாக்கள் இலட்சக் கணக் காக உள்ளன. சீகாழிக்கோவை, அவர்கள் இயற்றிய கோவை களுள் ஒன்று. அது சொல்லும் பொருளும் சிறந்த இனியதொரு தமிழ்நூல். அதைப்போலச் சிறப்புமிக்க நூல், வேறென்று சிவபெருமானுக்குக் கிடைத்திருக்காது என்பது நீதிபதியின் கருத்து. வேதநாயகன் நிலைமை வேதநாயகனே அறிவான். காழிப்பிரான் திருவாயில்வந்த வேதநாயகன். காழியிலிருந்த நீதிபதியோ மாயூரம் வேதநாயகம்பிள்ளை. சீகாழிக்கோவை அரங்கேற்றம். பலர் பலவாறு பாடினர். நீதிபதியும் இருபது பாக்கள் பாடினுர். அவற்றுள் இதுவும் ஒன்று, சிவனை நெஞ்சக் கூட்டில் ஏற்றி, நியாய விசாரணை செய்வது. "ஒப்புயர்வில்லாத அப்புறுஞ்சடையரே, விண்ணவரும் மண்ணவரும் பாடிய போற்றிமாலைகள் எத்தனையோ பெற்றிருப்பீர். இக்காழி நகரில் யாம் நீதிபதி என்று நீர் அறிவீர். நம் எதிரில் சத்தியம் பண்ணிச் சொல்லுவது சம்பிரதாயம். பெரும்புலவர் (பேரிலா? உண்மை யில்) மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் உம்மைப் பாடிப் போற்றிய இச்சீகாழிக்கோவையைப்போல வேறு ஒன்று பெற்ற துண்டோ ? சத்தியம் பண்ணிச் சொல்வீர்" என்று விதித்தார்.

"விதியெதிரில் அரிமுதலோர் புகல்புகலி யீசரே விண்ணேர் மண்ணேர்
துதிபொதிபல் பாமாலை பெற்றிருப்பீர் மீனுட்சி சுந்தரப்பேர்
மதிமுதியன் கோவையைப்போல் பெற்றீர்கொல் இக்காழி வைப்பின்நீதி
யதிபதிநாம் எனஅறிவீர் நம் முன்னம் சத்தியமா அறைகு வீரே"

இப்படி ஏதேனும் இந்த நீதிபதி கேட்பதற்கு இடங்கொடா மல், நாம் ஒன்று கூறுகின்ருேம். செந்தமிழ்க் காவலர் என்னும் பட்டம் இதுவரை எவரும் பெற்றதில்லை. இவரும் இது போலும் சிறந்ததொரு பட்டம் எங்கும் பெற்றதில்லை. நீதி பதியும் செட்டியார். செந்தமிழ்க்காவலரும் செட்டியார். வேத நாயகனை வேதநாயகம் கேட்டதுபோலச் செட்டியாரைச் செட்டியாரே கேட்டுக் கொள்ளட்டும்; இச் சமயத்திற்குஏற்ப

"மதிமுதியன் பட்டம்போல் பெற்றீர்கொல் ! — நீதி
யதிபதிநாம் எனஅறிவீர் நம் முன்னம் சத்தியமா அறைகுவீரே"

என்று.

இப்பட்டம் இவர் பெறுவார் என்று நாங்களும் முன் எண்ணியதில்லை. செட்டியாரும் எண்ணியிருக்க இடமேயில்லை. திருவருட்செயல் இவ்வாறு இவர்க்குத் தரத் துணைநின்றது. மாணிக்கவாசகர்க்காக வந்த வையைப்பெருக்கத்தை முன்பே அறிந்தார் ஆர்?

* • * • * •

பட்டம் வழங்கிப் பொற்பதக்கம் அணிவித்த பின்னர், உயர்திரு, டாக்டர் அ. சிதம்பரநாதஞ் செட்டியார் அவர்கள் நன்றி நவின்றார்கள். அவர்கள் பேச்சில் வெளிவந்த முன்னுணர்ச்சியான திருவருளை அவையோர் கேட்டு வியந்து மகிழ்ந்தனர். தமிழ்வளர்ச்சியைக் குறித்த சிற்சிலகருத்துக்களை வெளியிட்ட நம் செந்தமிழ்க் காவலர், பட்டம்பெற்ற அந்த வேளையிலும், செந்தமிழ்க்குக் காவல் புரிந்து கொண்டிருக்கின்றதைத் தம்மையறியாமலே புலப்படுத்தினார்கள். செந்தமிழை வளர்க்க வெள்ளியம்பலவாணர் மதுரையிலும் தருமையிலும் விளங்கியருள்கின்றார். அதற்கு அவர் படும் பாடு நாம் பட்டால் நமக்கு முத்தி நிச்சயம். அதற்குச் சான்றும் வெள்ளியம்பலவாணரே என்ற கருத்து வெளிப்படும்வண்ணம் கோயில்களில் தமிழில் அருச்சனை புரிவது நன்றென்று குறித்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், செந்தமிழர் அருச்சனையைக்குறித்து, தனியேவெளியிட்டருளியவற்றுள், மடாலயத்தின் மரபைக் காப்பதே முதன்மையாயிருந்தது. அப்பொழுது தமிழுலகம் உணர்ந்து பேரின்பம் உறத்தக்கதோருண்மை புது விருந்தாகக் கிடைத்தது. செந்தமிழர் அருச்சனை புதிதாக ஏற்பட வேண்டுவதன்று. முன்பே இருந்தது. திருஞானசம்பந்தருக்கும் எங்களுக்கும் இருமொழியிலும் பெரும்பற்று உண்டு என்று நல்லோர் எல்லோரும் அறிவர். "வேதம் நான்கினும் நாதன் நாமம் நமச்சிவாயவே மெய்ப்பொருள்" என்று பாடிய அம்மறை ஞான மூர்த்தியின் திருவாக்கே செந்தமிழர் அருச்சனைக்கு முதன்மை கொடுத்திருக்கின்றது. திருவீழிமிழலையுள் செந்தமிழர் அருச்சனை புரிந்த வழக்கத்தை அதனால் அறியலாம்.

அது திருவருட்கலப்புடையது. மொழிப்பற்றுமட்டும்கொண்டு கடவுட் பற்று இல்லாதார்க்கும் அருச்சனைக்கும் ஒரு தொடர்பும் இல்லை.

"செந்தமிழர் தெய்வமறை நாவர்செழு நற்கலை
தெரிந்த அவரோடு
அந்தம்இல் குணத்தவர்கள் அர்ச்சனைகள் செய்யஅமர்
கின்ற அரன் ஊர்
கொந்தலர் பொழிற்பழன வேலிகுளிர் தண்புனல்
வளம் பெருகவே
வெந்திறல் விளங்கிவளர் வேதியர் விரும்புபதி
வீழி நகரே"

இத்திருப்பாடலில், முதலிடம் பெற்றிருப்பது செந்தமிழர் செய்யும்அருச்சனை. 'அவ்வூரோ வேதியர் மிகுந்திருப்பது. விரும்பும் இடமாய்த் திகழ்வது. அடுத்துத் தெய்வமறை நாவர்' என்றதும் 'செழுநற்கலை தெரிந்த அவர்' என்றதும் நம் உள்ளத்தில் நிலைத்திருக்கவேண்டும். இம்மரபு நாம் உண்டாக்கிக் கொண்டது அன்று. முன்னோர் வழிவந்த மரபைப் பின்னோர் கொள்வதற்குக் காரணம் ஒன்றும் வேண்டா. தள்ளுவதற்கோ தக்க காரணம் வேண்டும்.

இத்தருமையாதீனத்தின் குருமுதல்வரும் ஞானசம்பந்தர். அவர்க்கு அருளிய குருவும் ஞானப்பிரகாசர். இருவர்க்கும் வடமொழியில் பற்று உண்டென்று சொல்லவும் வேண்டுமோ? குருஞானசம்பந்தர், தம் குருவின் பெருமையும் அருளினருமையும் ஒரு பாட்டில் தேன் பிழிவாக வைத்துள்ளார். அதில் 'தமிழ்' அடைமொழியாக நின்ற அழகு குறிக்கத்தக்கது.

"தேசு செறிகமலைச் செங்கமலப் பொற்பாதன்
பேசுதமிழ் ஞானப் பிரகாசன் — பாசவினை
வாட்டினன் மீட்டும் நான் வாரா வகைஅருளைக்
காட்டினன் கூட்டினன் காண்"

இதில் "பேசுதமிழ்" என்றது என்ன கருத்தைப் புலப் படுத்துகின்றது?

ஸ்ரீ

இவ்வாதீனத்தின் அடியவர் பலர் இருமொழிப் புலமையும் உடையவராயிலங்கினர். வெள்ளியம்பலவாண முனிவர் வட மொழிக்கடல் என்பது முத்திநிச்சய மாபாடியத்தைத் திறந்தா லும் தெரியும். குமரகுருபர முனிவர் 'வடநூற்கடலும் தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்'' ஆகி விளங்கியவர். இல்லையேல், நாமகளை நோக்கி, ''தொண்டர் செந்நாவில் நின்று அவற்றைக் காக்கும் கருணைக் கடலே சகலகலாவல்லியே' என்று அழைப் பாரோ ?

நம் சொக்கேசரை அருச்சனை புரியக் காசியினின்று ஆதி சைவரை வரவழைத்த செந்தமிழ் வேந்தனுக்கு இல்லாத தமிழ்ப் பற்று மற்றவர்க்கு எங்கிருந்து எப்படி உண்டாகும் ?

''கைவரை யெருத்திற் கனவரை கிடந்த
காட்சியில் பொலிந்தொளிர் கோயில்
மைவரை மிடற்று மதுரைநா யகரை
மரபுளி அருச்சனை புரிவான்
பொய்வரை மறையா கமநெறி ஒழுகும்
புண்ணிய முனிவரை ஆதி
சைவரைக் காசிப் பதியினின் கொணர்ந்து
தவத்தினில் தாபனம் செய்தான்''

(பரஞ்சோதி முனிவர், திருவிளையாடற்புராணம், 515)

மதுரைத் திருநகரம் கண்டகாலத்தில் வடநாட்டினின்றும் ஆதிசைவர் வந்த உண்மையும் இதனால் விளங்குகின்றது. புதியராகிய அவரின் வேறுபிரித்து உணரத், 'தமிழந்தணர்' என்று வழங்கலாயிற்று. இவ்வுண்மையைத், திருஞானசம்பந்தர் திருப்பாடலில், 'செந்தமிழர்' என்று முதலில் அமைந்ததாலும் உணரலாம்.

வாழ்க சைவமரபு! வளர்க சிவபக்தி !!

744

உ

சிவமயம்

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்றுள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார்பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி

சிவபுராணம்

முன்னேன் காண்க முழுதோன் காண்க
தன்னே ரில்லோன் தானே காண்க
ஏனத் தொல்லெயி றணிந்தோன் காண்க
கானப் புலியுரி யரையோன் காண்க
நீற்றேன் காண்க நினைதொறும் நினைதொறும்
ஆற்றேன் காண்க
இன்னிசை வீணையில் இசைந்தோன் காண்க
அன்னதொன் றவ்வயின் அறிந்தோன் காண்க
பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க
அற்புதன் காண்க அநேகன் காண்க
சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க

7215

சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலேயிற் படுவோன் காண்க
ஒருவன் என்னும் ஒருவன் காண்க
விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க
அணுத்தருந் தன்மையில் ஐயோன் காண்க
இணைப்பரும் பெருமையில் ஈசன் காண்க
அரியதில் அரிய அரியோன் காண்க
மருவியெப் பொருளும் வளர்ப்போன் காண்க
நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க
மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க
அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதும் செல்வதும் ஆனோன் காண்க
கற்பமும் இறுதியும் கண்டோன் காண்க
யாவரும் பெறவுறும் ஈசன் காண்க
தேவரும் அறியாச் சிவனே காண்க
பெண் ஆண் அலியெனும் பெற்றியன் காண்க
கண்ணல் யானும் கண்டேன் காண்க
அருள்நனி சுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
அவனெனே யாட்கொண் டருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளும் தானும் உடனே காண்க............
அண்டத் தரும்பெறல் மேகன் வாழ்க
கரும்பணக் கச்சை கடவுள் வாழ்க
அருந்தவர்க் கருளும் ஆதி வாழ்க
அச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலும் ஈர்த்தாட் கொள்வோன் வாழ்க
சூழிருந் துன்பந் துடைப்போன் வாழ்க
எய்தினர்க் காரமு தளிப்போன் வாழ்க
கூரிருட் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேரமைத் தோளி காதலன் வாழ்க
ஏதிலர்க் கேதிலெம் இறைவன் வாழ்க
காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க

நச்சர வாட்டிய நம்பன் போற்றி
பிச்செமை யேற்றிய பெரியோன் போற்றி
நீற்ருெடு தோற்ற வல்லோன் போற்றி
இன்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி
அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி
ஊற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி திருவண்டப்பகுதி

சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதிய னாகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை அரசே போற்றி
கூட லிலங்கு குருமணி போற்றி
தென்றில்லை மன்றினு ளாடி போற்றி
இன்றெனக் காரமு தானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மின்னா ருருவ விகிர்தா போற்றி
கன்னா ருரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆவா என்றெனக் கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈச போற்றி இறைவ போற்றி
தேசப் பளிங்கின் திரளே போற்றி
அரைசே போற்றி அமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி
வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி
கதியே போற்றி கனிவே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி
கடையே னடிமை கண்டாய் போற்றி
ஐயா போற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி

குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி
வானோர்க் கரிய மருந்தே போற்றி
ஏனோர்க் கெளிய இறைவா போற்றி
மூவேழ் சுற்ற முரணுறு நரகிடை
ஆழா மேயருள் அரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி
வாழ்வே போற்றியென் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி அரனே போற்றி
உரையுணர் விறந்த வொருவ போற்றி
விரிகட லுலகின் விளைவே போற்றி
அருமையி லெளிய அழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருள் மலையே போற்றி
என்னையு மொருவ னாக்கி யிருங்கழற்
சென்னியில் வைத்த சேவக போற்றி
தொழுத கை துன்பந் துடைப்பாய் போற்றி
அழிவிலா ஆனந்த வாரி போற்றி
அழிவதும் ஆவதுங் கடந்தாய் போற்றி
முழுவது மிறந்த முதல்வா போற்றி
மானேர் நோக்கி மணாளா போற்றி
வானகத் தமரர் தாயே போற்றி
பாரிடை யைந்தாய்ப் பரந்தாய்ப் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவ ருள்ளத் தமுதே போற்றி
கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலும் நாயேற் கருளினை போற்றி
இடைமரு துறையும் எந்தாய் போற்றி
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரு ரமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
அண்ணா மலையெம் அண்ணா போற்றி

கண்ணு ரமுதக் கடலே போற்றி
ஏகம் பத்துறை யெந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானுய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்ருேர் பற்றிங் கறியேன் போற்றி
குற்ரு லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
அடைந்தவர்க் கருளும் அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழிரு மூவர்க்
கத்திக் கருளிய அரசே போற்றி
தென்னு டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி
ஏனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட அருளும் இறைவா போற்றி
தளர்ந்தேன் அடியேன் தமியேன் போற்றி
களங்கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சே லென்றிங் கருளாய் போற்றி
நஞ்சே யமுதா நயந்தாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி
உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணுளா போற்றி
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி
அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி

இலங்கு சுடரெம் ஈசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநா டுடைய மன்னே போற்றி
கலையா ரரிகே சரியாய் போற்றி
திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி
தெரிவரி தாகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆளா னவர்கட் கன்பா போற்றி
ஆரா வமுதே அருளே போற்றி
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி
தாளி யறுகின் தாராய் போற்றி
நீளொளி யாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவனே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி
எந்தமை யுய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
அலைகடன் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
இரும்புலன் புலர இசைந்தனை போற்றி
படியுறப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடுவீ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்க நானிலம் புகாமல்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி
ஒழிவற நிறைந்த வொருவ போற்றி
செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்தசொல் மாலை கொண்டருள் போற்றி
புரம்பல எரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி.

போற்றித்திருவகவல்

திருச்சிற்றம்பலம்

750.

சாத்திரப் பகுதி

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மன வாசகங் கடந்தார் அருளிய

உண்மை விளக்கம்

தருமபுர ஆதீனப் புலவர், சித்தாந்த ரத்நாகரம், மதுரகவி,

திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்

காப்பு

இது மெய்கண்ட நூல் (நிரல்) பதினான்கனுள் ஆறுவது. இதில் காப்பும் சிறப்புப்பாயிரமும் சேர்ந்த ஐம்பத்தாறு திரு வெண்பாக்கள் உள்ளன. காப்பாவது:-

ஆகமநூல்கள் சிவஞானமும் பேரின்பமும்தருவன. அவை தம்முள் வைத்திருக்கும் அவ் வுண்மைப்பொருளை வழுவாமல் விளக்கமாகச் சொல்லுதற் பொருட்டு விநாயகப் பெருமானைத் தொழுவோம். அவர் செவ்வந்தி நிறத்தர். மதயானைமுகத்தர். தொந்தி வயிற்றர். ஐந்துகையர். அவரை உள்ளத்துள் வைத்து நீள நினைந்து போற்றினால் மும்மலத்தொடர்பும் அறும்.

வண்மைதரும் ஆகமநூல் வைத்த பொருள் வழுவா
வுண்மை விளக்கம் உரை செய்யத்—திண்மதம்சேர்
அந்திநிறத் தந்திமுகத் தொந்தி வயிற்று ஐங்கரனைப்
பந்தம் அறப் புந்தியுள் வைப்பாம்.

நூல்

மனவாசகங் கடந்தார் வினா:-

பொய்யைக்காட்டிப் பொய்யை அகற்றி(ச் சிதாநந்தவத்து) உணர்வின்பப்பொருள் ஆகும் (சத்தினை) உண்மையைக் காணச்செய்யும் மெய்கண்டதேவ நாயனாரே! (தேவரீர்க்குஒரு) விண்ணப்பம் (அடியேன்செய்து கொள்கின்றேன்.) பொய்யைக்

251

காட்டாத மெய்யரே! திருவெண்ணெய்நல்லூர் ஞானவடிவினரே! ஐயரே இச்சுத்தமான வினாக்களைத் தேவரீர்தாம் கேட்டு அருள்க.

உ பொய்காட்டிப் பொய்அகற்றிப் போதாநந் தப்பொருள்ஆம்
மெய்காட்டும் மெய்கண்டாய் விண்ணப்பம் — பொய்காட் டா
மெய்யா திருவெண்ணெய் வித்தகா சுத்தவினா
ஐயாநீ தான்கேட் டருள்.

குறிப்பு: பொய் - தேகம் முதலிய பிரபஞ்சம். பொய் அகற்றல் - பாசஞானம் பசுஞானங்களை நீக்குதல். போதம் - சித்து. ஆநந்தப் பொருள் - (ஆநந்தவஸ்து) இன்பப்பொருள். மெய் - சத்து: சத்து சித்து ஆநந்தம் - சச்சிதாநந்தம். பொய் காட்டா மெய்யா - எப்படியும் கருவுட்புகும் உடலைத் தோற்று தருளும் மெய்யரே. வித்தகம் - ஞான சொரூபம். சுத்தம் - தூய்மை. சுத்தாவத்தையும் ஆம்.

வினாக்கள் :—

(அ) ஆறுறு (36) தத்துவம் ஏது ?
(ஆ) ஆணவம் (மலம்) ஏது ?
(இ) வினை (கன்மம்) ஏது ?
(ஈ) நான் (ஆன்மா) ஏது ?
(உ) நீ (சிவம் குரு) ஏது ?
(ஊ) நாதன் நட(ன)ம் ஏது ?
(எ) அஞ்செழுத்து ஏது ?
(ஏ) தான் (பேரின்பம்) ஏது ?

ங 1 ஆறுறு தத்துவம் ஏது ? 2 ஆணவம் ஏது ? 3 அன்றே தான்
மாறு வினை ஏது ? 4 மற்று இவற்றின் — வேறுகா
நான் ஏது ? 5 நீ ஏது? 6 நாதன் நடம் 7 அஞ்செழுத்து
8 தான் ஏது? தேசிகனே ! சாற்று.

வினாக்களும்

விடை அடங்கிய திருவெண்பாப்பகுதி எண்களும்

குறிப்பு :

(அ) ஆறு ஆறு (6 × 6) = முப்பத்தாறு (36) தத்துவம் எவை ?

(ஆ) ஆணவமலம் எத்தகையது ? 23
(இ) கன்மமலம் எத்தகையது ? 23
(ஈ) ஆன்மரூபம் எது ? 25-27
(உ) சிவரூபம் எது ? 28-30
(ஊ) பஞ்சாட்சரநடனம் எது ? 31-40
(எ) அஞ்செழுத்தின் இயல்பு எது ? 40-48
(ஏ) பேரின்ப நிலை எது ? 46-51

மெய்கண்டதேவ நாயனுர் அருளிய விடைத்தொடக்கம்:- சிவபெருமான் திருவருளால் அநாதியிலே திருவாய் மலர்ந்து தெளிந்த சீர்த்திமிக்க சிவாகமங்கள் உரைத்த முறைமையிலே சிவாநந்த யோகத்தில் விளங்குகின்ற ஞானபுத்திரனே! உள்ளம் உரையொடு பொருந்தி உள்ளவாறு இதனைச் சொல்லுகின்றேன். கேட்பாய்.

ச "உள்ளபடி இத்தை உரைக்கக் கேள் உன்றனக்கு
வள்ளல் அருளால் அன்று வாய்மலர்ந்து — தெள்ளியசீர்
ஆகமங்கள் சொன்ன அடைவிலே ஆனந்த
யோகம் நிகழ்புதல் வா உற்று"

முதல் வினுவிற்கு விடை (பா. 5-22)

பிருதிவி (மண்) நான்கு கோணமாயிருக்கும். அப்பு (நீர்) பிறைவடிவம் போன்றதாயிருக்கும். தேயு (தீ) முக்கோண மாயிருக்கும். வாயு (காற்று) அறுகோணமாயிருக்கும். ஆகாயம் (வான்) வட்டமாயிருக்கும். இப்பஞ்சபூதங்களும் பரிணமம் ஆகி ஆன்மாக்கள் தங்கும் உடம்புகளாயிருக்கும்.

ஆன்மதத்துவம் 24

பஞ்ச பூதங்களும் அவற்றின் உருவமும்

" நாற்கோணம் பூமிபுனல் நண்ணுமதி யின்பாதி
ஏற்கும்அனல் முக்கோணம் எப்போதும் — ஆர்க்கும்
அறுகோணம் கால்வட்டம் ஆகாயம் ஆன்மா
உறுகாயம் ஆம்இவற்ருல் உற்று "

குறிப்பு: பிருதிவி முதலிய காரியப்பொருள்கள் வேறு. காரண பஞ்ச பூத தத்துவங்களுக்கு இயற்கையுருவம் நாற்

கோணம், பிறை, முக்கோணம், அறுகோணம, வட்டம் என்னும் ஐந்தும் ஆம். அவை காரிய பூதங்களால் உண்மை யாதலே அறிக. அப்பஞ்சபூதங்களின் பரிணுமத்தால் ஆன உடம்பை ஆன்மா அடைகின்றது.

"மண்புனல் அனல் கால் வான்பால் வடிவு நாற்கோணம் ஆகும்
தண்பிறை மூன்று கோணம் தகும்அறு கோணம் வட்டம்"
—சிவஞான சித்தியார் சுபக்கம் 157

பஞ்சபூதங்களின் நிறமும் பீஜாக்ஷரமும்

பிருதிவிக்குப் பொன்னிறம். அப்புவுக்கு வெண்ணிறம். தேயுவுக்குச் செந்நிறம். வாயுவுக்குக் கருநிறம். ஆகாயத் திற்குப் புகைநிறம். அவ்வைந்திற்கும் முறையே ல, வ, ர, ய, ஹ என்பவை பீஜாக்ஷரம். இவை பூதசுத்தியில் உச்சரிக்கப் பெறும் மந்திரங்களில் அமைந்திருத்தலாலும் அறிக.

சூ பொன்பார், புனல்வெண்மை, பொங்கும் அனல்சிவப்பு,
வன்கால் கருமை, வளர் வான்தூமம் — என்பார்
எழுத்து லவரயஹ பார்ஆதிக்கு என்றும்
அழுத்தமதாய் நிற்கும் அது !

குறிப்பு : 'லவரயவப் பார்' என்று உள்ளது. அது பலர்க் கும் விளங்குவது அரிது. விளங்கவேண்டி, ல - வ - ர - ய - ஹ என்று பிரித்துக் காட்டலாயிற்று. பார் - பூமி. புனல் - நீர். வல் கால் - வலிய வாயுபூதம். வான் - ஆகாயம். தூமம் - புகை. பார் ஆதி - பிருதிவி முதலியவை.

"வண்பொன்மை வெண்மை செம்மை கறுப் பொடு தூம வன்மை
எண்தரும் எழுத்துத் தானும் லவரய ஹவ்வும் ஆமே," (ஷ)

பஞ்சபூதங்களின் குறிகள்

பிருதிவிக்குறி வஜ்ரம் ; அப்புக்குறி தாமரைப்பூ ; தேயுக் குறி சுவஸ்திகம் ; வாயுக்குறி ஆறுபுள்ளிகள் ; ஆகாயக்குறி அமிர்தபிந்து (அமுதத்துளி).

எ குறிகுலிசம் கோகனதம் கொள்சுவத்தி குன்ரு
அறுபுள்ளி ஆர்அமுத விந்துப் — பிறிவின்றி
மண்புனல்தீக் கால்வானம் மன்னும் அடைவே என்று
ஒண்புதல்வா ! ஆகமம்ஒ தும்

குறிப்பு :- குறி - அடையாளம். கோகனதம் - தாமரை. சுவத்தி - சுவத்திகம். விந்து - (பிந்து) துளி. ஒண்புதல்வா - ஞானபுத்திரனே! ஆகமம் - சிவாகமங்கள். ஓதும் - கூறும்.

" குறிகள்வச் சிரத்தி னேடு கோகன தம்சுவத்தி
அறுபுள்ளி அமுதவிந்து " (ஷி 158)

பஞ்சபூதங்களுக்கும் அதிதெய்வங்களும் கிருத்தியங்களும்

பிருதிவிக்குப் பிரமன், அப்புவுக்கு விஷ்ணு, தேயுவுக்கு உருத்திரன், வாயுவுக்கு மகேசன், ஆகாயத்துக்குச் சதாசிவன், அதிதெய்வமாம். ஐந்தொழிலும் முறையே ஐவர்க்கும் உரியன.

அ பார்ஆதி ஐந்துக்கும் பன்னும்அதி தெய்வங்கள்
ஆர் ஆர்? அயன் ஆதி? ஐவர் ஆம் — ஓர் ஓர்
தொழில் அவர்க்குச் சொல்லுங்கால் தோற்றம் முதல் ஐந்தும்
பழுது அறவே பண்ணுவார்கள் பார்

குறிப்பு :- மூன்ருவது பாட்டிலேமட்டும் அன்றிப் பிற பாடல்களிலும் வின உண்டு. 24, 28, 31, 40, 50 ஆகிய எண்களை உடைய பாக்களில் காண்க. தொழில் - பஞ்ச கிருத்தியம்) ஐந்தொழில்.

" அதிதெய்வம் அயன்மால் ஆதி
செறிபுகழ் ஈச னேடு சதாசிவம் பூத தெய்வம்
நெறிதரு கலைஐந் திற்கும் நிகழ்த்துவர் இந்த நீர்மை (ஷி 158)

காண்பார் என்பது பொருந்தாத பாடபேதம்.

ஐந்தொழில் முதல்வர்

நான்முகனுர் படைப்பார். திருமால் காப்பார். உருத்திரர் அழிப்பார். மகேசர் திரோபவம் (மறைப்பு) புரிவர். சதாசிவர் அனுக்கிரகம் செய்வார்.

கூ படைப்பன் அயன் அளிப்பன் பங்கயக்கண் மாயன்
துடைப்பன் உருத்திரனும் சொல்லின் — திடப்பெறவே
என்றும் திரோபவிப்பர் ஈசர் சதாசிவரும்
அன்றே அநுக்கிரகர் ஆம்.

255

குறிப்பு :- அயன், அஜன். பங்கயம் - தாமரை. ஈசர் - மகேசர். திரோபவித்தல்-ஆன்மாக்களைப் பந்தத்தில் செலுத்துதல் வாயிலாகத் தம்மையும் தலைவனையும் அறியாமல் மறைத்தல். அநுக்கிரகர் - அருள் புரிவர்.

பஞ்சபூதங்களின் இயல்பு

பிருதிவி கடினமாயிருக்கும். தாங்குவதாயிருக்கும். அப்பு, குளிர்ந்து பதமாக்கும். தேயு சுட்டு ஒன்றுபடுத்தும். வாயு பரவி அசைந்து திரட்டும். ஆகாசம் வெளியாகி இடங்கொடுக்கும்.

கஂ மண்கடின மாய்த்தரிக்கும் வாரிகுளிர்ந்தே பதம் ஆம்
ஒண்கனல் சுட்டு ஒன்றுவிக்கும் ஓவாமல்—வண்கால்
பரந்துசலித் துத்திரட்டும் பார்க்கில் ஆ காயம்
நிரந்தரமாய் நிற்கும் நிறைந்து.

குறிப்பு :- திண்மையும் தாங்குதலும் மண்ணுக்கும், குளிர்ச்சியும் பதப்படுத்தலும் நீர்க்கும், சூடும் ஒன்றுபடுத்தலும் நெருப்புக்கும், பரவி யசைதலும் திரட்டுதலும் காற்றுக்கும், இடைவெளி தந்து நிறைந்து நிற்றல் வானத்துக்கும் உள்ள இயல்புகள். இவை காரணமாகிய தத்துவங்களின் இயல்பாக இருத்தலால்தான் காரியப்பொருள்களிடத்தும் இருக்கின்றன. அப்புதத்துவத்தின்கண் குளிர்ச்சியும் பதஞ்செய்தலும் இயல்பாயில்லையேல், காரியமான நீரில் அவை இரா. இவ்வாறே பிறவற்றையும் கருதுக. ரந்திரம்-வெளி. அது நிரந்தரம் என்று குறிக்கப்பட்டது. நி உபசர்க்கம். அதற்குத் தனிப்பொருள் ஈண்டு இல்லை. நிர் அந்தரம் - இடையீடில்லாதது எனலுமாம்.

“ இரந்தரம் ஆகி வான்தான் இடம்கொடுத் திடும் சலித்துப்
பரந்தவை திரட்டும் கால்தீச் சுட்டுஒன்று வித்தல் பண்ணும்
நிரந்தரம் குளிர்ந்து நின்று பதஞ்செயும் நீர்மண்தானும்
உரந்தரு கடினம் ஆகித் தரித்திடும் உணர்ந்து கொள்ளே ”

—சித்தி, 156.

ஐம்புலன் + ஐம்பொறி + ஐம்பூதம் + ஐந்துறுப்பு

முன்னர் விளக்கப்பெற்ற தத்துவங்கள் ஐம்பெரும்பூதங்கள். இப்பாடல் முதல் இனிச் சொல்லப்பெறுவன ஐம்புலன்கள். அவை 1 ஓசை, 2 ஊறு, 3 ஒளி, 4 சுவை, 5 நாற்றம் எனப் பெயர்பெறுவன. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்என்ற ஐந்தின்

வகை (திருக்குறள்) என்று சொல்லுவதற்குத் தெளிவான வரிசையில் வழங்கப்பட்டாலும் இங்கு வான் (ஆகாயம்) முத லாகவைத்து விளக்கும் முறைமைக்கு இவ்வாறு அமைக்க லாயிற்று.

பூதங்கள்	இந்திரியங்கள்	இந்திரியத்தினிடம்	அறியப்படும் புலன்கள்
1. வானம்	செவி	காது	ஓசை, ஒலி, (சப்தம்)
2. காற்று	மெய்	தோல்	ஊறு, (ஸ்பரிசம்)
3. தீ	கண்	கண்	ஒளி, உருவம் (ரூபம்)
4. நீர்	நா	நாக்கு	சுவை (ரஸம்)
5. மண்	மூக்கு	மூக்கு	மணம், நாற்றம் (கந்தம்)

கக உள்ளபடி மாபூதம் ஓதினோம் உன்றனக்குக்
கள்ளமிகும் ஐம்புலனும் கட்டுரைக்கின் — மெள்ளவே
ஓசை பரிசம் உருவம் சுவை நாற்றம்
ஆசைதரும் ஐம்புலனே ஆம்.

குறிப்பு :- 'உள்ளபடி மாபூதம் ஓதினோம்' என்னும் முற்றுத்தொடர், அதற்குமுன் உள்ள ஆறு பாடல்களிலும் உணர்த்தியதைக் குறித்ததாகிக் கூறப்பட்ட பகுதி முடிவுற்றது. என்பதை அறிவித்தது. இனி, வேறு கூறப்படும் என்று அறிவித்து, பண்டையோரது கற்பிக்குந்திறம் புலப்படுத்துதல் காண்க. மண் + அம் = மணம் .மண்ணிலிருந்து புலப்படுவது.

ஐம்பொறிகளும் அவற்றிற்கு இடமான பூதங்களும் உடலுறுப்புக்களும்

ஞானேந்திரியம் 'மெய் வாய் கண் மூக்குச் செவி' ஆகும். (அவற்றிற்கு இடமாய் உடலில் உள்ள உறுப்புக்களுக்கும் அவையே பெயராதலின், உறுப்பும் இந்திரியமும் வெவ்வேரு தலை உணரமாட்டாமல், மயக்கம் உண்டாக்கும்) இந்திரியம், ஒவ்வொன்றும் ஒவ்வொரு பூதத்தை இடமாகக்கொண்டே ஒவ்வோருறுப்பிலிருந்து ஒவ்வொரு புலனைக் கவரும். பூதங் களின் வரிசைக்கு ஏற்ப, செவி, மெய், கண், வாய், மூக்கு என்று கொள்க. உறுப்புக்கள் காது, தோல், விழி, நாக்கு மூக்கு ஆகும்.

கஉ ஞானேந் திரியங்கள் நன்ரு உரைக்கக் கேள்
ஊனம் மிகுபூதம் உற்று இடமா — ஈனமாம்
சத்தாதி யை அறியும் தானம் செவிதோல்கண்
அத்தாலு மூக்குஎன்று அறி.

குறிப்பு :- ஞான இந்திரியங்கள் - அறிவுப்பொறிகள். பூதம் - ஐம்பெரும் பூதங்களான ஆகாசம் முதலியவை. சத்தாதி - (சப்தம் ஆதி) ஓசை முதலியவை. தானம் - இடம். செவி - காது. தாலு - நாக்கு. அ+தாலு = (அத்தாலு) அந்த நாக்கு.

பொறிகள் பூதங்களை இடமாகக்கொண்டு புலன்களைக் கவரும் இயல்பு

ஆகாயத்தை இடமாகக்கொண்டு செவிப்பொறியானது காதாகிய உறுப்பிலிருந்து ஓசையைக் கலக்கும். வாயுவை இடமாகக்கொண்டு மெய்ப்பொறி, தோலாகிய உறுப்பிலிருந்து, பரிசத்தைக்கவரும். தேயுவை இடமாகக்கொண்டு கண்ணு கிய பொறி விழியாகிய உறுப்பிலிருந்து சென்று ஒளியைக் கவரும்.

கங வான் இடமாய் நின்று செவி மன்னும் ஒலியதனை
ஈனம்மிகும் தோல் கால் இடமாக—ஊனப்
பரிசந் தனை அறியும் பார்வையின்கண் அங்கி
விரவி உரு வம் காணு மே.

குறிப்பு: வான் - ஆகாயம். கால் - காற்று. பரிசம்-ஊறு. அங்கி - தேயு, தீ. உருவம் - ரூபம். விரவி - கலந்து.

அப்புவை இடமாகக்கொண்டு நா ஆகிய பொறி வாயில் நாக்கின்முனையில் இருந்து சுவையை அறியும். பிருதிவியை இடமாகக்கொண்டு மூக்கு ஆகிய பொறி உறுப்பாகிய மூக்குமுனையிலிருந்து மணத்தைக்கவரும். சிவாகமங்களில் இவை விரித்துரைக்கப்பட்டன. [தன்மாத்திரைகட்கும் ஐம் புலன்கட்கும் பெயர் ஒன்ருயிருத்தலால் மயங்குதற்கு இடம் உண்டு. பூதங்களுக்குக்காரணம் தன்மாத்திரை. காரியம்புலன்]

பொறிவாயில் ஐந்து அவித்துப் பொய்தீர் (ந்த) ஒழுக்க நெறிநின்ருர் பேரின்ப வீடு சென்ருராகி நீடுவாழ்வார்.

758

தோத்திரப் பகுதி

அரனும் ஐந்தொழிலும்

திரு. ஆர், கே. பூரணனந்தேசுவரக் குருக்கள் அவர்கள்
வில்லூன்றி.

திருவாதவூரிறைவராலே அருளப்பெற்ற மணிவாசகங்களுள் (திருவண்ணுமலையில்) சத்தியை வியந்து கூறப்பட்டதும், மார்கழி மாதத்துப் புலரிக்காலத்தே சிவனடியார்களால் ஓதப் பெறுவதுமாகிய திருவெம்பாவையில்,

"போற்றி யருளுக நின்னுதியாம் பாதமலர்
போற்றியருளுக நின்னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி யெல்லா வுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி யெல்லாவுயிர்க்கும் போகமாம்பூங் கழல்கள்
போற்றி யெல்லா வுயிர்க்கும் மீறுமிணையடிகள்
போற்றிமா னன்முகனுங் காணுத புண்டரிகம்
போற்றியா முய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழி நீராடேலோ ரெம்பாவாய்

என்னுந் திருவிருத்தத்தில், பாதமலர் அந்தமாஞ்செந்தளிர்கள், பொற்பாதம், பூங்கழல்கள் என்றின்ன பலமொழிகளால் திருவடிகளை வாழ்த்தியது என்ன காரணமோ என்று ஓர் ஐயம் எழலாயிற்று. ஆகவே இதுபற்றி ஆராய்ந்துழி :-

இவை முதல்வனும் இறைவனுடைய ஐந்தொழிலை வியந்து வாழ்த்தப்பெற்றன என்பது விளங்கியது. என்னை ? (சந்தான குரவருளொருவராய ஸ்ரீமத் உமாபதிசிவம் அருளிய) 'சிவப் பிரகாசம்' என்னும் சித்தாந்த சாத்திரத்தில்,

"ஏற்றவிவையரனருளின் திருவிளையாட்டாக
இயம்புவர்கள் அணுக்களிடர்க் கடனின்று மெடுத்தே
ஊற்றமிக அருள்புரித லேதுவாக
உரைசெய்வர் ஒடுக்கமிளைப் பொழித்தல் மற்றைத்
தோற்ற மலபாகம் வரக்காத்தல் போகந்
துய்ப்பித்தல் திரோதாயி நிறுத்த லாகும்
போற்றலரு மருளருளே யன்றி மற்றுப்
புகன்றவையும் அருளொழியப் புகலொணுதே"

என்ற பாவுக்குரிய விசேட வுரையில்,

“ சிவனே பஞ்சகிருத்தியஞ் செய்வனென்பதற்குப் பிரமாணம் திருவாசகத்தில்,

தோற்றமாம் பொற்பாதம் —சிருட்டி
போகமாம் பூங்கழல்கள் — திதி
ஈரும் இணையடிகள் — சங்காரம்
மால்நான் முகனுங் காணாத புண்டரிகம் — திரோபவம்
யாமுய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள் — அநுக்கிரகம்

என அறிக.

அன்றியும், கர்த்தா இந்தத் தொழில்களிலே ஆன்மாக்களைக் கூட்டிப் பஞ்சகிருத்தியப்படுத்துமிடத்துப், பாராமல் எளிதாக விளையாட்டாகச் செய்வன். அப்படிச் செய்யவே ஆன்மாக்களுக்கு உண்டான மலபாகமும் வந்து திருவடிக்கும் உரித்தாவார்கள். இதற்குப் பிரமாணம், சிவஞானசித்தியாரில்

“ சொன்ன இத்தொழில்களென்ன காரணந் தோற்ற என்னின்
முன்னவன் விளையாட்டென்று மொழிதலுமா முயிர்க்கு
மன்னிய புத்தி முத்தி வழங்கவும் அருளான் முன்னே
துன்னிய மலங்களெல்லாந் துடைப்பதும் சொல்லலாமே ”

என்று வருவது கண்டுகொள்க.

“ அணுக்களிடர்க்கடனின்று மெடுத்தே யூற்றமிக
அருள்புரிதலேதுவாக உரைசெய்வர் ”

என்பதற்கு ஆன்மாக்களை ஜநநக் கடலிலே நின்றும் கரைஏற்றித் தனது திருவடியிலே கூட்டிக் கொள்ளுகை நிமித்தமாகக் கர்த்தா இந்தத் தொழில்களைச் செய்வன் என்றும், இதனைச் சிவஞான சித்தியாரில்,

“ அநாதி முத்தனாய்ப் பரனாய் அசலனாயெல்லா
அறிவு தொழிலநுக்கிரக முடைய அரன் கன்ம
நுனாதிக மற்றொத்த இடத்தேசத்திநிபாத
நுழைவித்து மலங்களெல்லாம் நுங்கநோக்கி
மனாதி கரணங்களெல்லாமடக்கித் தன்னை
வழிபடு நாலறிவருளி மாக்கருணைக் கையால்
இனாது பிறப்பினின்று மெடுத்து மாறா
இன்ப முத்திக்கே வைப்பன் ”

என்றும் பிரமாணங் கூறி விளக்கியதும் கண்டு கொள்க என்றும் உரையாசிரியர் கூறியதாலென்க.

(தொடரும்)

சேக்கிழார் கண்ட இசைத் தமிழ் (3)

சங்கீதம், குடந்தை, திரு. ப. சுந்தரேசனுர் அவர்கள்.

(முற்றெடர்ச்சி மலர் 14 இதழ் 9)

ஒரு மாத்திரையை இக்காலம் 'த' என்று வாயினுல் கூறினுல் அதன் கால அளவு எத்துணையோ. அத்துணையளவு எனப்படுகிறது. இந்த அளவு முறைகள் முப்பத்தைந்து தானங் களுக்குக் கொண்ட முறையாகும். நூற்றெட்டுத் தாளங்களில் கூறப்படும் மாத்திரையளவு முன்னேயதில் நான்கு கொண்டது ஒருமாத்திரையாகும். இம் முறையிலேயே பண்டைய தேவாரப் பதிகம் பாடிவந்த முன்னேர் பாடிக்கொண்டிருந் தனர் என நன்கு அறியலாம். இக்காலம் மிகப்பழைய முறையில் பாடுவது அதாவது விண்ணப்பம் செய்வது மிகவும் அரிதாகி விட்டமையினுலே ஆராய்ச்சி முறையில் அப் பழைய நிலையை நாம் இங்கு எழுத்தளவிலும் இசையளவிலும் எழுதிக் கூறுபடுத்திக் காண்பிப்பதைக் கண்ணுறுவோர்பலர்க்கு ஏதோ ஒரு புதுமைபோன்று தோன்றினும் தோன்றக்கூடும். கலை யறிவும் பெருமையுங் கொண்டு சிந்தித்துக்காண்போர்க் கன்றி உண்மை விளங்கா.

பண்டைய மாத்திரையை உணரப்படுவதில் இக்காலத் தமிழ்வழக்கில் உள்ள இரண்டு நிரையசைகளேக் கூறுவதே பொருந்தும். அதாவதுநிரைநிரை எனவும், வாய்பாட்டு முறை யில் கருவிளம் எனவும், சந்தக்குறிப்பு முறையில் தனதன எனவும் கூறலாம். இவ்வாறு கூறப்படும் தனதன எனும் ஓசை தானன எனவும் தனனு எனவும் தனுன எனவும் விகற்பமுற்று வரும். தானு எனவரும் விகற்பம் இயல் வகையில் இரண்டு நேரசையாகும். இஃதும் இதனுளடங்கும்.

ஆகவே தனதன என உள்நிறைவு கொண்ட மாத்திரை ஒன்றுபோல் ஆறுமாத்திரைகள் கொண்ட ஒருதாளமே பித்தா பிறைசூடி என்ற பாடலுக்கு உரியதென அறியவேண்டும். இதனேஎழுதிக் காணுமிடத்து

க	உ	௩	ச
தனதன	தனதன	தனதன	தனதன

ரு சா

தனதன தனதன

என இவ்வாறு உருப்பெறும் இக்கருத்தினையே நம் சேக்கிழார் பெருமான் நிறைவுபாணி எனக்கூறி நம்மனோரை உய்த்துணர வைக்கின்றார்.

"சொல்லார் தமிழிசைபாடிய" தொண்டன் என நம்பி யாரூரரை, சேகிழார் சிறப்பித்துக் கூறினமையினாலே ஆரூரர் பாடிய அருந்தமிழ்ப் பாடல்கள் யாவும் பண்டைய இசைத் தமிழ்வழிவந்த வாரப்பாடல்கள்தான் என்பதில் யாதோர் ஐயமுமில்லை.

இனி, பாடலை இசையோடு பொருத்திக்காண (அதாவது சொல்லொழுக்கமும் இசையொழுக்கமும் உடைத்தாகிய நீர் மையில் பொருத்திக் காண)

தாளத்திலடங்காது (இது பொது) எழுத்தும் இசையும்

ம க மா க சா	ச ச மா க மா
பி த் தா . .	பி றை சூ . டீ
ம த நீ நீ ச் நி தா	ச் நி தா நி ச்ா
பெ ரு மா னே . . .	அ ரு ளா . ளா
ச் ச் ம்ா க் ச்ா	ச் நி தா த நி ச்ா
எ த் தா . ன்	ம ற வா . . தே
ம் க் ச்ா நி நித தா	ம க சா சா
நி னை க்கி ன் றே ன்	மனத் துன் னை

(மற்றைய அடிகள் இதுபோன்று)

இவ்வாறு அமையும்

மேலே எழுதியுள்ள இசைமுறை ஆசிரியர் (சேக்கிழார்) கூறிய "இசை கோள் புணர்" என்றசொற்களுக்குள்ள பொரு ளாக எழுதப்பெற்றது. இம்முறையே முற்கூறியநிறைபாணியின் இசைகோள்புணர் எனும் சொற்களுக்குப் பொருளாக எழுத வேண்டும். அவ்வாறு எழுதுவதற்கு முற்கூறிய தாளமாத்திரை

 262

களைக் கொண்ட தாளத்தினை அங்கங்களோடு குறித்து அதற் கேற்பஇசைகளை அளவு நிரம்ப அறிந்து உணர்ந்து நிறுத்திப் பின்னர் அதன்கீழே பாடலின் எழுத்துக்களைக் குறித்தல் வேண்டும். இவ்வாறு எழுதியுள்ள பகுதியினை அடுத்த இதழிற் காண்க

நம் சேக்கிழார் பெருமான் வாழ்ந்த காலத்தில் மிக அருகியிருந்த பாண் மரபு பிற்காலத்தில் தமிழ் நாட்டில் மறைந்து போயிற்று. ஆயினும் சேக்கிழார் பண்டைய பண் முறைகளை குழல் வழியும் யாழ்வழியும் அக்காலத்துப் புதிய வீணை வழியும் அறிந்திருந்தமையினாலே 'பண்களின் மழலை எங்கும்' எனவும் 'வளரிசைக்குழல்கள் எங்கும்' எனவும் நன்கு சிறப்பித்து நாட்டுச் சிறப்பில் கூறுவாராயினர்.

ஆகவே அப் பெரியவர் கூறிய இசையிலக்கணம் மிகப் பழைய தமிழ் வழக்கிற்குரியவை என்பதனை நாம் உணர்தல் வேண்டும். இம் முறையில் எல்லாக் கருத்தினையும் உளத்தில் வைத்து இசைப்படுத்தி எழுதும் இப் பாடலை நன்கு பயின்று பயன் பெறுமாறும் வேண்டுகின்றேன்.

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது.

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு	...	...	1—8—0
வெளிநாடு	...	...	2—0—0

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமபுரம், மாயூரம் P. O.

263

பூலோக விமர்சனம்

(பதினேழாம் நூற்றாண்டு வேங்கடாத்வரீ)

தமிழில் ஆக்கியவர்

பிர்மஸ்ரீ ய. மகாலிங்க சாஸ்திரிகள் அவர்கள் M. A., B. L.,

தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரியின் முன்னாள் முதல்வர்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

கிருசானு மஹாராஷ்ட்ர வீரர்களைக்குறிப்பிட்டுக்கேட்டான். "இவர்கள் புகுந்து கொள்ளை அடிக்காத தேசம் கிடையாதே? இன்னார் என்று பார்க்காமல் பிராமணர்கள் உள்பட எல்லோரையும் கொள்ளை அடிக்கிறார்களே! இப்படி ஜீவனம் நடத்துபவரை ஈன்றெடுத்த இந்தத் தேசத்தையா புகழ்கிறாய்?

விசுவாவசு :- "சொல்வது வாஸ்தவந்தான். ஆனால் இந்த மகாராஷ்டிர வீரர்கள் தேசங்களிலெல்லாம் சஞ்சரித்துக் கொண்டு பயங்கரமான செயல்களைச் செய்துகொண்டிருக்காவிட்டால் துருஷ்க்கர்கள் பயப்படமாட்டார்கள். துருஷ்க்கர்கள் கோவில்களைக் குலைப்பதும், பிராமணர்களைப் பிரஷ்டர்களாகச் செய்வதும், பொதுவாய் ஹிந்துக்களின் சொத்துக்களை அபகரிப்பதுமான கொடிய செயல்களைப் புரிந்து வருகிறார்கள். அவர்கள் இந்தமகாராஷ்டிர வீரர்களைக்கண்டு நடுங்கிக்கொண்டிருப்பதால்தான் கோவில்களும் பிராமணர்களும் நம்தேசத்தில் அழிக்கப்படவில்லை. மாயாவிகளும் அதிர்ச்சிதரக்கூடிய நடமாட்ட முள்ளவர்களும் யுத்தத்தில் சாமர்த்தியசாலிகளுமான இந்த வீரர்கள் தேசத்தின் பல பாகங்களில் திடீர் திடீரென்று சஞ்சரித்துப் பயங்கரமான செயல்களைப் புரிந்துவருவது நம் நாட்டிற்கு ஒரு ரக்ஷை போன்றது என்று நினைக்கவேண்டும். மேலும் அவர்களால் சில இடங்களில் அநீதியான சேதங்கள் ஏற்பட்டால் அவற்றை நாம் பொறுத்துக் கொள்வது தகும். தெய்வங்களையும் பிராமணர்களையும் ரக்ஷிப்பதற்காகத் துருக்

கர்களைத் தகர்த்து எறியும் மகாராஷ்டிரர்கள் ஒவ்வொரு சமயம் ஏதாவது சில அபசாரங்கள் செய்வது உடம்பிற்கு ஹிதம் செய்யும் மருந்து கசப்பதுபோலாகுமே ஒழிய வேறில்லை.

பின்பு விசுவாவசு விமானத்தை வேறுபக்கமாகச் செலுத்திக் கொண்டு நெடுந்தூரம் சுற்றிப்பார்த்து ஆங்காங்கு கூட்டம் கூட்டமாய்ச் சென்றுகொண்டிருக்கும் பைராகிகளைப் பார்த்துப் பின்வருமாறு கூறினன். கிருசானு இவர்களைப்பார் இவர்கள் பரலோகத்தையே மேலாகநினைத்துப் பரலோக சுகமடையும் பொருட்டு இகலோக ஸௌக்கியங்களைத் துறந்தவர்களாகத் தேசத்துக்குத் தேசம் அலைந்து திரிகிருர்கள். அதாவது அஸ்தம், வங்கம், களிங்கம், மகதம், குரு, கோசலம், கேகயம், காச்மீரம், குந்தளம், யவனர்கள் வசிக்குமிடங்கள் பாஞ்சாலம், நேபாளம், கேரளம், பாண்ட்யம், துண்டீரம், சோளம், கர்நாடம், கௌடம் முதலிய தேசங்களில் எல்லாம் க்ஷேத்திராடனம் செய்கிருர்கள்.

கிருசானு :- அடா! நீ இவர்களைக்கூடவா துதிக்கின்ருய்? இவர்கள் பாஷண்டிகள் அல்லவா ? நானு ஜாதியார்களும் இவர்களுக்குள் இருக்கிருர்கள். இவர்கள் அபிநயிப்பது வைராக்கியமேதவிர இவர்களுக்கு வயிறு வளர்ப்பதே தொழில். இவர்களுக்குள் வர்ணுச்ரமம் கிடையாது. வைதிக சிரேஷ்டர்களை இவர்கள் அவமதிக்கின்றனர். இவர்கள் தரித்திரர்கள். ஆனுல் ஏமாற்றுவதில் நிபுணர்கள். இவர்களின் மத்தியில் சில பிராமணர்களும் கலந்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது. விச்வாமித்ராதிகள் எல்லாம் எந்தப் பிராமண்யத்திற்காகத் தவஸ் செய்தார்களோ அந்தப் பிராமண்யத்தைப் பிறவியினுல் அடைந்தும் சிலர் இந்தப் பாஷண்டிகளின் கூட்டத்தில் கலந்து கொண்டு பாஷண்டிகளாகி விட்டார்கள்.

விசுவாவசு :- ஹரிபக்தர்களுக்குள் வித்தியாசம் ஏது ? என்ன தோஷம் இருந்தாலும் தீபமானது இருளைப் போக்குவது போல ஹரிபக்தி பாபங்களை எல்லாம் விலக்கிவிடும். ஹரிபக்தியானது ஒரே ராகவசரம் ஸப்தஸால விருக்ஷங்களை ஒரே ஒரு மூச்சில் துளைத்ததுபோல பழயபாபங்கள், புதிய பாபங்கள் அஞ்ஞானம் முதலியவற்றை ஒரே சமயத்தில் விலக்கிவிட

265

வல்லது. அஞ்ஞானத்தையும் பாபத்தையும் போக்கடிக்கும் ஹரிபக்தி சர்வ அபீஷ்டங்களையும் கொடுத்து அநுக்கிரஹிப்பதுடன் அமிர்தத்திற்கு ஒப்பான ஆனந்த ரஸத்தை மனத்திற்கு ஊட்டுகிறது. ஸகல க்ஷேமத்தையும் தருகிறது.

இவர்கள் (பைராகிகள்) கங்கை முதலிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து புனிதமானவர்கள். பல க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்வதை வாழ்க்கையின் குறிக்கோளாகக்கொண்டவர்கள். வீடு, வாசல், பெண்டிர், பிள்ளைகள், எல்லாவற்றையும் தியாகம் செய்தவர்கள். தத்துவத்தை ஆராய்ச்சி செய்பவர்கள். இவர்களைப் போற்றுமலிருக்க முடியுமா ?

(தொடரும்)

மதிப்புரை

இறந்தவர்கள் வாழும் நிலையும் பேசும் முறையும்

மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ திருவருள் தவயோக சோமசுந்தரதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் எழுதியருளியது

நாத்திகம் மலிந்து வரும் இந்நாளில் இவ்விதமான அனுபவ உண்மைகளை வெளியிடும் நூல்கள் வெளிவருவது மிக நன்று. இதில் ஆவியைப் பற்றியுள்ள குறிப்புக்கள் விரிவாகஉள்ளன. ஆவி உலகினருடன் தொடர்பு கொள்ளச் சாதனமான ஒன்பதுவழிகளும் அவற்றில் முக்கியமான உய்ஜா போர்டு முறைக்கு விரிவான விளக்கமும் கூறப்பட்டுள்ளன. கனவு, பேய், ஆவியுடல் இவைகளின் உண்மைத்தன்மை முதலியவற்றை நூல்களின் சான்றுமட்டுமின்றி யுக்திகளையும்கொண்டு விளக்கியுள்ளமை காலத்திற்கேற்ற செயலாகும். புதிதாக இம்முறையில் பயிற்சிபெற விரும்புகிறவர்களுக்கு, ஏற்படும் இடையூறு, அதனை நீக்கும்வழி, நடக்க வேண்டிய முறை யாவும் விரித்துரைக்கப்பெற்றுள. ஆவியைப்பற்றிய புத்தகப் பட்டியலும் உள்ளது. ஆசிரியர் தம் அருள்நிலைக்கேற்ப, ஆத்திகத்தைப் பரப்ப இம்முறையை மேற்கொண்டது மிகப்போற்றற்குரியது. மதுரை, திருவருள் தவநெறி மன்றத்தார் (70, தெற்கு ஆவணிமூலவீதி) இதை நன்முறையில் அச்சிட்டுள்ளனர். விலை. ரூ. 1—8—0.

சிரோமணி K. ராஜகோபால சாஸ்திரியார்.

766

மாதொரு பாகன்

வேதாந்த சிரோமணி, திரு. இராஜகோபால சாஸ்திரி அவர்கள்
வடமொழிப் பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

திருஞானசம்பந்தர் முதலிய அடியார்கள் பக்திக்குப் பரவசமாயினர். பக்தியின் மேலீட்டால் ஈசனை அப்பனாகவும் அம்மையாகவும் தலைவனாகவும் பலவாறு பாவித்துத் துதித்து வணங்கினர். பக்தியினால் எழும் சொற்கள் கூறியது கூறலாக வும் இருக்கலாம். வெளிப்படையான பொருளுடையனவாயும் சாத்திரக் கருத்துக்கள் றொதிந்தனவாயும் இருக்கலாம். அவ் விதம் தேவார திருவாசகங்களில் தோடுடைய செவியன் ஆயிழை பாகன். அம்மையப்பன், மாதொருபாகன், மாதொரு கூறன் முதலிய சொற்றொடர்கள் இடப்பக்கம் உமையாகவும் வலப்பக்கம் சிவனாகவும் உள்ள அர்த்த நாரீசுவரனைக் குறிக் கின்றன. ஞானிகள் நோக்கியது அகக்கண்ணால். கவிகளோ தங்களது கற்பனைக்கண்ணால் நோக்குகின்றனர். கேட்பவர்கள் மனம் ஆனந்தவெள்ளத்தில் மூழ்கும்படி சொல்நயம் பொருள் நயம் பொருந்திய சொற்களைக் காவ்ய ரூபமாக வெளியிடு கின்றனர். அவற்றில் சிலவற்றைக் கூறுகிறேன்.

பிறர்க்கு அடிமையாயுள்ளவன் கைகட்டி வாய்புதைத்து நிற்கிறான். ஆனால் எங்கள் ஈசனோ சுவதந்திரன், யாவர்க்கு மீசன். உலக மக்கள் கைகட்டுவதால் தமது அடிமை நிலை உணர்ந்து மனத்தில் துன்பமே யெய்துவர். ஈசனோ மாதை யணைந்ததாலுண்டாமின்பம் பெறுகிறான். கைகட்டுங்கால் வலக்கை இடது புஜத்தின் மேலும் இடக்கை வலது புஜத்தின் மேலும் பதியும், இடப்பக்கம் அம்மை. அப்பனோ வலப்பக்கம். இவ்விரு கைகளும் மறுபக்கமுள்ள புஜத்தில் பொருந்தி இணையும்பொழுது அம்மையும் அப்பனும் ஆலிங்கனம் செய்து கொண்டவர் ஆவர். கைகட்டி ஆனந்தமடையுஞ் ஜோடி நன்மை பயப்பதாகுக.

பொருள்களைப் பல கூறுகப் போடலாம். அப் பகுதி களையும் கூறுக்கலாம். இவ்விதம் கூறுபோட்டுச் சென்றால் ஒரு நிலையில் பிரிக்கமுடியாதபடி சிறிய பொருள் ஒன்றில் முடி

வடையும். அது பரமாணு என்பர் தார்க்கிகர். அதற்கு அவயவம் கிடையாது. ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு பரிமாணம் உண்டு. பரமாணுவின் அளவே மனத்தின் பரிமாணம். ஒரு சரீரத்திற்கு ஒருமனம்தான் உண்டு. காமம் வெகுளி மயக்கம் முதலியன மனத்தின் தொழிலாகும். அருளுதலும் அவ்விதமே. ஆதலால் மற்ற அவயவங்களைப்போலப் பிரிக்கமுடியாத மனம் அம்மையப்பருக்கும் ஒன்றுதான் இருக்கவேண்டும். (அப்பனுடையதோ அம்மையினதோ) அம்மனம் அடிமையாகிய என்னிடம் அருளுடைய தாகுக.

இவர் முதல்வைத்துத் தொழில்செய்தீட்டிய ஊதியத்தை இருவரும் பங்கிட்டுக்கொள்ளுவர். அதுவே நீதியுமாகும். அவர்களில் ஒருவனே முழுலாபத்தையும் எடுத்துக் கொண்டால் பொருத்த மாகாது. எனினும் பங்காளிதானே எடுத்துக் கொண்டான் என்று ஆறுதலடையலாம். தொடர்பற்ற வேறு ஒருவன் எடுத்துக்கொள்ளுவது நியாயமாகுமா? அம்மையே! உங்களிருவருக்கும் பொதுவான நெற்றிக்கண்ணால் காமன் எரிக்கப்பட்டான். காமாரி என்ற பெயர் ஈசனையேஅடைந்தது. உன்னை யடைய வில்லை. ஒருபாக முடையவனே முழுலாபத்தையும் அடைந்தான். ஆனால் உனக்குமட்டுமன்றோ சொந்தமானது இடது திருவடி? இக்காலன்றோ காலனைக்காய்ந்தது? காலாரி என்ற பெயரும் புகழும் உன்னைத்தானே சேரவேண்டும்? ஈசனை யாது காரணம்பற்றிச் சேர்ந்தது? பயங்களில் மிகப் பெரியன ஜனன பயமும் மரண பயமுமாம். காமன் ஜனன பயத்திற்கும் காலன் மரண பயத்திற்கும் காரணம். அவ் விரு காரணங்களையும் நீங்கிய அம்மையப்பனே யருளுக.

தம்பதி என்றசொல் மணவினை முடிந்த ஆண் பெண் இருவரையும் சேர்த்து ஒருங்கே சொல்லும். இருவரை உணர்த்துவதால் அச்சொல்லை இருமையில்தான் உபயோகிக்க வேண்டும். ஆனால் ஈசனுக்குள்ளது ஒரே சரீரம். ஆதலால் தம்பதி என்றசொல்லை ஒருமையில் உபயோகிக்க இலக்கணம் இடந்தரவில்லை. இருமையில்உபயோகிக்கப்பொருட்பொருத்தமில்லை. ஆதலின் செயப்படுபொருளைக் கூருமலேயே விரும்பிய பொருளைப்பெற வணங்குகின்றேன் என்றே கூறினர்.

இவ்விதமே ஒருவன் என்றசொல் ஆண்பாலையும் ஒருத்தி என்றசொல் பெண்பாலையும், ஒன்று என்றசொல் அஃறிணை யையும் குறிப்பதால் இம்மூன்று சொற்களாலும் ஈசனைச் சொல்ல முடிய வில்லை. எவ்விதம் கூறுவது எனக் கலக்கம் ஏற்பட்டபொழுது, ஒருவர் என்றசொல் உயர்திணை இருபாலை யும் ஒருமையையும் உணர்த்துமெனக் கூறிய இலக்கணம் கலக்கத்தை நீக்கிற்று. இவ்விதமுள்ள இறைவன் இன்ப மளிப்பவராகுக. குமரகுருபரர் (அறுவருக்கும் உலகவாழ்வு எனும்) பாடல் காண்க.

நீறணிந்து வெண்ணிறங் கொண்டது வலதுபாகம். கால கூட விஷமுண்டதால் கறைமிடற்றன் ஆயினன். இடப்புறம் அம்மையினது. இயற்கையில் மரகதம் போன்ற நிறமுடையது. கழுத்திலுள்ள விஷத்தின் கருமையான காந்தி வலப்புறத்தில் பரவியவுடன் வலப்புறமும் பெண்ணுக மாறுகின்றதோ என ஐயமளிக்கும் சிவசரீரம் மங்களம் கொடுப்பதாகுக.

சிங்காரரஸரும் (இன்பச்சுவை) என்னும் கடலில் அம்மை யப்பரின் உடல் ஒரு தோணிபோலுள்ளது. ஒருவருக் கொருவ ரிடம் கொண்ட அன்பு என்னும்பாரம் அந்தத் தோணியில் மிகுந்தபொழுது, அத்தோணி பாதிகடலில் அமிழ்ந்தது. ஆதலின் அம்மையின் உடலிற் பாதியும் அப்பனின் உடலிற் பாதியுமே தெரிகிறது. மற்றிருபாதிகளும் அன்புக்கடலின் வெள்ளத்தில் மறைந்தனபோலுள்ள செல்வன் செல்வம் பயப்பாராக.

இவைகளில் முதல் நான்கும் நீலகண்ட தீக்ஷிதரின் சுலோகங்கள். ஐந்தாவது குமரகுருபர சுவாமியினது. ஆருவது உத்ப்ரேக்ஷாவல்லபன் என்ற கவியினது. ஏழாவது வைரந்த கவியின் சுலோகம். இவ்விதமான கவிகளின் சொற்கள் சித்தத்தில் சிவனை நிறுத்தப் பெரிதும் பயன் படுவன.

269

சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய பாடல்

(திருவெங்கைக் கலம்பகம் 7)

படுமத் தமிழுக் குவந்தவிறை விடுமத் தமிழுக் குவந்தவிறை
பண்டங் கரிய வடிவாமன் கண்டங் கரிய வடிவாமன்
சடையற் படுமம் புயனிசையான் ஞெடையற் படுமம் புயனிசையான்
சம்பு வனமாக் குணர்வாக னம்புவனமாக் குணர்வாகன்
கடலைக் கலக்கு மலைவில்லா னுடலைக் கலக்கு மலைவில்லான்
கங்கைப் பதியன் பரையானுன் வெங்கைப் பதியன் பரையானுன்
அடலைப் பரத்தங் கணையெய்தா னுடலைப் புரத்தங் கணையெய்தான்
அன்பி னிகழ வணங்கீரே துன்பி னிகழ வணங்கீரே.

1. படும் அர்த்தம் இழுக்கு உவந்த - தோன்றுகின்ற பொருட் குற்றத்தைப் புலவர்கள் உவத்தற்குக் காரணமாகிய, இறை விடும் அ தமிழுக்கு - விடையை எதிர்விடுத்தற்குரிய அத்தமிழ்ச் செய்யுளாகிய "கொங்குதேர் வாழ்க்கை" என்பதை விளக்கும்பொருட்டு, வந்த இறை - புலவராக எழுந்தருளிய சிவபெருமான்.

படும் அர்த்தம் இழுக்குவந்த சொற்களை நீங்கிய அந்த மூவர் தமிழுக்கு உவந்த இறைவன்.

2. பண்டு-முன்காலத்தில், அம் கரிய வடிவு ஆம் மன்- அழகிய கரிய உருவத்தையுடைய திருமாலினது, கண் தங்கு - கண் தங்கப்பெற்ற, அரிய அடி வாமன் - அரிய திருவடியையுடைய அழகன்;

பண் தங்கும் அரிய அடி(மலரை)யுடைய வாமன் என்னும் பெயரினன். கண்டம் கரிய வடிவாம் மன்.

3. சடையில் படும் அம் புயல் நிசையான் - சடாபாரத்தில் ஒலிக்கின்ற அழகிய மேகமாகிய இராத்திரியையுடையவன்.

சடையில் படும் அழகிய புஜத்தன். இசையான் அல்லது நிசையான்.

770

4. தொடையில்படும் அம்புயன் இசையான் - மாலையிற் பொருந்துகின்ற அம்புயத்தின் மீதுள்ள பிரமனது போற்றுதலை உடையான்;

தொடையிற்படும் தாமரையானல் காணப்படுதற்கு இசையப்பெருதவன்; காணஇசையாதவன்.

5. சம்பு வனம் மா குணர் வாகன் - நரிகளாகிய அழகிய குதிரைகளைக் கொணர்ந்த அழகன்;

6. அம் புவனம் ஆக்கு உணர்வு ஆகன - அழகிய புவனங்களைத் தோற்றுவிக்கும் ஞானமே திருமேனியாக உடையவன்;

7. கடலை கலக்கும் - முன்பு கடலைக் கலக்கிய, மலைவு இல்லான் - மேரு மலையாகிய வில்லையுடையவன்;

கடலைக் கலக்கும் மலையை வில்லாக உடையான் உடலைக்கலக்கும் மலைவு இல்லான். உடலைக்கலக்கும் மேனியைக்கலந்திருக்கும். மலைவில்லான் மலையாகிய வில்லை உடையவன்.

8. கங்கைபதி - கங்கா நதிக்குத் தலைவன்.

9. அன்பரை ஆனுன் - தன் அன்பரை நீங்காதவன்.

கம் - தலைமேல், பதி - குவித்துப் பதிக்கும் அன்பரை நீங்காதவன்.

10. வெங்கைபதியன்-திருவெங்கைத் தலத்தை இடமாக உடையவன்;

11. பரைஆனுன் - பராசக்தியையும் இடபத்தையும் உடையவன்;

12. அடல் ஐ புரத்து அம் கணை எய்தான் - வலியையும் வியப்பையும் உடையதிரிபுரங்களின்மேல் அழகிய கணையை எய்தவன்;

13. உடல் ஐ புரத்து அங்கு அணை எய்தான் - மாறுபடு கின்ற கோழையையுடைய உடலாகிய அவ்விடத்தே பொருந்து தலை அடையான்;

14. அன்பின் நிகழ வணங்கீர் - அன்பினால், உங்கள் செயல் நிகழும்படி வணங்குவீராக.

15. துன்பின் இகழ அணங்கீர் - அங்ஙனம் செய்யின் நீவிர் துன்பத்தில், பிறர் இகழும்படி வருத்தப்படீர்.

விசேடக்குறிப்பு

1. படும் - தோன்றும். கூந்தலுக்கு இயற்கைமணம் உண்டென்னும் பொருள்பற்றியதடை நிகழ்த்தப்பட்டதாதலின், அத்தம் இழுக்குவந்த வென்றார். அத்தம் இழுக்கு உவந்ததமிழ், இறைவிடும் அத்தமிழ் எனத் தனித்தனியே கூட்டுக. "கொங்கு தேர் வாழ்க்கை" எனவரும் செய்யுளுக்கு நக்கீரர் குறைகூற அதனை நீக்கும்பொருட்டு ஸ்ரீ சோமசுந்தரக் கடவுள் புலவராக எழுந்தருளிய வரலாற்றை இது குறிக்கின்றது.

2. பண்டென்பது கண்தங்கிய காலத்தைச் சுட்டியது. கண் தங்கு அரிய அடி வாமனென்பதற்கு, அங்ஙனம் கண் தங்கப்பெறினும் அத்திருமாலுக்கே அரிதாகிய அடியையுடையா னென்னும் பொருட்குறிப்புக்கொள்ளுதலும் ஆம்; "கண் வைத்துங்காணுக் கழலினான்" என்பதை எண்ணுக.

3. 'சடையற்படும்' என்னும் பாடத்திற்கு, சடையி னிடத்தே இருள்தோன்றுகின்றவெனப் பொருள் கொள்க. பின் மடக்கைத் தொடையலெனக்கொண்டு மாலையெனப் பொருள் செய்க. மேகத்திற்கு இரவின் தோற்றம் உவமை. நிசை - நிசா என்னும் ஆரியச் சொல்லின் விகாரம்.

4. தொடயிற்படும் அம்புயமென்றது சாதிபற்றிய அடை

3-4. சடையில் ஒலிக்கின்ற நீரையுடைய புயலாகிய நிசையானெனவும், மாலையிற்பொருந்திய அழகிய புயத்தை யுடையவனெனவும் பொருள் கொள்ளுதலும் ஒன்று. அம் புயல் - நீரையுடைய மேகம்.

5. இது நரிபரியாக்கிய திருவிளையாடலை நினைந்தது. கொணரென்றது குணரெனப் போலியாக நின்றது, குடை - கொடை, துடை - தொடை என்பதுபோல்.

6. அம்புவனம் ஆக்குகின்ற உணர்வையுடைய திரு வுள்ளத்தையுடையானென்பதும் பொருந்தும்; ஆகம்-நெஞ்சு.

9-11. அன்பர் ஐ - அன்பர்க்குத் தலைவன்; ஆனன் - இடபத்தை உடையவன்; வெங்கை பதியன் - திருவெங்கைப் பதியிலே எழுந்தருளியிருப்பவன்; பரை ஆனன் - பராசக்தியை நீங்காதவன் எனப் பொருளுரைத்தலும் ஆம்.

12. அடலை புரத்து - சுடுகாடுபோன்ற திரிபுரத்தில் என்பதும் அமையும். கணைதிருமாலாதலின் அம்கணையென்றார். கணையெய்து புரமெரித்ததாகவும் கூறுதல் மரபு. * இதனைத் தேவாரத்திற் பரக்கக் காணலாம்.

13. புரம் - உடல். அணை - அணைதல். முதனிலைத் தொழிற் பெயர்.

15. அணங்கீர் - அணங்கப்படீர்.

இஃது என் வேண்டுதலுக்கு இணங்கிப் புகழுடல் பெற்ற டாக்டர். தாக்ஷிணாத்திய கலாநிதி உ. வே. சாமிநாதையர் அவர்கள் அறிவித்த பொருள்.

–துணையாசிரியர்.

223

வடமொழிச் செய்யுட்கணங்கள்

பன்மொழிப்புலவர்
வித்துவான், திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள்,
சென்னைப் பல்கலைக் கழகத்து ஓய்வுபெற்ற ஆராய்ச்சிப் பேராசிரியர்.

செய்யுளிலக்கணத்தில் முதற்கண் அறியவேண்டுவது லகு குருக்களின் இலக்கணம்: குற்றெழுத்து லகு என்று வழங்கப்படும். அஃது ஒருமாத்திரை அளவினை உடையது. லகுவினை 'ல' என்று கூறுவர். அதனைக் குறித்தற்கு இடும் அடையாளம் நேர்கோடு. நேர்கோட்டை 1 இவ்வாறு மேலிருந்து கீழ் இழுத்தலும் — இவ்வாறு படுக்கைக்கோடாக இழுத்தலும் உண்டு. இனி, குருவினை நோக்குவோம்.

நெட்டெழுத்து குரு ஆகும். அதுவே யன்றி, அநுஸ்வாரத்தோடு கூடிய குறிலும், விஸர்க்கத்தோடு கூடிய லகுவும் குரு ஆகும். இனி மெய்யெழுத்துக்களோடு கூடியுள்ள சொற்களில் அம்மெய்யெழுத்துக்கு முதலில் இருக்குங் குறில் குருவாகும். அடியின் இறுதியில் இருக்குங் குற்றெழுத்தினைக் குரு ஆகவுங் கொள்ளலாம். குருவினை 'க' என்று வழங்குவர். அதற்கு இடும் அடையாளம் வக்ரமான (வளைவாகிய) கோடு. அதனை S, U இவ்விரண்டு விதமாகவும் இடுவர்.

குருவின் வகைகட்கு உதாரணம்:

1. நெடில் குரு ஆதற்கு — மா
2. அநுஸ்வாரத்தோடு கூடிய லகு ,, அం
3. விஸர்க்கத்தோடுகூடிய ,, ,, அ:
4. மெய்யெழுத்தோடு கூடிய சொற்களில் மெய்யெழுத்துக்கு முதலிலிருக்கும் லகு } விஷ்ணு

ஷ்ணு என்பது ஸம்யுக்தாக்ஷரமாகக் கொள்ளப்படுதலின் அதற்கு முதலில் உள்ள வி குரு ஆயிற்று. ஈண்டு ணு - லகுவே.

5. அடியின் இறுதியிலுள்ள குறில் ,,

: 'தஸ்யா : குரங்யாஸபவித்ரபாம்ஸு'

இதில், 'ஸு' குறிலாயினும் குருஆகக் கொள்ளப்படும்.

774

இனி, குருவும் லகு ஆதல் உண்டு. அடியின் முதலில் ஸம்யுக்தாக்ஷரம் இருப்பின், அதற்கு முதலில் (மேலடியின் ஈற்றில்) இருக்குங் குறில் குரு ஆதல் இல்லை. உதாரணம்:

'அல்பவ்யயேந ஸுந்தரி! க்ராம்யஜநோமிஷ்ட மஸ்நாதி' ஈண்டு, 'க்ரா' என்னும் ஸம்யுக்தாக்ஷரம் அடியின் முதலில் இருத்தலின், மேலையடியிலுள்ள 'ரி' குரு ஆயிற்றிலது.

ப்ர, ஹ்ல என்னும் ஸம்யுக்தாக்ஷரம் வருமிடத்தில் மேலுள்ள குறில் குரு ஆதல் இல்லை என்பது கவிப்ரயோகங்களால் தெரிகின்றது.

'க்ருஹீதப்ரத்யுத்கமநீயவஸ்த்ரா' (குமார. 7:11)
'ப்ராப்யநாபிஹ்லதமஜ்ஜநமாஸு' (ஸி. வ. 10:60)
'தவஹ்லியா பஹிலயோமம ஹியீரபூத்'

என்பன காண்க.

இனி, குரு லகுக்களின் மயக்கத்தான் ஆகுங் கணங்களை நோக்குவோம். குருவோ லகுவோ அவையிரண்டுமோ மூன்று கூடியது கணம் ஆகும். ஆகலின், கணம் எட்டு ஆகும்.

அவையாவன:—

1.	மூன்றும் குருவாயிருப்பது—	ப	ப	ப	ம	கணம்
7.	முதலில் குருவினையுடையது	ப	—	—	ப	,,
6.	இடையில் ,,	—	ப	—	ஜ	,,
4.	கடையில் ,,	—	—	ப	ஸ	,,
8.	மூன்றும் லகுவாயிருப்பது	—	—	—	ந	,,
2.	முதலில் லகுவினையுடையது	—	ப	ப	ய	,,
3.	இடையில் ,,	ப	—	ப	ர	,,
5.	கடையில் ,,	ப	ப	—	த	,,

எண்ணிட்டுக் காட்டிய முறையிற் கூறப்படுதலும் உண்டு.

இனி, வடமொழியில் இவ் அக்ஷரகணங்களே யன்றி மாத்திரைக் கணங்களும் உள. அவை மாத்ராவ்ருத்தத்தில் வரும்.

நாலுமாத்திரை ஒரு கணமாகக் கொள்ளப்படும். ஆகலின், அக்கணங்கள் ஐந்து வகை ஆகும்.

1.	ஸர்வ குரு	ப ப	தேமா என்பதுபோல
2.	ஆதி குரு	ப — —	காலடி ,,
3.	மத்ய குரு	— ப —	கடாரி ,,
4.	அந்த குரு	— — ப	புளிமா ,,
5.	ஸர்வலகு	— — — —	மணிமுடி ,,

இவற்றை ஸர்வகுரு என்னுந் தொடக்கத்தவாயே வழங்குவர். இக் கணங்கட்கு வேறு பெயர் இல்லை. ஆயின், இவற்றுள் 2, 3, 4 — ஆங் கணங்கள் மேற்குறித்த அக்ஷர கணங்களுள் பகணம் ஜகணம் ஸகணம் ஆகும்.

இவற்றைத் தமிழிலக்கணத்தின்படி நோக்கின்,

1.	ஸர்வகுரு	ப ப	நேர்நேர் ஆகும்
2.	ஆதிகுரு	ப — —	நேர்நிரை ,,
3.	மத்யகுரு	— ப —	நிரைநேர் ,,
4.	அந்தகுரு	— — ப	,, ,,
5.	ஸர்வலகு	— — — —	நிரைநிரை ,,

ஆகவே இயற்சீர் நான்கும் வடமொழி மாத்ரா கணங்களில் உள்ளன என்னலாம். ஆயின், நேர் நிரைச் சீரிலுள்ள நிரையசை இரண்டு குறிலணைந்ததாயிருத்தல் வேண்டும். நிரைநேர்ச் சீர்வகை இரண்டனுள் பின்னதிலுள்ள நிரையசையும் அவ்வாறே இருத்தல் வேண்டும்; முன்னதிலுள்ள நேரசை தனிக்குறிலாயிருத்தல் வேண்டும். நிரைநிரைச்சீரில் நிரை யசைகள் இரண்டு குறில் இணைந்தனவாயே இருத்தல் வேண்டுக. இவை உளங்கொளற்பாலன.

ப்ராக்ருதச் செய்யுளிலக்கணம்

ப்ராக்ருதத்தில் வடமொழி அக்ஷரகணங்களேயன்றி மாத்திரைக் கணங்களும் உள. 6 மாத்திரைக் கணம் முதல் 2 மாத்திரைக் கணம் ஈருக ஐந்து வகையாக மாத்திரைக்கணங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. இவ்வைந்து வகைக் கணங்கட்கும் டகார வர்க்கத்தின் ஐந்தெழுத்துக்கள் பெயராகக் குறிக்கப் பட்டிருக்கின்றன. ஆகலின்,

6	மாத்திரைக்கணங்கள்	ட(1)	கணம் என்றும்
5	,,	ட(2)	,,
4	,,	ட(3)	,,
3	,,	ட(4)	,,
2	,,	ண	,,

வழங்கும். இவற்றிற்கு முறையே ச(2), ப, ச, த, த(4)என்றும் எழுத்துக்களைக் குறித்தலும் உண்டு. இனி,

6	மாத்திரைக்கணங்களில்	13	வகையும்
5	,,	8	,,
4	,,	5	,,
3	,,	3	,,
2	,,	2	,, உண்டு.

ஆறு மாத்திரைக் கணத்தின் 13 வகையும் அவற்றின் பெயரும்.

1.	ப ப ப	ஹர	குரு குரு குரு	எழுத்து	3
2.	– – ப ப	ஸஸீ	லகு லகு குரு குரு	,,	4
3.	– ப – ப	ஸூர்ய	லகு குரு லகு குரு	,,	4
4.	ப – – ப	ஸக்ர	குரு லகு லகு குரு	,,	4
5.	– – – – ப	ஸேஷ	லகு லகு லகு லகு குரு	,,	5
6.	– ப ப –	அஹி	லகு குரு குரு லகு	,,	4
7.	ப – ப –	கமலம்	குரு லகு குரு லகு	,,	4
8.	– – – ப –	ப்ரஹ்மா	லகு லகு லகு குரு லகு	,,	5
9.	ப ப – –	கலி	குரு குரு லகு லகு	,,	4
10.	– – ப – –	சந்த்ர	லகு லகு குரு லகு லகு	,,	5
11.	– ப – – –	த்ருவ	லகு குரு லகு லகு லகு	,,	5
12.	ப – – – –	தர்ம	குரு லகு லகு லகு லகு	,,	5
13.	– – – – – –	ஸாலீகர	லகு லகு லகு லகு லகு லகு	,,	6

ஐந்து மாத்திரைக்கணத்தின் 8 வகையும் அவற்றின் பெயரும்.

1.	– ப ப	இந்த்ராஸனம்	லகு லகு குரு	எழுத்து	3
2.	ப – ப	ஸூர	குரு லகு குரு	,,	3
3.	– – – ப	சாப	லகு லகு லகு குரு	,,	4
4.	ப ப –	ஹீர	குரு குரு லகு	,,	3
5.	– – ப –	ஸேவா	லகு லகு குரு லகு	,,	4

6.	– ப – –	குஸுமம்	லகு குரு லகு லகு	,,	4
7.	ப – – –	அஹிகணம்	குரு லகு லகு லகு	,,	4
8.	– – – – –	பாபகணம்	லகு லகு லகு லகு லகு	,,	5

நாலுமாத்திரைக் கணத்தின் 5 வகையும் அவற்றின் பெயரும்.

1.	ப ப	கர்ண	குரு குரு	எழுத்து	2
2.	– – ப	கரதலம்	லகு லகு குரு	,,	3
3.	– ப –	பயோதர	லகு குரு லகு	,,	3
4.	ப – –	த்ருவசரண வஸு,சரண	குரு லகு லகு	,,	3
5.	– – – –	விப்ர	லகு லகு லகு லகு	,,	4

மூன்று மாத்திரைக்கணத்தின் 3 வகையும் அவற்றின் பெயரும்.

1.	– ப	த்வஜம்முதலியன	லகு குரு	எழுத்து	2
2.	ப –	ஸுரபதிமுதலியன	குரு லகு	,,	2
3.	– – –	பாவமுதலியன	லகு லகு லகு	,,	3

இரண்டுமாத்திரைக் கணத்தின் 2வகையும் அவற்றின் பெயரும்

1.	ப	நூபுரம்முதலியன	குரு	எழுத்து	2
2.	– –	நிஜப்பிரியகாமுதலியன	லகு லகு	,,	2

மதிப்புரை

இசைத் தமிழிற்குப் பயன்படக்கூடிய பரத சங்கிரணம் அண்ணுமலை யூனிவர்சிட்டியிலும் சச்சபுடவெண்பா தருமபுர ஆதீனத்திலும் வெளியிடப் பட்டுள்ளன. தாள சமுத்திரம் தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடாக வருகிறது. இதில் தாளத்தின் தசப் பிராணன், அஷ்டகண லக்ஷணம், தேவதை அங்கதேவதை முதலியனவும் 108 தாளங்கள், அவற்றின் பெயர் லக்ஷணம் இவை யாவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆதிப ரதம் பரதார்ணவம் என்ற வடமொழி நூல்களிலிருந்து 108 தாளங் களுக்கும் மேற்கோளாக லக்ஷணங்களும் கூறப்பட்டுள்ளன. முகவுரை ஒரு தனியான ஆராய்ச்சி நூல் எனக்கூறும் வகையில் விரிவாக அமைந் துள்ளது. பிரஸ்தாரத்திற்குப் பயன் படக்கூடிய குறுக்கு வழிகள் உதாரணங்களும் விரிவாக முகவுரையில் உள்ளன. ஆரம்பத்திலேயே இரண்டோர் எழுத்துப் பிழைகளும், சீர்சரியாகப் பிரிக்கப்படாமையும் இருப்பினும், முகவுரையும் அனுபந்தமும் நூலை மிக அழகுபடுத்துகின்றன. நவசந்தி தாளங்கள், நட்டுவ லக்ஷணம் முதலியனவும் வருங்காலத்தில் ஆராய்ச்சிக்கும் பயன்படக்கூடிய பலவும் கூறப்பட்டுள்ளன. நல்லதொரு வெளியீடு விலை ரூ. 3—0—0.

K. ராஜகோபால சாஸ்திரியார்

அறிவியல்

குருட்டு நம்பிக்கை

கீ. இராமலிங்க முதலியார் M. A., அவர்கள்
கீழைக்கலைக் கல்லூரி முதல்வர், தருமபுரம்.

பெண்ணும் மாப்பிள்ளையும் மணஅறையில் வந்து உட்கார்ந்து விட்டார்கள். மண ஆசிரியர் அதற்கு முன்பே வந்து அமர்ந்திருக்கிறார். பெண் மாப்பிள்ளைக்கு எதிரே புது மண்குடங்களுக்கு மஞ்சள் குங்குமம் இட்டு, அவற்றில் நீரை நிரப்பி வைத்திருக்கின்றனர். குடவிளக்கு ஒன்றும் சுடர் விட்டு எரிகிறது. கிளைவிளக்குகள் அழகுசெய்கின்றன. முளைத்த நவ தானியங்கள் சிறு கலங்களில் பெய்து வைக்கப் பெற்றிருக்கின்றன. அடியில் கொட்டிக்கொண்டு போகாமல் இருக்கக் கலங்களில் வைக்கோல் சுருட்டித் திணித்திருக்கின்றனர். பெண் மாப்பிளைக்கு நேர் எதிரே மட்குடங்களுக்கும் விளக்குகளுக்கும் இடையே ஓர் அரசமரக்கிளை நடப்பெறுகிறது. அதை ஒரு சடங்காகச் செய்கிறார்கள். மூன்று கட்டுக் கழுத்தியர் அக்கிளைக்கு வழிபாடுசெய்து, அதனைத் தூக்கி நிறுத்துகிறார்கள். அரசக்கிளையோடு மூங்கிலும் இணைந்திருக்கிறது. மண அறையின் நான்கு கால்களிலும் வாழைமரங்கள் குலைகளோடு கட்டப்பெற்றிருக்கின்றன. வாழைக்குலைக்கு மேலே தென்னங்குலை ஈச்சங்குலை பனங்குலை முதலியவும் கட்டித் தொங்கவிடப் பெற்றிருக்கின்றன. மண அறையின் மேல் விளிம்பில் மாவிலைத் தோரணம் மிளிர்கிறது. அத்தோரணத்திலிருந்து மல்லி முல்லை மலர்ச்சரங்கள் நாற்புறமும் தொங்குகின்றன. இந்தக் கற்பனைகளால் மணஅறையே பலவகை மரங்களும் பூங்கொடிகளும், நிறைந்த ஒரு சோலைபோல விளங்குகிறது.

மணச்சடங்கு விரைவாக நடந்துகொண்டு இருக்கும் போதே மணவிழாவுக்கு வந்திருக்கின்றவர்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டே யிருக்கிறார்கள். ஏதேதோபேச்சுக்கள். அப் பேச்சுக்களில் மணஅறை அமைப்பைப்பற்றிய பேச்சும் இடைநுழையாமல்இல்லை வயதானவர்கள் மணஅறை

அழகுசெய்யப் பெற்றிருப்பதைப் பாரரட்டிப் பேசுகின்றூர்கள். முறைப்படி யாவும் அமைந்திருப்பதற்காக அவர்களது மண நிறைவைத் தெரிவித்துக் கொள்ளுகிறூர்கள். இருந்தாலும் அவர்களிலும் குறை கூறுதவர்கள் இல்லை.. பாக்குக்குலே கட்டவே யில்லையே யென்றூர் ஒருவர் கிளைவிளக்கு இன்னும் கொஞ்சம் பெரிதாயிருக்கவேண்டும் என்றூர் மற்றெருவர். அரசங்கிளையோடு கட்டிய மூங்கிற்கொம்பு பச்சையாக இல்லையே என்றூர் இன்னெருவர். மணஅறை அமைய வேண்டிய முறையில் அமைந்திருக்கிறது என்றவர்களுக்கே இவ்வளவு குறைகள்.

ஏன் இந்தக் குருட்டுப் பழக்கங்கள்? இந்த இருபதாம் நூற்றூண்டில் கூடவா இக்குருட்டு நம்பிக்கைகளுக்கு இடந் தருவது! மாப்பிள்ளை பல்கலைக்கழக இரட்டைப்பட்டம் பெற்ற வர். பெண்ணும் சிறப்புப்பட்டம் பெற்றவள். மணமக்களின் பெற்றேரும் படித்தவர்கள். அறிவார்ந்த முறையிலே பலரும் போற்ற அரச அலுவல்களிலே இருப்பார்கள். இவ்வளவு அறிவு நிறம்பிய குடும்பமாக இருந்தும் இன்னமும் இப் பழங்காலக் குருட்டு வழக்கங்களை ஏன் கட்டிக்கொண்டு அழவேண்டும்? என்ற வகையில் பேசிக்கொள்ளுகிறவர்களும் அத் திருமணக் கூட்டத்திலே இல்லாமல் இல்லை. அமைந்திருந்த மணஅறை மிகவும் பொருத்தமானதுதான் என்று எண்ணிக்கொண்டிருந்த வர்களில் சிலர்கூட இத்தகைய குறை கூறலைக் கேட்டதுமே. ஆமாம், ஏன்இந்தப் பழங்காலப் பழக்கங்கள் என்று எண்ண லானுர்கள். அவ்வளவு விறுவிறுப்பாக இருந்தது குறைகூறிய வர்களின் பேச்சு.

மணவிழா முடிவடைந்தது. கடைசியில் மண ஆசிரியர் எழுந்து நின்று மணமக்களை வாழ்த்த முற்பட்டார். இந்த அழுக்கு மூட்டையின் பேச்சையும் கொஞ்சம் கேட்க வேண்டுமா என்று எண்ணிய சில குறைகூறிகள்கூட, அவரது பேச்சின் வளமையையும் இனிமையையும்கேட்டதுமே உன்னிப்பாக செவிசாய்க்கலானுர்கள். அவருடைய வாழ்த் துரையில், மணஅறையின் அமைப்பைப்பற்றியும் சில சொன் ஞர். மணமக்களுக்கு எதிரே நிறை குடமும் சுடர் ஒளியும் வைப்பது அவர்களுடைய வாழ்வு நிறைவுடைய தாகவும் ஒளி

180

யுடையதாகவும் இருக்கவேண்டும் என்பதற்கு அடையாள மாகும். அழுக்குப்பானை, உடைந்தகுடம், காலிஏனம், இவை குறை நினைவை உண்டாக்கும். புதுப்பானை மஞ்சள் குங்குமத் தோடு மிளிர்ந்துகொண்டு நிறைய நீர்கொண்டதாக அமைவது மணமக்களுக்கு நிறைமனத்தை அளிக்கும். விளக்குகளும் அப்படியே. இருட்டைப் போக்குவதற்காகமட்டும் நாம் விளக்கை ஏற்றுகிறோம் என்று சொல்வதாகாது. அழகு இன்பம் இவற்றைக் குறிப்பது ஒளி. சிறப்பானவிழாக்களில் ஒளி அலங் காரம் செய்யும் வழக்கமில்லையா? மணமக்களின் வாழ்வில் ஒளி சிறக்கவேண்டும் என்ற கருத்தை மணமக்களுக்கு அறி வுறுத்திக் கொண்டிருப்பன அவர்கள் எதிரே ஒரே சுடர்விடும் விளக்குகளாகும். மேலும் உடனடியானபிறிதொரு நன்மையும் உண்டு. மணஅறை ஓலையால் ஆனது. விளக்குகள் பல உள. நெருப்புப் பிடித்துவிட்டால் என்ன செய்வது? குடங்களில் நீரும்அக்குடங்களுக்கு அடியில்மணலும்,நெருப்பையணைக்கப் பயன்படுதற்கு உரிய முறையில் அருகேயே வைக்கப்பெற்று இருக்கின்றன. ஆனால் தீப்பிடிப்பதும் தீ அணைப்பதற்கு அந் நீரும்மணலும் பயன்படுவதும்எப்போதும் நேர்ந்ததில்லை. நீரைக் கிட்டேவைத்துக்கொள்ளாமல் தீயை உண்டாக்குவது எப்போ தும் நமது வழக்கமல்ல. சாம்பிராணி போடவேண்டும். தீபாராதனை செய்யவேண்டும், என்றால், ஒரு குவளையில் நீரை வைத்துக்கொண்டபின்பே அங்ஙனம் செய்கிறோம். தனியாக நீர் என்று வெளிப்படச் சொல்லாமல் தூப தீபம் முடிந்ததும் நீர் விளாவுதல் என்ற ஒரு சடங்கை வைத்து விட்டிருக்கிறோம். இறந்தவரை எரிக்கும்போதும், தோள்மீது குடத்தில் நீரை வைத்துக்கொண்டு, சுற்றிவரும்போதே குடத்தைப் பொத்தல் செய்து சுற்றியும் நீர் ஒழுகவைக்கும் வழக்கமும் நமது முன்னோர்களுடைய அறிவுடைமையை விளக்கும். நிற்க மண மக்களுக்கு எதிரே நவதானிய முளைகள் இருப்பது, அவர்கள் வாழ்வில் ஒன்று பலவகை முளைத்துப் பல்கி விளங்கவேண்டும் என்ற நிலையை எழுப்புவதாகும். இம் முளைக்கலங்களை முளைக் கும் இளஞ் சிறுமிகள் கையிலேகொடுத்து, அவர்கள் அவற்றை முன்னே ஏந்திச்செல்ல அவர்களுக்குப் பின்னே பெண்ணும் மாப்பிள்ளையும் மண அறையைச் சுற்றிவரும் வழக்கமும் இக் கருத்தை விளைவிக்கவேயாகும். முளையேந்தும் இளஞ் சிறுமி களுக்கு முன்னே விளக்கையேந்தி ஒருபெண் போவதுமுண்டு

அதுவே மணமக்களின் வாழ்க்கை ஒளிவிளக்கு. அவ் வொளி விளக்கு வழிகாட்ட, அவர்கள் இன்பவாழ்வு வாழவேண்டு மென்பது கருத்து.

மணஅறையே ஓர் அழகிய பூஞ்சோலையாக ஆக்கப் பெற்றிருக்கிறது. நமது முன்னோர்கள் மிகப்பழங்காலந்தொட்டு ஒரு பூஞ்சோலையிலேயே காதல்செய்தார்கள். ஒருவன் ஒருத்தியை அச்சோலையிலேயே கண்டு மனம்பறிகொடுத்தான். அப்படியே அவளும் அதுவரை எந்த இளைஞன்பாலும் சென்றி டாத அவள் உள்ளம் இன்று திருவருள் செயலாய் முன்னை வினைப் பயனாய் ஒருவனைக்கண்டதுமே உள்ளம் அவனிடம் பறிசென்றது. இருவருக்கும் காதல் அச்சோலையிலே வளர் கிறது. பூஞ்செடிகளில் ஊஞ்சல்கட்டி யாடி அவர்கள் ஊச லாடும் இரு உள்ளங்களையும் அன்பினால் பிணிக்கிறார்கள். பின்பு பெற்றோர் அவர்களது ஈடுபாட்டை அறிந்து எல்லோரும் அறிய மணஞ்செய்து வைக்கிறார்கள். முதல்பகுதி களவு என்றும் பின் மணஞ்செய்யும் பகுதி கற்பு என்றும் பழைய இலக்கியங்களிலும் இலக்கணங்களிலும் சொல்லப்பெற்றிருக் கின்றன. நமது முன்னோர் மரபை மறவாமல் களவு கற்பு இரண்டையும் ஒருசேரப் பெறுவதற்கு அடையாளமாக மண அறையில் அமர்த்தி மணச்சடங்கு செய்கிறோம். மரங்களில் மன்னன் அரசமரம் நெடுநாள் வாழ்வுடையது. மூங்கில் ஒன்று பலவாகப் பெருக்கிக் குடும்பம்போல வளர்வது. மணப்பூஞ் சோலையிலே இவற்றைக் கட்டுக் கழுத்தியர் மணமக்கள் கண்முன்னே நிறுத்துவது எவ்வளவு பொருத்தமான செயல்!

இவ்வாறாக மண ஆசிரியர் விளக்கிச் சொன்னபின், பலர் உள்ளங்களில் முளைத்திருந்த குருட்டு நம்பிக்கைகள் ஓடி ஒளிந்தன. இவை குருட்டு நம்பிக்கை யாகுமா என்று கேட்கலாயினர். இவ்வளவு கூறியும் விளக்கம் அடையாத குருட்டுக் கருத்துக்காரர்கள் சிலர் அம்மண விழாவில் இருக்கத்தான் செய்தார்கள். செம்பை எவ்வளவுதுலக்கினாலும் களிம்பு அதில் இருந்துகொண்டுதான் இருக்கிறது. யார்அதற்கு என்னசெய்ய முடியும்? அவர்கள் நோக்கு அவர்களது குருட்டு நம்பிக்கையின் விளைவு என்று ஒதுக்கிவிட வேண்டியதுதான்.

காலப்போக்கு

வித்துவான், திரு. த. பொ. தண்டபாணி பி. ஏ. அவர்கள்
புதுவை.

நல்ல காலம் வரப்போகிறது. அதனால்தான் இத்தனைத் தீய செயல்கள் தலைவிரித்தாடுகின்றன. மனக்கொடுமை தாங்க முடியவில்லை. சொல்லும் செயலும் வேறுபடுகின்றன. அகில உலகம் புகழப்பெற்ற அரசியல் வாதிகள்கூட அமரிக்காவிலும், ரஷியாவிலும் பிறந்த பிறப்புரிமை காரணமாக, மறக்கருணையை வாரி வழங்கப் பார்க்கின்றனர். விஞ்ஞானத்தின் வளர்ச்சியின் பயனை அவர்கள் உலக நாசத்தில் காண முற்படுகின்றனர்.

பொதுவாமப் பார்க்கும்பொழுது மக்கள் நல்லவர்களாக இருந்துங்கூட, தீயவற்றையே செய்கின்றனர். ஏன்?

உண்மையில், சத்திய வாசகத்தில், தெய்வ நம்பிக்கையில், இன்னுங் கூறினால், இறைவன் திருவருளில் நவீன மக்களின் நாட்டஞ் சென்று பயன் துய்க்க விரும்பவில்லை.

நம்முள் இருக்கும் பொருள்களைப் பற்றி நாம் நன்றாக அறிந்துகொள்ள முற்படுவதில்லை. நம்மைச் சுற்றிலும் நமக்குக் கிடைத்துள்ள பொருள்களைப்பற்றி மட்டும் நாம் செருக்குடன் பிறரிடம் சொல்வதுண்டு. ',மாடு உண்டு. வீடு உண்டு. நல்ல அதிகாரமுண்டு'' என்றெல்லாம் கூற முற்பட்டு விட்டோம்.

பழைய காலத்தில் வாழ்ந்த பெரியார்கள் அப்படி அல்ல. தமக்குள் இருக்குந் தகாத பொருள்களையே அவர்கள் முதலில் கண்டார்கள். அவற்றை நீக்கவே பாடும்பட்டார்கள். அதனால்தான் அப்போதெல்லாம் அமைதி நிலவிற்றுப் போலும்! அப்பெரியார் வரிசையில் வருகின்ற ஸ்ரீ அருணகிரியார்கூட, யாருக்கும் அஞ்சாது தம்மிடத்தில் "எவை உண்டு," "எவை இல்லை'' என்பதைத் திட்டமாகக் கூறியிருக்கிறார். அவர்

கூறுவன யாவும் நம்மிடத்திலும் உண்டு. ஆனால் நாம் அவ்வாறு கூறுவதும் இல்லை. கூறக்கேட்பதோ, படிப்பதோ கிடையாது. இத்தகைய நிலையைத்தான் தமியேன் காலப் போக்கு என்கின்றேன்.

பண்டைக் காலத்தில் குமணச் சக்கிரவர்த்தி இருந்தார். அவர் முதிரமலைக்கு அரசர். அம்மலை சேரநாட்டில் இன்றும் இருக்கிறது. ஒரு சமயம் தன் தம்பி இளங்குமணனோடு மனம் வேறுபட்டு வனஞ்சென்றிருந்தார். அப்போதுங்கூட, அவர் தருமத்தை மறக்கவில்லை. இது எப்படித்தெரியும், பெருஞ்சாத்தனாரைக் கேட்டால் தெரியும், பெருந்தலைச் சாத்தனார் என்பது அவரது சரியான பெயர். சோழநாட்டில் பிறந்தவர். சுமார் 1800 (ஆயிரத்து எண்ணூறு) ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர். வேளாண் மரபில் மூலங்கிழார் என்ற சங்கப் புலவருக்கு மகனாகப் பிறந்தார்.

அவர் குமணச் சக்கிரவர்த்தியைக் காட்டில் சென்று, நேரில் கண்டு, கவிபாடிப் பரிசு கேட்டார். கையில் பொருள் இல்லை. இருப்பினும் தன் தலையைக் கொண்டுபோகும்படி பெருந்தலைச்சாத்தனாரிடம் கூறித் தன்கையில் இருந்த வாளைக் கொடுத்தார். உற்றது அறிந்த புலவர், அரசனின் பெருந் தன்மையை உணர்ந்து நெஞ்சுடைந்து நின்றார். அரசனின் உள்ளத்தே ஊறிநின்ற "அறத்தாற்றின்" வலியை எண்ணினார். அந்தக்காலத்தில் புலவனும் அரசனும் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. உடனே புலவர் குமணன் தம்பியிடஞ் சென்று அவனது பொருமையை நீக்கி அண்ணனை மதிக்கச்செய்து அவனைக்காடு சென்று அண்ணனை அழைத்து வரும்படி செய்தார்.

குமணனும் பெருந்தலைச் சாத்தனாரும் நிறைமொழி மாந்தர்கள். அறப்பண்புகளை வளர்த்தார்கள். அது அந்தக் காலம்.

தன் பிழையைக் கூசாது ஒத்துக்கொள்ளும் மனப்பான்மை நம்மவருள் மிகமிகச் சிலருக்கே உண்டென்று சொல்லவும் எனக்கு நாவெழவில்லை. "காசில்லை; வேலையில்லை; வீட்டில் ஒன்றும் இல்லை"; என்றெல்லாம் சொல்லிக்கொள்ளுகிறோமே

அல்லாது, தூங்கி எழுந்ததும், "கடவுளை நினைக்கவில்லை; அவனது நாமத்தை ஓதவில்லை; நொய்யிற் பிளவளவேனும் கொடுக்க முடியவில்லை; நிதானமாகச் சிறிது நேரம் மனத்தை அடக்க முடியவில்லை; எனக்குப் போதிய அறிவில்லை'' என்று யாரேனும் சொல்லுகிறேமா? அப்படி எல்லாம் சொல்லிக் கொள்வது நல்லதல்ல என்றல்லவா நமக்குத் தோன்றுகிறது! ஆனல் ஸ்ரீ அருணகிரியாரைப் பாருங்கள்; நமது மனப்பான் மைக்கு நேர்விரோதம்போல் தோன்றினும், உண்மையை எவ்வளவு கம்பீரமாகக் கூறுகின்ருர் தெரியுமா?

" மூல மந்திரம் ஓதல் இங்கிலை;
ஈவதிங்கிலை; நேயம் இங்கில்லை;
மோனம் இங்கிலை; ஞானம் இங்கிலை;'' என்பது அது.

இத்தகைய உண்மை அறிவு தலைப்பட்டால் அன்றி வேறு எத்தனை வித சழக்கறிவின் சிறப்பினலும் உலகஞ் சிறக்கா தென்க.

"வைஸ்ராயை இன்றுகண்டேன்; பிரதமரை நேற்றுப் பார்த் தேன். நேற்று மேயரும் கவர்னரும் எங்கள் இல்லம் வந்தனர். எனக்கொன்றும் குறைவில்லை. இந்த ஜென்மம் ஈடேறிற்று. இப்படியே கடைசிவரைக்கும் இருந்து வந்தால் போதும்'' என்றெல்லாம் நமது பெருமைகளைப்பற்றி நாம் பேசிக் கொள்வது வழக்கமாய் விட்டது. அதைக்காட்டிலும் நமது நங்கைமார்கள் பேசிக்கொள்வது இன்னும் ருசிகரமாய் இருக் கும். இத்தகைய பேச்சாளர்களே இந்தக் காலத்தில் அதிகம் உளர். அதனல்தான் பசியும் கொலையும், பொய்யுந் திருடும், சூதும் வாதும் அதிகரிக்கின்றன.

இப்படி வாழ்வதையும், பிறர்காண அதிகாரம் நிறைந்தவர் களின் உறவைப் பேணுவதையும் நாம் கௌரவமெனக் கருது கிறேம். படு ஏழைகளோடு சிறிது நின்று பேசுவதை மிகவுந் தாழ்வு என்று வெறுத்து விடுகிறேம். பெரிய சீர்திருத்த நிபுணர்கள் என்று நம்மை நாம் சிலசமயங்களில் வானளாவிப் போற்றிக்கொள்ளுகிறேம். இத்தகைய போக்கைப் பெரிதும் மாற்றி அமைக்க முழுவதும் உழைத்த நம் அப்பர் சுவாமிகளின் சொல்லைக் கேட்போமாக. இவர் முத்தியின்பம் வேண்டி முழு உலக அநுபவத்துடன் பாடுபட்ட பெரியோர்களுள்

வயதிலும் பிறவற்றிலும் மூத்தவராக விளங்கினார். தென்னாட்டில் சைவமதத்தோடு புத்தம், சமணம் முதலிய மதங்களையும் போற்றிய பெருமை இவருக்குண்டு. அவர் சிதம்பரஞ் சென்று வளைந்த புருவங்களையுடைய கண்களுடன் கொவ்வைப் பழம் போல் சிவந்த புன்முறுவலமைந்த வாயுடன் குளிர்ந்த சடையைப் பெற்றுப் பவளம்போன்ற செம்மேனியில் பாலைப்போன்ற வெளுப்பான திருநீற்றுக்குறிகளை அணிந்து யாவர்க்கும் இன்பந் தருகின்ற ஆனந்தத் தாண்டவஞ் செய்கின்ற நடராசப் பெருமானை வணங்கும் புண்ணியமுடைய மனிதப்பிறப்பே வேண்டுமாம். வேறொன்றும் வேண்டாமாம். அதனை அடியில் வரும் பாட்டு மூலம் எடுத்துக்காட்டுகிறார்.

> " குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
> பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்
> இனித்தம் உடைய எடுத்த பொற் பாதமும் காணப்பெற்றால்
> மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே. "

என்பது அப்பாட்டு.

நமக்கிருக்கின்ற மனம், வாக்கு, காயங்களின் உள்ளே காணப்படும் பொருள்கள் நரிநுழையில் காணப்படும் கழுதையின் தோலும் வாலும் போன்றுள. அன்பர்கள் என்னை இங்கே இப்படிக்கூற நேர்ந்தமைக்கு மன்னிப்பார்களாக. காலத்தின் போக்கே இத்தகைய சூழ்நிலைக்குக் காரணமென்க.

நமக்கிருக்கின்ற ஆவல் எல்லாம், பிறர் கெட்டாலும் நாம் சுகமாக வாழவேண்டும் என்பதே ஏகதேச விலக்கும் உண்டு. "பணம் நிறைய வரவேண்டும். தொழில் சுகமாய் நடக்கவேண்டும்" உலகில் நம்மை எல்லாரும் மதிக்க வேண்டும். நமக்குக் கீழ்ப்படியாதவரை ரகசியமாகத் தீர்த்துக் கட்டவேண்டும் என்றெல்லாம் நமது ஆசை நமக்குப் போதிக்கிறது. தேசத்திற்கோ, பாஷைக்கோ, பெரிய சேவைக்கோ நம்மை நாம் தத்தஞ்செய்வது மிகவுந் துர்லபமாய் விட்டது. இந்தியாவில் மட்டும் இந்த கேவலமான நிலை நிலவுவதாக நினைக்காதீர்கள். உலகம் முழுவதிலுமே இந்தப் பெருவியாதி தொத்திக்கொண்டு தொந்தரை செய்து வருகிறது.

(தொடரும்)

786.

தமிழின் ஒலிமாட்சி

பேராசிரியர் ஸ்ரீ ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் பேச்சு

அண்ணாமலைநகர், ஆகஸ்டு 21

ஸ்ரீ ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் "தமிழின் ஒலிமாட்சி" என்பதுபற்றி ஸ்ரீ டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, துணை வேந்தர் தலைமையில் நேற்று மாலை சாஸ்திரி ஹாலில் செய்த சொற்பொழிவின் சுருக்கம் ::

"தமிழ் மொழியின் சிறப்பொலிகளாகிய 'ழ' கரத்தையும், 'ற' கரத்தையும் குறித்து, சிறிது சொல்லலாமென்று எண்ணு கிறேன். பழங்காலத்தில் இவ்விரண்டு ஒலிகளும் திராவிட மொழிகளுக்கெல்லாம் உரிய சிறப்பொலிகளாயிருந்தன. இப் பொழுது கன்னடமும் தெலுங்கும் இவற்றை இழந்துவிட்டன. தமிழிலும் இவ்வொலி செப்பமாக வழங்குவதில்லை. சில சொற் களில் அமைந்த 'ழ' கரம் பேச்சுத் தமிழில் உச்சரிக்கப்படுவதே இல்லை. உதாரணமாக 'எழுந்திரு' என்பதை 'எளுந்திரு' என் கின்றோம். 'யாழ்ப்பாணம்' 'யாப்பனம்' ஆகி 'ஜாப்பனம்' ஆகி, 'ஜாப்ஞ' என்று ஆங்கிலத்தில் வழங்குகின்றது. பாண்டி நாட் டிலே பொது 'ள' கரத்திற்கும் சிறப்பு 'ழ' கரத்திற்கும் பேச்சு நடையில் வேற்றுமை செய்யப்படுவதில்லை. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் எல்லையில் அமைந்த தில்லையம்பதியில் 'ழ' கரம் 'ஷ' கரமாகின்றது. மார்கழித் திருவிழாவை 'மார்கழித் திருவிஷா' என்று சொல்வதைச் சிதம்பரத்திலே கேட்கலாம். சென்னைமாநகரில் சிறப்பொலியாகிய 'ழ' கரம் 'ய' கரமாகும். 'வாழைப்பழம்' என்பது 'வாயப்பயம்' என்றும் 'கிழவி' என் பது 'கியவி' என்றும் பொதுமக்கள் பேசுவர். திருவள்ளுவர், இளங்கோவடிகள், நக்கீரர், முதலிய பெரும் புலவர்கள் 'ழ' கரத்தின் சிறப்பினை அறிந்து அதனைப் பொன்போல்போற்றித் தம் கவிதைகளை அழகுசெய்துள்ளார்கள். அன்னார் போற்றிய ஒலியைச் சிதைத்தல் தமிழ்நாட்டார்க்கு அழகன்று. அவ்வொலி யால் அடைவதற்குரிய சிறந்த இன்பத்தைத் தமிழ்நாடு இழந்து விடுதல் ஆகாது. தமிழ் மாணவர்கள் 'ழ' கரத்தைச் செவ்வை யாக உச்சரித்து நாடெங்கும் அச்சிறப்பொலியைப் பரப்புதல் வேண்டும்.

வல்லினம் என்று சொல்லப்படுகின்ற 'ற' கரம் தமிழ் இலக்கியங்களில் ஆளப்பட்டுள்ள அழகினைக் காண்பது ஒரு சிறந்த இன்பமாகும். வன்மையான உணர்ச்சிகள் உள்ளத்

187

திலே தோன்றும் போது இவ் எழுத்தை நல்லாசிரியர்கள் எடுத்து ஆளுவார்கள். சிலப்பதிகார ஆசிரியராகிய இளங்கோ அடிகள் கண்ணகி சீற்றம் கொண்டு பாண்டியன் அரண்மனைக்குச் சென்று பேசுகின்ற சொற்களில் 'ற' கரத்தின் ஆற்றலைக் காட்டியுள்ளார்.

"அறிவு அறை போகிய பொறி அறு நெஞ்சத்து. இறை முறை பிழைத்தோன் வாயிலோயே" என்று வாசல் காத்து நின்ற சேவகனை நோக்கிக் கூறும் வாசகத்தில் ஆறு 'ற' கரம் அமைந்து அவன் உள்ளத்தின் வேகத்தை உணர்த்துகின்றது. இத்தகைய வல்லின 'ற' கரம் இரட்டித்து வரும்போது பெரும்பாலும் சிதைந்து வழங்குவதைப் பேச்சுத் தமிழிலே காணலாம். 'காற்று' 'நாற்று' என்பன 'காத்து' 'நாத்து' என்றே பேசப்படும். கும்பகோணத்திற்கு அருகேயுள்ளே 'சத்திமுற்றம்' என்ற ஊர்ப் பெயர் 'சத்திமுத்தம்' என்று சிதைந்தது. ஆதிபராசக்தியாகிய உமையம்மை ஈசனை அன்போடு முத்தமிட்ட இடம் என்று புராணம் பேசுகின்றது. அதற்குச் சாதகமாக சத்தி முற்றக் கோவிலிலே சத்தி சிவனை முத்தமிடும் பான்மையில் ஒரு சிற்பமும் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் வட பாகத்தில் 'ற' கரம் 'ட' கரமாகும். 'பற்று' என்னும் சொல் வயலைக் குறிக்கும். கோயில் நிலங்கள் உள்ள ஊர் 'கோயில் பற்று' என்று பல மாவட்டங்களில் வழங்கப் பெறுகின்றது. செங்கல் பட்டு என்ற ஊர்ப் பெயர் செங்கழுநீர்ப்பற்று' என்ற அருமையான சொல்லின் சிதைவு ஆகும். செங்கழுநீர்' இல்உள்ள 'ழ' கரம் நழுவிற்று. 'செங்கநீர்' ஆயிற்று. 'பற்று' என்பது 'பட்டு' என்று மாறிற்று. ஆகவே 'செங்கநீர்ப் பட்டு' என்பது 'செங்கற்பட்டு' என முடிந்தது. இக்காலத்திலுள்ளவர்கள் செங்கற் சூளை அதிகமாகக் காணப்பட்டமையால் அவ்விடம் அப்பெயர் பெற்றது என்று எண்ணுகிருர்கள். அரசாங்கத்தின் ஆதரவில் எழுதப்பட்ட குறிப்புகளிலும் இப்பிழை புகுந்து விட்டது. இத்தகைய பிழைகளை எல்லாம் திருத்தித் தமிழை செம்மையாகப் பேணி வளர்த்தல் அண்ணமலை பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் சிறந்த கடமையாகும்" என்று சொல்லி முடித்தார்.

துணைவேந்தர் முடிவுரைக்குப் பிறகு பேராசிரியர் ஸ்ரீ லெ. ப. கரு, இராமநாதம் செட்டியார் நன்றி கூறச் சபை முடிந்தது.

—சுதேசமித்ரன், 26-8-55.

வரலாறு

தமிழரே முதலோர் தமிழே முதல்மொழி

திரு. மூ. இராமகிருட்டினனூர்
வித்துவான் முடிவுநிலை. தருமை தமிழ்க்கல்லூரி.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் பூமிதனில் திரவப்பொருளாய நீரானது சூரிய வெப்பத்தாலும் இரசாயன மாற்றத்தாலும் திடப்பொருள்களான பாறைகளாகி இந்தப் பாறைகளானது சூரியவெப்பத்தாலும் நீர் பாறைகளுக்கிடையில் உடைதலானும், பெருங்காற்றுலும் உடையப்பெற்று துகள் துகளாகமாறி மண்தோன்றும் காலத்தே தோன்றியவன் தமிழன் என்பதைப் புறப்பொருள் வெண்பாமாலை, கரந்தைப் படலம் குடிநிலைத்துறைப்பாடல்,

> "பொய்யகல நாளும் புகழ்விளைத்த லென்வியப்பாம்
> வையகம் போர்த்த வயங்கொலிநீர்—கையகலக்
> கற்றேன்றி மண்டோன்றுக் காலத்தே வாளோடு
> முற்றேன்றி மூத்த குடி,

என்று ஆய்ந்துஅறிவிக்கின்றது. இதனைவெகுகாலமாகத் தமிழ்ப் புலவன் ஒருவன் தன்இனத்தாரின் தோற்றத்தை மிகைபடுத்திக் கூறியதாகக்கொண்டு பலர் ஏற்க மறுத்தனர். ஆனுல் தற்கால புதைபொருள் ஆராய்ச்சிக் கலையின் (Archaeology) வளர்ச்சியின்பயனுல் மேற்கண்ட பாடலின் கருத்து உண்மையென நிரூபிக்கப்பட்டு வருகின்றது. "கற்றேன்றி மண்டோன்றுக் காலத்தே" என்பது தமிழரது தோற்றம், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நிகழ்ந்தது என்பதை உணர்த்துவான் வேண்டியே சிறிது மிகைப்படுத்தப் பட்டது என்பதை ஆய்வாளர் தெள்ளிதின் அறிவர். இனி இதன் உண்மையை நோக்குவோம். பூமிதோன்றுவதற்கு மூலகாரணமான சூரியன் தோன்றி இற்றைக்கு எத்தனையோ கோடானுகோடி ஆண்டுகளாகின்றன.

சூரியன்: பிரபஞ்சத்திலுள்ள (Universe) இலட்சக்கணக்கான விண்மீன்களுள் சூரியனும் ஒன்று. பூமியிலிருந்து சூரிய

289

னுக்குத் தூரம் 9,30,05,000. மைல்கள் என்று வானநூல் (Astronomy) வல்லுனர் கண்டுள்ளனர். சூரியனின் குறுக் களவோ யெனின் 8,65,000. மைல்கள் என்பதும், பூமியைப் போல 13 லட்சம் மடங்கு பெரிதானது என்பதும் அது தனது அச்சில் கிழக்குமேற்காகச் சுழன்று கொண்டிருக்கிறதுஎன்பதும் இதில் பலபுள்ளிகள் இருக்கின்றன என்பதும், அவற்றில் 30000 மைல்கள் குறுக்களவுடைய பெரிய புள்ளி ஒன்று இருக் கிறது என்பதும், வானநூல் அறிஞர்களால் நாம் அறிந்ததே. இதன் வெளி உஷ்ண நிலையானது 6000·C. இவ்வண்ணம் சூரியனுனது இன்னும் 30,000 மில்லியன் ஆண்டுகளுக்கு வெப்பத்தைத்தனது வெள்ளிய கதிர்கள்மூலம் பூமிக்குவழங்கிக் கொண்டிருக்கும் என வானநூல் வல்லுனர் வகுத்துறைத் துள்ளனர். சூரிய ஒளி இல்லையேல் உலகில் எவ்வுயிரு மில்லை.

பூமியின் தோற்றம்: மேற்கண்ட வண்ணமுள்ள இச் சூரியன் இற்றைக்கு பலகோடி ஆண்டுகளுக்கு முன்னர் இப்பொழுது உள்ளதைவிட மிகப் பெரிதாகவும் இன்னும் அதிகமான வெப்பத்தை உடையதாகவும் இருந்துள்ளது. இவ்வாறிருக்கையில் ஒருநாள் சூரியனுனவன், வேறொரு விண்மீனின் அருகில் செல்ல நேரவே, அவ்விண்மீனின் இழுப் புச்சக்தியானது, சூரியனின் இழுப்புச் சக்தியைவிட சற்றுஅதிக மாகவே, சூரியனின் மேற்பரப்பிலுள்ள வாயுத் திரளானது கற்றையாக இழுக்கப்பட்டு, இப்பொருள் விண்மீனையோ அல்லது திரும்ப சூரியனையோ அடைவதற்குள் இரண்டும் போதிய தூரம் விலகினமையால் நடுவிலே இவ் வாயுத் திரளானது இரண்டு இழுப்பு சக்திநுலும் இழுப்புண்டு, தன்னைத்தானும், சூரியனைச் சுற்றியும் சுழலத் துவங்கியது வாயுப்பொருளாக இருந்த இப்பொருள் சுழற்சியால் முதற்கண் திரவமாகவும், பின் திரவமும் திடமுமாகிய எரிகுழம்பு நிலையை எய்திற்று. பலகோடி ஆண்டுகளாகச் சுழல்வதால் படிப்படி யாகக் குளிர்ச்சியடைந்து முடிவில் இதுவே உயிர்கள் வாழ்வதற்கான பூமியாகியது.

பூமி: சூரியனிலிருந்து பிரிந்து தோன்றிய இப் பூமியானது மூன்றுவது கிரகமாகத் திகழ்கின்றது. கிழக்கு மேற்காகவுள்ள பூமத்தியரேகையின்தூரம் 7,927 மைல்களாகவும், வட, தென் துருவங்களுக்கு கடையிலுள்ள தூரம் 7000 மைல்களாகவும்

790

அமைத்துள்ளன பூமியின் அடிப்பாகம் மிகஆழத்திற்கு ஒரே கடினபாறைகளாகப் பரந்துள்ளது. இப்பாறையானது பிராண வாயு (Oxogen) சிலிகான் (Silican) அலுமினியம் (Aluminiam) சோடியம் (Sodium) பொட்டாசியம் (porassiuin) இரும்பு (Iron) கால்சியம் (Colcium) மக்னீசியம் (Magnesium) டைட்டானியம் (Titanium) நீரகம் (Hydrogsn) கார்பன் (Corbon) ஆகிய மூலப்பொருள்களால் ஆகியது. இதனையே நமது ஒல்காப்பெரும் பொருள் தொல்காப்பியம்

> "நிலம்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
> கலந்த மயக்கம் உலகம்" தொல். பொருள். சூ. 635.

என, உலகம் ஐம்பூதங்களால் ஆகியது என்று சுமார் 2600 ஆண்டுகளுக்கு முன்பே அறிவிக்கின்றது. இப்பூமியின் நிறை சுமார் 6000,000,000,000,000,000,000 டன்களாகும். (6,000 million million million thns). இவ்வாறுகவுள்ள இப் பூமியிலிருந்துதான் சிலகோடி ஆண்டுகளுக்கு முன்னர் சந்திரன் பிரிந்து தனிக்கிரணமாக ஆகியது.

சந்திரனின் தோற்றம்: பூமிதோன்றி எரி குழம்பாகத் திகழ்ந்தகாலத்து இதன் சுழற்சியால் பூமியின் ஒருபகுதியில் தொய்யல் உண்டாக, அப்பதி வேறொரு கிரகத்தின் ஈர்ப்பால் இழுக்கப்பட. இவ்வாறு இழுக்கப்பட்ட இப்பகுதி பூமியையோ கிரகத்தையோ சேருமுன்னர் இரண்டும் போதிய அளவில் விலகிக் கொண்டமையால் அப்பகுதி, தனித்து வானமண்டலத்தில் தோன்றிச் சுழலத்துவங்கிய பகுதியே சந்திரனாகும்.

சந்திரன்: மேற்கண்ட வண்ணம் தோன்றிய சந்திரன் நாம் வாழும் பூமியிலிருந்து 2,38,857 மைல்கள் தூரத்தில் அமைந்திருக்கிறது. இதன் குறுக்களவு 2,160 மைல்களாகும். ஒரு முழுநிலாத்தோன்றி மற்றொரு முழுநிலாத் தோன்ற 29 நாட்கள் 12 மணிகள் 44.04 நிமிடங்கள் பிடிக்கின்றன என வானநிலை ஆய்வாளர்கள் அறிவித்துள்ளனர்.

இவ்வகையானே புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் காட்டிய கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்னைய நிலையை ஒருவாறு உணர்ந்தோம். இனி இவ்வுலகில் உயிர் வர்க்கம் தோன்றியது என்பதை ஒருவகையானேஉணர்வோம்.

உயிர்களின்தோற்றம்: பூமியிலிருந்து சந்திரன்பிரிந்தபின்பு பூமியின் நடுக்கோட்டுப்பாகம், அதன் சுழற்சியால் முதன் முதலாகக் குளிர்ச்சி யடையவே, இங்கு கடல் நீராகிய திரவம் திடப் பொருளாய பாறைகளாகமாறி பின் இப்பாறைகள் பொடியாகி மண்பாகம் ஏற்பட்டது. கடல் நீரிலுள்ள குறிப்பிட்ட சில உப்புக்கள் ஹூர் முறைப்படி சூரிய வெப்பத்தால் இரசாயன மாற்றமடைந்து மிகநுண்ணிய உயிரணுக்கள் தோன்றலாயின என்று ஆங்கிலஉயிரியல் அறிஞர்கள் அறிவித்துள்ளனர். இவ்வுயிரணுக்கள்தாவரஇனமாகவும் உயிர் கனமாகவும்பிரிவது. அவைகளில் சேரும் இரசாயன உப்புக்களின் மாறுபாட்டால் ஏற்படுகின்றன. உயிரினத்தில்வளர்ந்த ஒருசெல்பிராணியாகத்திகழ்வது அமீபாபோன்றவையாம். பின்இந்த ஒருசெல் பிராணியிலிருந்து படி முறை வளர்ச்சியால்(Evolution) நீரில்வாழ்வனவும், நீரிலும் நிலத்திலும் வாழ்வனவும் (தவளைபோன்றவை), ஊர்வனவும், முதுகெலும்பு இல்லாதனவும், முதுகெலும்பு உள்ளனவும் ஆம். இவற்றில் முதலாக முட்டைஇடுவனவும், பின்குட்டிபோட்டுப் பால்கொடுக்கும் இனமும் தோன்றலாயின.

குரங்கின்வளர்ச்சியே மனிதன்: குட்டிபோட்டு பால் கொடுக்கும் உயிர் வர்க்கங்களுக்கெல்லாம் முன்னையதும், முக்கியமானதுமாகத் திகழ்வது சாதாரண குரங்குகளே. இந்தசாதாரண குரங்குகளிலிருந்துதான் மனிதக் குரங்குகளாகக் கருதப்படும் லெமூர், உராங்உடான், சிம்பான்சீ, பாபூன், கொரில்லா போன்றவை தோன்றின.

லெமூர்: (Lemur) இப்பிராணியின் எலும்புக் கூடுகள் பல தென்ஆப்பிரிக்காவை அடுத்த மடகாஸ்கர் என்னும் தீவில் கண்டுபிடிக்கப் பட்டன. இப்பிராணி குரங்கினத்தைச் சார்ந்ததே. இது மனிதனைப் போல 6½ அடி உயரம் வளரக் கூடியது. மனிதனது மூளையமைப்பை, இப்பிராணியினது மூளையமைப்பு ஒத்திருக்கிறது. இதன் கைவிரலின் அமைப்பு குரங்குகளின் கைவிரல்களின் அமைப்பை ஒத்திராமல் நான்கு விரல்கள் ஒருபுறமும் 5வதுவிரல் எதிர்ப்புறமும் மனிதனைப்போல அமைந்திருக்கிறது. கால்விரல்களும் மனிதனது கால்விரல்களின் அமைப்பையே ஒத்துக் காணப்படுகின்றன. இவ்விதம் இது பெரும்பாலும் மனிதனையே ஒத்திருப்பதால் இதனை மனிதனது மூதாதை என்பர்உயரியல் விஞ்ஞானிகள். மறைந்த, விரிந்ததென் கண்டத்தில் இம் மிருகங்களின் எலும்புக் கூடுகள் காணப்

படுவதால் இம்மறைந்த கண்டத்திற்கு லெமூர் வாழுமிடம் என்றபெயரில் லெமூரியா என்ற பெயரிட்டார் பேராசிரியர் ஹேக்கல் என்பார்.

பாபூன் (Boboon): இது ஆப்பிரிக்காவில் வாழும் மிகப் பூர்வீகமான குரங்கினமாகும். இன்றும் இவ்வினத்தைச் சார்ந்த குரங்குகள் பல ஆப்பிரிக்காவில் உள்ளன. இவ்வினம் மனித குரங்குகளைப்போல முழுவளர்ச்சி அடையப் பெற்றதல்ல. இருப்பினும் மனிதனது தோற்றத்தில் இதற்கும் முக்கியபங்கு உண்டு.

கொரில்லா (Gorilla) இது மனிதக் குரங்கைச் சார்ந்த ஒரு பெரிய குரங்கினமாகும். கவ்வினம் ஆப்பிரிக்காவின் மத்தியில் நடுக்கோட்டுப் பகுதியிலுள்ள காட்டில் பெருவாரியாகக் காணப்படுகின்றது. 4முதல் 5அடிவரை வளரக்கூடியது.

உராங் உடான் (Orang Utan) இந்தக் குரங்கினம் மனிதக் குரங்கினத்தைச் சார்ந்தது. நடுக்கோட்டுப் பகுதியிலுள்ள சுமத்ததரா, போர்னியோ ஆகிய இரண்டு தீவுகளில்தான் இக் குரங்கினம் காணப்படுகின்றது. இது 4அடி உயரம்வளரும். 150 பவுண்டு எடையுள்ளன இக்குரங்குகள்.

சிம்பான்சீ (Chimpanzee) இது பெரிய மனிதக் குரங்கினத்தைச் சார்ந்தது. மேற்கு ஆப்பிரிக்காவில் தவிட்டு நிறமுடையனவாய்க் காணப்படுபவை. நீண்ட காதுகளை உடையன. பொதுவாக மிகவும் மனிதனோடு தொடர்புடையனவாய் காணப்படுபவை இவையே. இவை நிமிர்ந்தும் சற்றுக்குனிந்தும் நடக்கக் கூடியன.

மேற்கண்ட குரங்கினங்களிலிருந்துதான் மனிதன் தோன்றி வளர்ந்திருக்கிறுன் என்பது, ஆதிகாலத்து மனிதனது மண்டையோடு குரங்கின் மண்டையோட்டைப் போன்று காணப்படுகின்றமையானும்; மனிதனது உடலமைப்பு குரங்கினது உடல் அமைப்பையே ஒத்திருக் கின்றமையானும்; மனிதனது பல், மூளை இருதயம் போன்றவை குரங்கினத்தையே ஒத்துக் காண்கின்றமையானும்; பழைய மனிதனது முகம், உலகில் குரங்கினது முகத்தையே ஒத்திருக்கின்றமையானும்; ஆதி மனிதனது செயல்களும் குரங்கின் செயல்களும் ஒன்ருகக் காணப்படுகின்றமையானும்; இன்றும் மனிதனது இடுப்பு எலும்பின் பின்புறம் அதாவது முதுகெலும்பின் முடிவில் வால் இருந்ததற்கான எலும்பு ஒன்று இருக்கிறது என்பதை உடலைப்பற்றிய நுண்கலை (Anotomy) ஆய்வாளர் அறிவித்துள்ளமையானும் தெள்ளிதின் பெறப்படும். (தொடரும்)

293

திரு விளக்கு வழிபாடு

வித்துவான், திருமதி. சிவ. மீனுட்சிசுந்தர சிவை அவர்கள்

முழுமுதற் கடவுளை வழிபடுதற்கு நம்முன்னேர் ஒளியினையும் திருவுருவமாகக் கொண்டனர். பண்டை நாள் தொட்டு இன்று வரை ஒளி வழிபாட்டினை முதன்மையான முறையில் நம் தமிழகம் கைக் கொண்டு ஒழுகி வருகின்றது.

மக்களுக்கு வாழ்வைத் தருவது ஒளியாகும். எப்பொருளிலும் ஒளியின் இன்பத்தைக் காணலாம். இருளால் ஒளியின் பயன் பெருகுகிறது, பகலில் ஞாயிறும், இரவில் திங்களும் திங்களற்ற காலத்தில் மின்னும் மீன்களும் ஒளியைத் தருகின்றன.

இறைவன் ஒருவனே. அவன் பிறப்பிறப்பற்றவன். முழுமுதல்வன்; உண்மை, அறிவு, இன்பம் என்னும் இயல்புகளை இயற்கையாகவே உடையவன். அம் முதல்வனுலே தான் உலகம் உலகத்திலுள்ள பொருள்கள் யாவும் இருக்கின்றன, என்னும் பேருண்மையைக்கண்ட நம் சமயப் பெரியார்களெல்லாரும் அவ்விறை நிலையை ஒளி நிலையாகவே கண்டார்கள். கண்டு போற்றினுர்கள்.

"ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ்சோதி" என்று போற்றினுர் மணிவாசகப் பெருந்தகையார். "அருட்பெருஞ் சோதி! அருட்பெருஞ்சோதி" என வாயார வழங்கினுர் வடலூர் வள்ளலார். உயிர்களுக்கு உள்ள அறிவும், தொழிலும் சிற்றறிவும், சிறு தொழிலுமாக உள்ள ஒன்றின் தொடர்பும், துணையும் உயிர்க்கு வேண்டியிருக்கிறது. அம்முற்றுணர்வை உடையது முழுமுத லிறைவனின் அறிவும், தொழிலும் உயிர்களது அறிவிலும், தொழிலிலும் ஒன்றுவது இயல்பு. இதனை "அறிவினில் அருளால் மன்னி" என வருஞ் சித்தியார் வாக்காலும்; "சிந்தனையுள் ஊற்றுன உண்ணுரமுதே" என்னும் திருவாசக அருள் மொழியாலும் அறியலாம்.

794

பொருள்களின் தன்மைகளைச் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து வகைகளால் உணரலாம். எனினும் ஒளி, ஒலி என்னும் இரண்டு வகைகளால் நன்கு உணரலாம். இவ்விரண்டினும் ஒளி கொண்டு அறிவது தான் யாவர்க்கும் எளிது. ஒருவரைக் காணும்போது முதலில் அவர் தோற் றத்தைத்தான் காண்கிறோம். அதன் பின்னர்த்தான் அவர் பேச்சொலியைக் கேட்கிறோம். ஆதலின் ஒளியினால் உண்டா குங்காட்சிதான் முதல் நிகழ்ச்சி. பின்புதான் பேசினால் உண்டாகும் ஒளி என்பது கண்கூடு. உலகத்தில் எதனை அறியவும் ஒளியே எளிதாகவும் முதன்மையாகவும் பயன் படுகிறது. இதனால்தான் வழிபாட்டு நிகழ்ச்சியும் முதன் முதலில் உலகத்தில் ஒளியின் வாயிலாக நிகழத் தொடங்கிற்று. இறைவனுக்குரிய பல திறங்களும் மண், நீர், தீ, காற்று, விண் என்னும் ஐந்து பெரும் பொருள்களுள் தீ என்னும் ஒளிப் பொருளினிடமே மிகுந்திருக்கின்றன. இதனால் தீயினிடம் இறைவன் முனைந்தும், அணுகியும் விளங்குகின்றான். ஆதலின் ஒளியின் வாயிலாக இறைவனை வழி படுதலே சாலச்சிறந்த தாகும்.

“சோதியே, சுடரே, சூழொளி விளக்கே” என்பது மணி வாசகம். “இல்லக விளக்கது இருள் கெடுப்பது” என்பது அப்பர் வாக்கு.

ஒளிமிகுந்த பொருள்கள் பல இருப்பினும் இல்லங்களை ஒளி பெறச் செய்வன விளக்குகளேயாம். இல்லமெங்கும் நிறைந்த திருவிளக்குகளே, அவ்வில்லத்தில் கலைச்செல்வமும், பொருட்செல்வமும், அருட்செல்வமும் நடம் புரிகின்றன என்பதற்குச் சான்றுவன.

திரு மகளும், மலைமகளும் கூடி அருள் புரியுமிடம் விளக் கேற்றுமிடமாகும்.

திரு விளக்கே இருளகத்தில் பொருள் விளக்கும் தன்மை யது. அதனாலேயே யசர்க்கும் பயன் விளைக்கும் திருக் கோயிலில் விளக்கிடுவார் அடையும் பயன் மெய்யுணர் வாயிற்று.

" விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும் "
" விரும்பி நல் விளக்குத் தூபம் விதியினல் இட வல்லார்க்குக்
கரும்பினில் கட்டி போல்வார் கடவூர் வீரட்டனுரே "

என்று அப்பரடிகள் அருளியுள்ளார்கள்.

பெண்களே நோன்புநோற்பதில்மிக்காரும், தக்காருமாவர். மனைக்கும் வழிபாட்டிற்கும் முதன்மையாக ஏற்றவர் பெண்களே யாவர்.

தமிழ் நாடெங்கும் ஒருங்கே கொண்டாடப்பெறும் "கார்த்திகைத் திருநாள்" இவ்விளக்கொளி வழிபாடேயாகும். கார்த்திகைத் திங்கள் சிவபிரானுக்குரிய திங்களாகும். ஒளி வழிபாடு சைவத்தின் உள்ளமாகும். இவ்வுண்மைகளை உள்ளடக்கியதே கார்த்திகை விழாவாகும்.

" வளைக்கை மடநல்லார் மாமயிலை வன்மறுகில்
துளக்கில் கபாலீச்சரத்தான் தொல் கார்த்திகை நாள்
தளத் தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணுதே போதியோ பூம்பாவாய் "

என்பது ஆளுடைய பிள்ளையார் அருள் வாக்கு.

மகளிர் சிறப்பாகத் தம் இல்லங்களில் கார்த்திகைத் திருநாளேயல்லாது எக்காலத்திலும், பந்தலிலேயிட்ட பத்தி அரும்பு விரியும்போது வீசும் மணத்தினுல் அந்திக் காலமென்று அறிந்து, இரும்பாற் செய்த தகளியில் நெய் தோய்ந்த திரியைக் கொளுத்தி, நெல்லையும், மலரையுஞ் சிதறி இல்லுறை தெய்வத்தை வணங்கிக் கடைத்தெருவெல்லாம் மாலைக் காலத்தைக் கொண்டாடினுர்கள் என்று நக்கீரர் செய்த "நெடு நல் வாடை" என்னும் நூலால் அறிகிருேம்.

" மடவரல் மகளிர் பிடகைப் பெய்த
செல்வியரும்பின் பைங்காற் பித்திகத்து
அவ்விதழ் அவிழ் பதங் கமழப் பொழுதறிந்து
இரும்பு செய் விளக்கின் ஈர்ந்திரிக்கொளீஇ
நெல்லும் மலருந் தூஉய்க் கைதொழுது
மல்லல் ஆவணம் மாலை அயர" (நெடுநால்வாடை)

இதனுல் விளக்கொளி வழிபாடு சங்க காலத்திலும் மிகச்சிறப்பாக வழக்கிலிருந்ததாக அறிகிருேம். திருவிளக்கு வழிபடு மிக மிகத் தொன்மையானது.

தொடர் கதை

மாசில் வீணை

வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள்,
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

விடியற்காலம் விரைந்து எழுந்துவிட்டாள் அவள். இன்னும் போகவேண்டியதூரம் அதிகமாக இருப்பதால் விரைந்து நடக்கவும் ஆரம்பித்தாள். காவிரியின் கரையோடு சென்று கொண்டிருந்தாள். இன்னும் சரியாகக்கூட பொழுது புலரவில்லை. இருள் எங்கும் கப்பிக்கொண்டிருந்தது. காவிரியின் தண்ணீர் படுகையில் பொங்கிவழிந்து சென்றுகொண்டிருந்தது. இளங் காலைக்காற்று வேறு 'சிலு' 'சிலு' என்று வீசிக்கொண்டிருந்தது. இருபுறமும் நெருங்கியிருந்த மரங்களும் செடி கொடிகளும். இப்பொழுது உண்மையாகவே பொன்முடிக்கு அச்சம் உண்டாகியது. இன்னும் சற்றுநேரம் பொறுத்துப் புறப்பட்டிருக்கலாம் என்று புத்தி புகட்டியது அவள் மனம். இருப்பினும் எதனையும் எண்ணுமல் காலடியை எட்டிப்போட்டு நடக்க ஆரம்பித்தாள் அவள். சற்று தூரத்திலிருந்து குதிரைக் குளம்படி ஓசை கேட்டது. 'மனத்தின் பிரமை' என்று எண்ணி நடந்தாள் பொன்முடி. இப்போது குளம்படி ஓசை அருகில் கேட்டது. ஆம். உண்மைதான். எதிரே ஒரு வெண்புரவிதான். பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. காவிரிக்கரை ஆலமரங்களில் புகலடைந்திருந்த புள்ளினங்கள் சிறகடித்துப்பறந்தன.

சற்றுதூரத்தில் குதிரையையும், அதன்மேல் ஒரு ஆடவன் வருதலையும் கண்ட பொன்முடியின் உள்மனம் புலம்பியது. சுற்றுமுற்றும்பார்த்தாள். கண்ணுக்கெட்டியதூரத்தில் வேருெருவரும் இல்லை. சரேலென்று பக்கத்திலிருந்த புதரில் பாய்ந்து மறைந்து கொண்டாள்.

குதிரை புதருக்குப்பக்கத்தில் வந்துநின்றது 'யார் அங்கே? வெளியில் வந்துவிடு'' என்ற கோரமான குரல் கேட்கவே அஞ்சியவாறே வந்து நின்ருள் பொன்முடி. அச்சத்தால் அவள் விழிகள் சுழன்றன. இலேசாக இரண்டொரு மயிர்கள் நெற்றியில் சுருண்டு விளையாடின.

'அடே! யார் நீ?' என்று கேட்டவாறே உடைவாளை உறையில் போட்டபடி நெருங்கினுன் சந்தனத்தேவன். ஆம். சந்தனத்தேவன்தான். இளவரசன், இளவரசியைத் தேடிவந்த அவன்தான் எதிர்பாராதவிதமாகப் பொன்முடியைச் சந்தித்தான் இப்போது.

பொன்முடி தலைகுனிந்து மௌனமாக நின்ருள். "மருளும் மான்போல், என்னை மருளவைக்கும் மங்கையே! ஏன் இப்படி நடந்து வருந்துகிருய்? குதிரையில் ஏறிக்கொள். குறித்த இடத்திற் சேர்த்து விடுகிறேன்" என்று கூறியவாறே பொன் முடியின் கைகளைப்பற்ற மீட்டும் நெருங்கினுன் சந்தனத்தேவன்.

'சீ! பெண்களின் கற்பு மனம் அறியாதபேயனே! தூர நில்! தூய்மையற்றவனே!' என்று பொறிந்துதள்ளிவிட்டு பின்னுல் நகர்ந்தாள் பொன்முடி. 'ஐயோ! அங்கயற்கண்ணி! ஆபத்து நேர்ந்து விட்டதே! காப்பாற்று! காப்பாற்று!' என்று அவள் உள்மனம் ஓலமிட்டது. இதற்குள் கிழக்கே இருந்து இன்னெரு குதிரைச்சத்தம் கேட்கவே, சரேலென்று பாய்ந்து பொன்முடியைத் தூக்கிக்கொண்டு குதிரையின்மேல் ஏறிக்கொண்ட சந்தனத்தேவன் குதிரையை மிகமிக வேகமாகச் செலுத்தினுன். பொன்முடி துவண்டுவிழும் பூங்கொடியாய்க் குதிரைமேற் கிடந்தாள்.

திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே கருவூர்ப் பக்கம் செல்லும் பாதையில் குதிரை சிட்டாய்ப் பறந்தது.

பதின்மூன்றும் அத்தியாயம்

'கை மாறியது'

வைகறை. பொழுது புலர்ந்துகொண்டிருந்தது. பறவைகள் இரைதேடுவதற்காகக் கூட்டைவிட்டுப் புறப்பட்டுக் கொண்டிருந்தன. பூங்காட்டு மண்டபத்துத் தோட்டத்துக் குடிசைக்குள் பரபரப்பு குடிகொண்டிருந்தது. மல்லிகை அங்கும் இங்கும் ஓடி மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு இருந்தாள். அவள் விரைவு எங்கோ பயணத்துக்கு ஆயத்தப் படுவதைக்காட்டிக் கொண்டிருந்தது. துணிமணிகளை எடுத்து

ஒரு பெட்டியில் அடைத்துக் கொண்டிருந்தாள். நிலாமுடியன் எங்கோ அரசியல் காரியமாகப் போயிருந்தான். மல்லிகை எங்கே இப்படி புறப்படுகிருள் ? கணவன் மனைவிப் பூசலா என்ன ? .. ... இருக்காது. அன்பே உருவான அவ்விளங் காதலர்களிடமா பூசல் புகமுடியும் ?

வாயிற்பக்கம் ஆளரவம் கேட்டது. போட்டது போட்ட படியே வாயிற்பக்கம் மல்லிகை ஓடிவந்தாள். புலவர் பிறை சூடியார் வந்துகொண்டிருந்தார். அவருடன் இளமையும் அழகும் பொங்கி வழியும் முகத்துடன் ஒரு இளையபெண்ணும் வந்திருந்தாள். இருவரும் குடிசைக்கு முன்புறமுள்ள கொய்யா மரத்து அடியில் உள்ள மேடையில் உட்கார்ந்திருந்தனர்.

"என்ன மல்லிகை! வரவர கவனிக்கக்கூட நேரமில்லை போலிருக்கிறதே!" என்று சிரித்தபடியே கேட்டார் பிறைசூடியார்.

"அடே! புலவர் ஐயாவா! வணக்கம் ஐயா. உட்காருங்கள் ... .. மிக்க களைப்பா யிருக்கிறீர்களே. இதோ வருகிறேன்" என்று அவசர அவசரமாகக் கூறிய மல்லிகை உள்ளே ஓடினள்.

பிறைசூடியார் பக்கத்திலிருந்த இளம்பெண்ணிடம் 'இளவரசே' என்றார் மெதுவாக. 'என்ன புலவரே' என்ருன் இளவரசன் பாரி. 'மல்லிகையின் மகிழ்ச்சியைப் பார்த்தீர்களா?' என்ருர் புலவர். பெண் வடிவில் இருந்த இளவரசன் முகத்தில் குறுமுறுவல் நிலவியது.

இதற்குள் மல்லிகை இரண்டு அழகிய மரத்தட்டுகளில் தேன்கலந்து பிசைந்த தினைமாவைக் கொண்டுவந்து முன்னே வைத்தாள்.

'காலைநேரம் ; இதைச் சாப்பிடுங்கள்; பிறகு பேசலாம்' என்று உரிமையோடு கூறினள்.

'இம் ... உன்னிடத்திலிருந்து தப்பமுடியுமா நாங்கள் ?' என்று கூறிக்கொண்டே எழுந்து கைகழுவச் சென்ருர் பிறைசூடியார்.

'அதுசரி... இந்தப் பெண் யார் ?'

மல்லிகையின் கேள்வியை முன்னமேயே எதிர்பார்த்தவ ராதலின், 'என் தங்கை பெண்; இத்தனை நாளும் மதுரையில் என் தங்கை இல்லத்தில் இருந்தாள்; இப்போதுதான் இந்த ஏழைப் புலவனைப் பார்க்க வந்திருக்கிருள்' என்ருர் பிறை யார்.

'அப்படியா ? ... தங்கச்சி! நீயும் எழுந்திரு .. இம் ..' நெருங்கிவந்து கையைப் பற்றினுள் மல்லிகை.

இருவரும் உணவு உட்கொள்ளத் தொடங்கினுர்கள். 'இந்த இயற்கைச் சூழலுக்கும், இன்பமான வைகறைக்கும் இனிப்பான உணவுக்கும், ஆகா ! எத்துணைப் பொருத்தம் ! எத்துணைப் பொருத்தம் ! என்று கூறியபடி புலவர் உணவை அள்ளி வாயில் இட்டுக்கொண்டார்.

'ஏதேது ! புலவரல்லவா ? என்ன என்னவோ பேசு கிறீர்கள். எங்களுக்கென்ன புரிகிறது ?'

'அது சரி ! நிலாமுடியன் எங்கே ?'

'எங்கோ வெளியூர் போயிருக்கிருர்; வருகிற நேரந்தான்; நாங்கள்கூட இன்று மதியம் இருவருமாக வெளியூர்போக வேண்டியிருக்கிறது' என்ருள் மல்லிகை.

"வெளியூரா ? எங்கு ? எதற்கு ?"

'பிரான்மலைக்குத்தான். ஒரு முக்கியமான காரியம் ; போய்த்திரும்ப ஒருவாரம் பிடிக்கும்'

'மல்லிகை! உன்னை ஒன்று விசாரிக்கவேண்டும்' என்று கூறிய வண்ணம் எழுந்து கைகழுவிக் கொண்டு வந்து உட் கார்ந்து மீண்டும் பேச்சைத் துவக்கினுர் புலவர்.

"பாண்டிய மன்னர் பூங்காட்டு மண்டபத்தைப் பார்வையிடுவதாகப் பேச்சு இருந்ததே என்ன ஆயிற்று அது?"

'பாண்டிய மன்னரா? ... ஆமாம் ... நேற்றுத்தான் வந்து பார்வையிட்டுச் சென்ருர்'

‘ அப்படியா ’ என்ருள் இதுவரைக்கும் பேசாத புலவரின் தங்கை மகள்.

‘நீயும் நிலாமுடியனும் உடன் சென்றீர்களோ ? ’

‘ சென்ருேம் ; ஒவ்வொரு அறையாகக் கைவிளக்கோடு காட்டிக் கொண்டும் வந்தோம் ’

‘ மன்னர் போகும்போது ... ... ’ புலவரின் ஐயம் விட்ட பாடில்லே; அது வளர்ந்தது.

‘ ஒன்றையும் எடுத்துச் செல்லவில்லே புலவரே ! பறம்பு நாட்டின் பரம்பரை பரம்பரையாக இருந்துவரும் தந்தப்பேழை யைப்பற்றிக் கேட்டார் ; தெரியாத இரகசியம் என்று நாங்கள் கூறிவிட்டோம். ’

‘ அப்பாடா ! என்று பெருமுச்சுவிட்டு நிமிர்ந்து உட்கார்ந் தார் புலவர்.

‘ஏன் புலவர் ஐயா ? பெருமூச்சு விடுகிறீர்கள் ? அதில் உங்களுக்கென்ன அவ்வளவு மகிழ்ச்சி ? ’ இது மல்லிகையின் விஞ.

‘ ஒன்றுமில்லே ; பறம்பு நாட்டு அரசபரம்பரைச் சொத் துரிமை கைமாறி விடுமோ என்று கவலேப்பட்டேன். திரு வருளால் அப்படி ஒன்றும் நேரவில்லே என்று மகிழ்ந்தேன் மல்லிகை!” என்று கூறிவிட்டுக் கடைக்கண் ஞேரத்தால் இளவரசனே நோக்கிஞர் புலவர்; இளவரசன் (பெண்வடிவில்) விழிகளில் மகிழ்ச்சி மலர்ந்திருந்தது.

இந்தச் சமயத்தில் பூக்காட்டு மண்டபத்துக்கு வெளியே உள்ள புதரடர்ந்த பகுதியில் ஒரு குதிரை வரும் குளம்படிச் சத்தம் தெளிவாகக் கேட்டது.

இளவரசன் நிமிர்ந்து உட்கார்ந்தான். அவன் விழிகளில் மருட்சி சிறிதே அரும்பியது.

(தொடரும்)

791

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார் அருளிய

திருவுந்தியார்

திருச்சிற்றம்பலம்

அகளமா யாரு மறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
 தானாகத் தந்ததென் றுந்தீபற. 1

பழக்கந் தவிரப் பழகுவ தன்றி
யுழப்புவ தென்பெணே யுந்தீபற
 வொருபொரு ளாலேயென் றுந்தீபற. 2

கண்டத்தைக் கொண்டு கரும முடித்தவர்
பிண்டத்தில் வாராரென் றுந்தீபற
 பிறப்பிறப் பில்லையென் றுந்தீபற 3

இங்ங னிருந்ததென் றெவ்வண்ணஞ் சொல்லுகே
னங்ங னிருந்ததென் றுந்தீபற
 அறியு மறிவதன் றுந்தீபற 4

ஏகனு மாகி யநேகனு மானவன்
நாதனு மானானென் றுந்தீபற
 நம்மையே யாண்டானென் றுந்தீபற. 5

நஞ்செய லற்றிந்த நாமற்ற பின்நாதன்
றன்செயல் தானேயென் றுந்தீபற
 தன்னையே தந்தானென் றுந்தீபற. 6

உள்ள முருகி லுடனாவ ரல்லது
தெள்ள வரியரென் றுந்தீபற
 சிற்பரச் செல்வரென் றுந்தீபற. 7

792

ஆதாரத் தாலே நிராதாரத் தேசென்று
மீதானத்தே செல்க வுந்தீபற
விமலற் கிடமதென் றுந்தீபற. 8

ஆக்கிலங் கேயுண்டா யல்லதங் கில்லையாய்ப்
பார்க்கிற் பரமதன் றுந்தீபற
பாஃவனைக் கெய்தாதென் றுந்தீபற. 9

அஞ்சேயஞ் சாக வறிவே யறிவாகத்
துஞ்சா துணர்ந்திருந் துந்தீபற
துய்ய பொருளீதென் றுந்தீபற. 10

தாக்கியே தாக்காது நின்றதோர் தற்பரம்
நோக்கிற் குழையுமென் றுந்தீபற
நோக்காமல் நோக்கவென் றுந்தீபற. 11

மூலை யிருத்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியரென் றுந்தீபற
தவத்திற் றலைவரென் றுந்தீபற. 12

ஓட்டற்று நின்ற வுணர்வு பதிமுட்டித்
தேட்டற் றிடஞ்சிவ முந்தீபற
தேடு மிடமதன் றுந்தீபற 13

பற்றை யறுப்பதோர் பற்றினைப் பற்றில்அப்
பற்றை யறுப்பரென் றுந்தீபற
பாவிக்க வாராரென் றுந்தீபற. 14

கிடந்த கிழவியைக் கிள்ளி யெழுப்பி
யுடந்தை யுடனேநின் றுந்தீபற
வுன்னையே கண்டதென் றுந்தீபற. 15

உழவா துணர்கின்ற யோகிக ளொன்றொடுந்
தழுவாம நிற்பரென் றுந்தீபற
தாழ்மணி நாவேபோ லுந்தீபற. 16

திருச்சிலம் போசை யொலிவழி யேசென்று
நிருத்தனைக் கும்பிடென் றுந்தீபற
நேர்பட வங்கேநின் றுந்தீபற. 17

மருளுந் தெருளு மறக்கு மவன்க
ணருளை மறவாதே யுந்தீபற
அதுவே இங்குள்ளதென் றுந்தீபற 18

கருது வதன்முன் கருத்தழியப் பாயு
மொருமகள் கேள்வனென் றுந்தீபற
வுன்ன வரியனென் றுந்தீபற. 19

இரவு பகலில்லா வின்ப வெளியூடே
விரவி விரவிநின் றுந்தீபற
விரைய விரையநின் றுந்தீபற. 20

சொல்லும் பொருளும் சொல்லா தனவுமங்
கல்லனு யானுமென் றுந்தீபற
அம்பிகை பாகனென் றுந்தீபற. 21

காற்றினை மாற்றிக் கருத்தைக் கருத்தினு
ளாற்றுவ தாற்றலென் றுந்தீபற
அல்லா தல்லலென் றுந்தீபற 22

கள்ளரோ டில்ல முடையார் கலந்திடில்
வெள்ள வெளியாமென் றுந்தீபற
வீடு மெளிதாமென் றுந்தீபற. 23

எட்டுக்கொண் டார்தமைத் தொட்டுக்கொண்டே நின்றார்
விட்டா ருலகமென் றுந்தீபற
வீடேவீ டாகுமென் றுந்தீபற. 24

சித்தமுந் தீய காரணமுஞ் சித்திலே
யொத்ததே யொத்ததென் றுந்தீபற
வொவ்வாத தொவ்வாதென் றுந்தீபற. 25

உள்ளும் புறம்பும் நினைப்பறி னுன்னுள்ளே
மொள்ளா வமுதாமென் றுந்தீபற
முளையாது பந்தமென் றுந்தீபற. 26

அவிழ விருக்கு மறிவுட னின்றவர்க்
கவிழுமிவ் வல்லலென் றுந்தீபற
அன்றி யவிழாதென் றுந்தீபற. 27

வித்தினைத் தேடி முளையைக் கைவிட்டவர்
பித்தேறி னூர்கனென் றுந்தீபற
பெறுவதங் கென்பெணே யுந்தீபற. 28

சொல்லு மிடமன்று சொல்லப் புகுமிட
மெல்லை சிவனுக்கென் றுந்தீபற
என்றுல்நா மென்செய்கோ முந்தீபற. 29

வீட்டி லிருக்கிலென் னுட்டிலே போகிலென்
கூட்டில்வாட் சார்த்திநின் றுந்தீபற
கூடப் படாததென் றுந்தீபற. 30

சாவிபோ மற்றச் சமயங்கள் புக்குநின்
ருவி யருதேயென் றுந்தீபற
அவ்வுரை கேளாதே யுந்தீபற 31

துயரியங் கடந்தவித் தொண்டர்க்குச் சாக்கிரந்
துரியமாய் நின்றதென் றுந்தீபற
துறந்தா ரவர்களென் றுந்தீபற. 32

பெற்றசிற் றின்பமே பேரின்ப மாமங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற
முளையாது மாயையென் றுந்தீபற. 33

பேரின்ப மான பிரமக் கிழத்தியோ
டோரின்பத் துள்ளானென் றுந்தீபற
வுன்னையே யாண்டானென் றுந்தீபற. 34

பெண்டிர் பிடிபோல ஆண்மக்கள் பேய்போலக்
கண்டாரே கண்டாரென் றுந்தீபற
காணுதார் காணுரென் றுந்தீபற. 35

நாலாய பூதமும் நாதமு மொன்றிடி
னுலா நிலையாமென் றுந்தீபெற
நாதற் கிடமதென் றுந்தீபற. 36

சென்ற நெறி யெல்லாம் செந்நெறி யாம்படி
நின்ற பரிசறிந் துந்திபற
நீசெயல் செய்யாதே யுந்தீபற. 37

பொற்கொழுக் கொண்டு வரகுக் குழுவதென்
அக்கொழு நீயறிந் துந்தீபற
அறிந்தறி யாவண்ண முந்தீபற. 38

அதுவிது வென்று வனைத்தறி வாகும்
அதுவிது வென்றறிந் துந்தீபற
அவிழ்ந்த சடையாரென் றுந்தீபற. 39

அவனிவ னென தவனருளா லல்ல
திவனவ னகானென் றுத்தீபற
என்று மிவனேயென் றுந்தீபற. 40

முத்தி முதலுக்கே மோகக் கொடிபடர்ந்
தத்தி பழுத்ததென் றுந்தீபற
அப்பழ முண்ணுதே யுந்தீபற. 41

அண்ட முதலா மனைத்தையு முட்கொண்டு
கொண்டத்தைக் கொள்ளாதே யுந்தீபற
குறைவற்ற செல்வமென் றுந்தீபற. 42

காயத்துள் மெஞ்ஞானக் கள்ளுண்ண மாட்டாதே
மாயக்கள் ளுண்டாரென் றுந்தீபற
வறட்டுப் பசுக்களென் றுந்தீபற 43

சிந்தையி னுள்ளுமென் சென்னியி னுஞ்சேர.
வந்தவர் வாழ்கவென் றுந்தீபற
மடவா ளுடனேயென் றுந்தீபற. 44

வைய முழுது மலக்கயங் கண்டிடும்
உய்ய வந்தானுரை யுந்தீபற
வுண்மை யுணர்ந்தாரென் றுந்தீபற. 45

திருச்சிற்றம்பலம்

இத்திருவுந்தியாரும், தருமபுர ஆதீனத்தில் கீழைக் கலைக் கல்லூரி மாணுக்கர் எல்லோராலும் கற்றுணர்ந்து, நாள்தோறும் வழிபாட்டில் ஓதப்பெறுகின்றது.

ஆவணிமூலத் திரு (முதல்) நாள் இயற்றமிழ் விழாவில்



கவியரங்கத்தில் இருந்த பாவலர்கள்

ஆவணிமூலத் திரு (இரண்டாவது) நாள் இசைத் தமிழ் விழாவில்



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும்,
அவைத்தலைவர், ஸ்ரீமான். ஏ. எஸ். பி. ஐயர், எம். ஏ., ஐ. சி. எஸ். அவர்களும்.

ஆவணிமூலத் திரு (இரண்டாவது) நாள் இசைத்தமிழ் விழாவில் இன்னிசையரங்கம்

தருமபுர ஆதீன வித்துவான் இசையரசு, திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள்.

ஆவணிமூலத் திரு (மூன்ருவது) நாள் நாடகத் தமிழ் விழாவில்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும், அவைத்தலைவர்,
மதுரை, திரு. பொன்னம்பலதியாகராஜன் பி. ஏ. பாரட்லா, அவர்களும் "செந்தமிழ்க்காவலர்"
செட்டியார் அவர்களும், தஞ்சை நீதிபதி உயர்திரு. எஸ்.எ. ஐயாசாமி செட்டியார் அவர்களும்.

796

தருமபுரம் ஆதீனம்

ஆவணிமூல முத்தமிழ் விழா

கல்வி நிலையங்களின் ஆண்டு விழா

முதல்நாள்:

இயற்றமிழ் – கவியரங்கு

26—8—55 அன்று மாலை 5-மணிக்கு மாயூரம் அன்பநாதபுரம் வகையார் அறத்துறைக்கல்லூரி முதல்வர் உயர்திரு அ. இராமநாதம் பிள்ளை அவர்கள் எம். ஏ. தலைமையில் தொடங்கியது.

பேச்சாளர்: **திரு. G சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள்**
தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர்.

விரிவுரைச் சுருக்கம்:

தமிழ் என்றால் என்ன? தமிழுக்கு இனிமை என்று பெயர். தனக்குள்ளே இனிமையை அமைத்துக்கொண்டு இருக்கிறது. தமிழ் சிறப்பாக 'ழ' கர ஒலி தமிழுக்கே உரியது. திராவிடம் என்ற சொல் மருவித் தமிழாயிற்று என்பர் கால்டுவெல் முதலியோர். தம் + ழ் = தமிழ் தம் என்ற சொல் உடைமைப் பொருள் குறிக்கிறது. தமையன், தமப்பன் தமக்கை என்பதுபோல. தமிழ் என்றால் இனிமை என்ற பொருளில் இருப்பதாகச் சிலர் கருதுகிறார்கள். அது பொருந்தாது. குழவி முதல் கிழவி வரை சிறப்பு 'ழ' கரத்தையே கொண்டுள்ளது.

"எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல்."

சிவபெருமானுக்கொப்பத் தமிழ் வளர்ந்து கொண்டே இருக்கிறது. ஆண்டவனை மொழியோடு தொடர்பு படுத்திக் கூறும் வர்க்கம் எந்த மொழியிலுமே கிடையாது. மதுரைச் சொக்கர் இயற்றமிழே வடிவானவர். இறைவனைக் காண்பது, பாடுவது, இறைவனோடு நகை யாடி விளையாடுவது தமிழ் மொழிக்கும் தமிழ்நாட்டுக்குமன்றி வேறெதற்கும் கிடையாது. பசுந்தமிழ் வேட்கையால் சங்கம் முழங்கிய மதுரைக்கு இறைவன் வந்தான்.

உள்ளத்து எழும் உணர்வை, எழுச்சியை வெளியிடுவதற்கு மொழி தமிழைக்கற்ருல் கடவுள் பக்திதானே வரும். தமிழன் நாத்திகன் அல்லன். தமிழைத் தொட்ட இடத்திலெல்லாம் சொட்டச் சொட்ட இனிக்கும், இம்மடத்து அடியார்களுள் ஒருவராகிய குமரகுருபர சுவாமிகள்,

நறை பழுத்த துறைத்தீந்தமிழின் ஒழுகு நறுஞ் சுவையே..........
என்று பாடுகிருர்.

விருந்து செய்து உபசரித்தல் தமிழர்க்கே உரித்தான பண்பாடு ஆண்டவனேடு கூடிய பண்பாடு மிகவும் சிறந்தது. காவி யரசனை சொட்டச் சொட்ட சிந்தாமணி போன்ற நூல்களைச் சமணர்கள் செய்த போதும் சமணர்கள் தமிழ்ப்பயனை அறியவில்லைபோலும், என்று ஞான சம்பந்தர் பாடுகின்ருர். இறைவன் திருவடியை அடையச் செய்யும் கல்வியே உண்மைக் கல்வியாகும். ஆண்டவனையும் மொழியையும் பிணைத்து இருக்கும் ஒரு மொழி உண்டென்ருல் தமிழ் மொழியேயாகும்.

முத்தமிழ் மூன்றிலும் வல்லவன் என்பதைக் காட்டுவதற்காக நெற்றியில் வெண்ணீற்றை மூன்று கோடாக அணிந்திருந்தான். குறுந் தொகை, அகநானூறு போன்ற நூல்கள் காதலைப்பற்றிச் சொல்லியிருந் தாலும் எளியதுறை வாயிலாக வாழ்வைக் காட்டியுள்ளன. இயல்பினை எடுத்துக் கூறும் இலக்கியம் இயற்றமிழாகும். அதாவது மக்கள் மனத்துள் தோன்றும் உணர்வு, எழுச்சி இவற்றைத் தெளிவிப்பது இயற்றமிழாகும். உண்மையான கவி என்பது எது? சிலப்பதிகாரத்தில் குரவைப்பாட்டில் நப்பின்னை, கண்ணன் இவர்கள் இருவரும் மனத்தைப் படுத்து நிற்கும் உள்ளத்துணர்வைத் தெரிவிப்பது போன்றவையே உண்மையான கவி. இரண்டு முறை வள்ளுவர் கூறிய ஒரே கருத்து "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு," "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு".

"ஆவணி மூலத்தில் ஆண்டவனருள்" என்ற தலைப்பின்கீழ் ஒன்பது புலவர்கள் கவியரங்கேற்றினர். கவியரங்கேறிய கவிஞர்கள் திரு வானைக்காக் கவிவாணர் திரு. க. அப்புலிங்கம் அவர்கள், திருச்சிக் கவிஞர் திருலோக சீதாராம் அவர்கள், வி. புதூர்க் கவிஞர் திரு. கி. வேங்கடசாமி ரெட்டியாரவர்கள், மயிலம் கவிஞர் பேராசிரியர், திரு. சிவலிங்கனுர் அவர்கள், தேவகோட்டை பாலகவி வயினாகரம், பே. இராம நாதன் செட்டியார் அவர்கள், ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர்களும் கவிஞர் களுமாகிய திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள், திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை அவர்கள், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள், திரு. சொ. சிங்காரவேலனுர் அவர்கள்.

798

26—8—55 இரண்டாம் நாள் :

இசைத்தமிழ்.

தலைவர்: திரு. A. S. P. அய்யர் எம், ஏ., ஐ. சி. எஸ். அவர்கள்
நடுவர். மாநில அறங்கூறவையம், சென்னை.

தலைமையுரைச் சுருக்கம்:

ஆகமப் பாடசாலை மாணவர்கள் தேவாரம் பாடினர். இசைக்கல்லூரி மாணவரால் இசைவிருந்து அளிக்கப்பட்டது. சாஸ்திரங்கள் வேதங்கள் அனைத்தையும் இசைத்தமிழில் எழுதினர். உழவர் முதல் மகாப்பிரபு வரை கவியாக இருக்கலாம். கம்பர் தாயுமானவர் வள்ளுவர் இசைத் தமிழில் வல்லவர்கள். மனததிற்கு உகந்ததாகச் செவியில் ஒலிக்கும் இசை இசைத்தமிழாகும். தென்னாட்டில்தான் பெரிய கிரந்தம் இருந்தது. உலகில் உள்ள ஜந்துக்களிலெல்லாம் மனுஷஜந்து சிறந்திருப்பதால் மனுஷஜந்துவின் புத்தி பல வழிகளில் செல்கிறது. அக்கிரமமான ஜந்து வாக மனிதன் இருக்கிறான்.

புரிந்தாலும்சரி புரியாவிட்டாலும்சரி இசைத்தமிழை நாம் ருசிக்கலாம், சமஸ்கிருதம் ஓர் பித்ருபாஷை. மாதுரு பாஷையல்ல.

பரமேஸ்வரா ! மகாதேவா என்ற சொற்களையே வடநாட்டார் பயன் படுத்தித் துதிக்கின்றனர். நமசிவாய ! நடராசன் போன்றவற்றைக் கூறித் தென்னாட்டார் வணங்குகின்றனர். பெயரை மாற்றுவது வேண்டாத செயல்.

உயர்திரு K. கோவிந்தராச பிள்ளை B. A., B. T., அவர்கள்
விரிவுரையாளர், அரசினர் கல்லூரி, குடந்தை

விரிவுரைச் சுருக்கம்:

கலை என்பது மிகச் சிறந்தது. அது வாழ்வில் இயைபுடைத்து என்று பெரியோர் கூறுவர். இசைக்கும் கவிதைக்கும் அடிப்படை ஒழுங்கு சம்பவம். செக்கு ஆடும்போது ஓசை ஏற்பட்டாலும் அது நமக்கு இன்பம் தருவதில்லை. ஆகவே இசையினுடைய சொற்கள் பொருளைத்தந்தால் தான் இன்பம் ஏற்படுகிறது. சொற்களைச் சேர்க்க வேண்டிய முறையில் சேர்த்துப் பக்குவமாக உணர்ச்சி ஊட்டக்கூடிய முறையில் அமைப்பதே சிறந்த கவிதையாகும். இசை சேர்ந்து மிளிர்வது தமிழுக்கே உரித்து. 'தமிழுக்கு அமுது' என்று பெயர். அது எங்கள் உயிருக்கு நேர்

" பல்லுயிரும் பலவுலகும் படைத்து அளித்து............
.......................இளமைத் திறம் வியந்து வாழ்த்துதுமே "

என்ற பாடலின் இசை யமைப்பை என்னெனப் புகழ்வது? பாவென்ற சொல் பரந்துபட்ட ஓசையுடையது என்ற பொருளைத்தரும். உலகில் இல்லாத சிறந்த ஒலியையுடைய 'ழ'கரம்' இசையைக்குறிக்கும் சொற் களுக்கும்; இன்ப நாளைக் குறிப்பதற்கும், இசைக்கருவிகளுக்கும் நம் முன்னோரால் அமைக்கப்பட்டிருக்கிறது.

குழல் இனிது யாழ் இனிது என்பதம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர். குழந்தை, விழா, கிழவி, யாழ், முழவம் போன்ற இனிமை யோசையைத் தருவனவற்றிற்கு இனிமை தரும் ழகரத்தையே முன்னோர் அமைத்துள்ளனர். தமிழைக் காக்க ழகர வொலியைச் சிறக்க ஒலிக்க வேண்டும்.

தமிழில் இசைபற்றி இலக்கணம் வகுத்திருந்தனர். இலசக்கருவி களும் இருந்தன. இராவணன் இசையில் வல்லுநன். அவனது கொடி வீணைக்கொடி. நரம்பு, தோல் இசைகளின் கருவிப்பொருளாக இருந்தன.

நரம்பு — யாழ்;
தோல் — முழவம்.

தொல்காப்பியச் சூத்திரத்துள் 'யாழ்' நானிலங்களுக்கும் கருப் பொருளாகக் கூறப்பட்டுள்ளது.

பழமலை விருத்தாசலமாகவும்; மறைக்காடு வேதாரண்யமாகவும் மாறியபோது இசைக்கருவிகளும் உருவிலும் பெயரிலும் மாற்றம்பெற்றன. பரிபாடல் ஓர் பழைய இசைநூல்.

'கதிரவன் மறைந்தனனே காரிருள் பரந்ததுவே'

என்ற பாடலை இசையொழுங்கோடுபாடி மகிழ்வித்தனர். எவ்வுறுப் பையும் அடக்கலாம் கண்ணை அடக்க முடியாது. கறுப்பு நிறம் சிறந்தது. கரிய நிறத்தவரைக் கண்டதும் இராமனை எண்ணிச் சீதை மகிழ்ந்தாள்.

அறுவகைப்பருவம் தமிழ் நாட்டிற்கே உரித்து. வேறு நாட்டிற்கு இப்பருவங்கள் கிடையா.

'கதிர் விழுங்கி மதி உமிழ்ந்து; —என்கிறது சிலம்பு.
'சீதப்புனலுண்டு எரியைக் கலுழும்; —என்கிறது திருமுறை.

ஒன்றை உட்கொண்டு ஒன்றை வெளியிடுதலுக்கு எடுத்துக்காட்டு. நமக்கு எப்பொருள் பிடிக்கிறதோ அப்பொருளே கடவுளுக்கும் பிடிக்கும். அறுசுவையோடு உண்ணல் தமிழர் பண்பு வெற்றிலை போடல் தமிழர் பண்பாடு. அகச்சுவை ஏழாவது சுவையாகும். ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வோர் இன்பம் கிடைக்கிறது 'தம் மக்கள் சிறுகை அளாவியகூழ். அமிழ்தினும் இனிதாம். மூவர்களால் பாடிய தேவாரம் பண்ணமைந்தது' வில்லுடையான் சேரன். நெல்லுடையான் சோழன். நிலையான தமிழுடையான் பாண்டியன்.

" மாசில் வீணையும்......................
ஈசன் எந்தை இணையடி நீழல்'

ஐம்புலனுக்கும் இன்பம் தந்தன. அங்கு 'மாசில்வீணை'யைக் காணலாம்.

திருஞானசம்பந்தரைச் சேக்கிழார் "ஞானத்தின் திரு வுரு நான் மறையின் தனித்துணை மண்ணில் வளர் மதிக்கொழுந்து என காணும் பொருளைக் கானத்தின் எழுபிறப்பு எனக் காணமுடியாத பொருளுக்கு உருவகப் படுத்தியுள்ளார்.

ஆழ்வாராதிகள் பாடல்களிலும், இசைப் பகுதிகள் உண்டு. பெரியாழ்வார்;

" சிறுவிரல்கள் தடவிப் பரிமாற, செங்கண் கோட, செய்ய வாய் கொப்பளிப்ப............சித்திரங்கள் போல நின்றன.

(இப்பொழுது திரு. இராமநாதம் பிள்ளையவர்கள் கையால் மகா சந்நிதானம் அவர்கள் பட்டாடை போர்த்துக் கோவிந்தராசனுரைச் சிறப்பித் தார்கள்.)

இருந்தமிழே உன்னுல் இருந்தேன். தமிழை ஓதியவர் கெட்டதே கிடையாது. 'வாழ்க தமிழ் மொழி'

" திங்கள் முடி சூடும்மலை தென்றல் விளையாடும் மலை "

என்ற குறத்தைக்கூறி "வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்" எனக்கூறி அமைந்தார்.

அடுத்துக் கல்லூரி முதல்வர் திரு. கி. இராமலிங்கம் M. A, அவர்கள் நன்றிநவில, திரு. M M. தண்டபாணி தேசிகர் அவர்களது இசைவிருந்து நிகழ்ந்தது. திரு. தண்டபாணி தேசிகர் அவர்கள் இன்றைய இசை உலகத்து ஒளி ஞாயிறு அல்லவா? அவர்கள் இசை விருந்தென்றுல் சொல்லவும் வேண்டுமா? வளமாக இருந்தது இசை இன்பம்.

28—8—55 மூன்றும் நாள் :

நாடகத்தமிழ்.

தலைவர்: உயர்திரு பி. டி, இராசன் அவர்கள்
எம். ஏ., பார்-அட்-லா எம், எல், ஏ,

பேச்சாளர் உயர்திரு கு. பரமசிவம் அவர்கள் எம், ஏ,,

ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் யாவரையும் வரவேற்றுப் பேசுகையில், மகாசந்நிதானம் அவர்கள், முன், திருவாளர்கள் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர், இராஜேஸ்வரி அம்மையார், ரா. பி. சேதுப் பிள்ளை, கி. வா. ஜகந்நாதன் முதலியவர்களுக்கு முறையே பட்டங்களை வழங்கி யருளிச் சிறப்பித்துள்ளார்கள் என்று தெரிவித்துத் தலைவர், திரு. பி. டி. இராசன் (அவர்களைப்பற்றியும்) அவர்களுடைய தொண்டைப் பற்றியும் கூறி அமைந்தார்கள்.

அடுத்துக், தலைவர் அவர்கள் தம் முன்னுரையில்:- முதற்கண், தமக்குத் தலைமை வகிக்க நேர்ந்தது குறித்துத் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

மதுரைத் தமிழ்ச்சங்கமானது தோன்றி 50 ஆண்டுகள் ஆகின்றன. தூங்கின தமிழ் மக்களை எழுப்பி நிலைமையை அறிவுறுத்தி வெள்ளிவிழாக் கொண்டாடுதற்கு ஒரு தீர்மானம் செய்யப்பெற்றிருக்கிறது. அந்த விழா வானது இயல், இசை, நாடகம் என ஒரு வாரம் வரை சிறப்புற நிகழ்த்தப் பெறும். அப்போது சிறந்த தமிழ்ப் புலவர்கள், தொண்டர்கள் முதலிய வர்க்குச் சிறப்புச் செய்தல் வேண்டும். அதற்கு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் திருவருள் வேண்டும் என்று வேண்டிக் கொண்ட தோடு தம்மைத் தலைமை வகிக்கப் பணித்தமைக்கு தமது நன்றியை ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கட்குத் தெரிவித்துக் கொண்டு தமது தலைமை உரையை முடித்தார்கள்.

பின்னர், துவக்க உயர்நிலைப்பள்ளி மாணவிகளின் கும்மி கோலாட்டம் சிறப்புற நிகழ்ந்தது. அடுத்து, வடமொழிப் பகுதி மாணவர்களால் தோத்திரமும் சொல்லாடலும் நிகழ்ந்தன.

பின், கல்லூரி முதல்வர் அவர்கள் இங்குள்ள கல்வி நிலையங்கள் என்னென்ன என்பதைக்கூறி கல்லூரியின் ஆண்டறிக்கையை வாசித் தார்கள். அத்துடன் விழாவிற்கு வந்திருந்த வாழ்த்துச் செய்திகளையும் வாசித்தார்கள்.

அடுத்துக், கீழைக்கலை உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. K. முருகையாப் பிள்ளை அவர்கள் ஆண்டறிக்கையை வாசித்தார்கள். திரு. சீநிவாசன் அவர்கள் குருஞான சம்பந்தர் துவக்க உயர்நிலைப் பள்ளியின் ஆண்டறிக்கையை வாசித்தார்கள்.

பின்னர் ஆரம்பபாடசாலை ஆண்டறிக்கையை ஸ்ரீசிவாச்சாரியார் வாசித்தார்கள். அடுத்துத் தேவாரப் பாடசாலையின் ஆண்டறிக்கையை திரு. வேலாயுத ஓதுவார் அவர்கள் வாசித்தார்கள். இசைக் கல்லூரி ஆண்டறிக்கை திரு. சம்பந்தம் பிள்ளை அவர்களால் வாசிக்கப்பெற்றது.

குருஞான சம்பந்தர் துவக்க உயர்நிலைப்பள்ளி மாணவிகளால் ஓர் நகைச்சுவைக் காட்சியும் நடுநிலைப்பள்ளி மாணவர்களால் பல நகைச் சுவை காட்சிகளும் நிகழ்த்தப் பெற்றன,

அடுத்து எல்லாக் கல்வி நிலையங்களின் மாணவர் மாணவியர்கட்குத் தலைவர் அவர்களால் பரிசுகள் வழங்கப் பெற்றன! பின், திரு. கு. பரமசிவம் அவர்கள் 'நாடகத் தமிழ் நலம்' என்பது பற்றி ஓர் விரிவுரை வழங்கி னார்கள்.

பேச்சின் சுருக்கம்:

தமிழ் என்ற சொல்லின் பொருள் பல. தமக்கே உள்ளது; தம்மை இழுக்கக்கூடியது என்பனவாகும். நாடகத்தமிழ் தோன்றியகாலம். கி. பி. 5-ம் நூற்றாண்டில் கூத்து முதலியன எழுந்தன! தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே நாடகத் தமிழை மக்கள் போற்றி வந்தனர். நாடகத் தமிழ் பற்றிய இலக்கணமும் மக்கள் அறிந்திருந்தனர் என்பது "நாடக வழக்கினும் இயல் வழக்கினும்" என்ற சூத்திரத்தால் புலனா கின்றது. நாடகப் பண்புடைய இலக்கணம், சிலப்பதிகாரம்; நாடக ஆசிரியர் காலத்தைப் பொருட்படுத்துவதே கிடையாது. காவிய பாத்திரத் திற்கும் நாடக பாத்திரத்திற்கும் வேறுபாடு உண்டு! 'நாடகம்' என்பது வட சொல் அன்று; நாட்டின் அகத்தைப் படம் பிடித்துக்காட்டுவது. நட என்பது வட சொல்லானால் நாடகம் என்பதும் வட சொல் ஆகும். (இது பேசியவர் கருத்து).

கோவலன் தன்னிகரில்லாத் தலைவனாகக் காணப்படுகிறான். கண்ணகி தன்னிகரில்லாத் தலைவியாக இருந்தபோதும் தெய்வத்தன்மை வாய்ந்தவளாகக் காணப்பெறுகிறாள். மண் விண்ணாகிறது. மனிதன் தெய்வமாகிறான் என்பது இதனால் தெரிகிறது. கண்ணகி தான் தெய்வந் தொழுவதை மறுத்துக் கணவனையே தெய்வமாகக் கண்டு தானும் தெய்வமானாள்! சிலப்பதிகாரத்தில் காவியச் சிறப்பைவிட நாடகச் சிறப்பே சிறந்து காணப்பெறுகிறது.

'நாடகத்தால் உன் அடியார்போல் யான் நடிப்பேன்'' —என்ற திருவாசகத்தாலும் நாடக மாடியதற்கு மானியம் விடப்பட்ட செய்தி யாலும் நாடகம் சிறந்து போற்றப்பெற்றது. என்பது தெளிவாகிறது. தற்காலத்தில் நாடகத்தமிழ் என்ற முறையில் உள்ள நூல் மனோன்மணீயம் ஒன்றே யாகும்.

ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்களின் அருளுரை:

பி. டி. இராசன், ஏ. சி. செட்டியார் அவர்களையும் வெள்ளியம்பலம் பொன்னம்பலம் வீற்றிருப்பதுபோல் இருக்கிறது என்று கூறினார்கள்,

'ஆலம் தரித்த லிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்'

ஆவணிமூலத் திருநாளில் செட்டியார் அவர்களுக்குப் பட்டம் வழங்குவது திருவருள்தான். செட்டியார் அவர்கள் அதிகமான பட்டங்கள் பெற்றிருக்கிறார்கள். சொக்கலிங்கப் பெருமானுடைய திருவருளால் சொக்கலிங்கப்பெருமான் சந்நிதியில் செந்தமிழ்க்காவலர் என்ற பட்டம் கிடைத்ததென்றால் அவர் முன்னோர்கள் செய்த செய்த தவப்பயன்தான் காரணம். இப்பேறுபெற்றவர்கள்தான் செந்தமிழை மாணவர்களிடமும் மக்களிடமும் சிறந்த முறையில் கற்பிக்கத்தகுதி உள்ளவர்கள்.

இந்தத்திருநாளிலே செந்தமிழ்ப் பட்டம் கொடுப்பது மிகப்பொருத்த மானது. என்று கூறியருளிப் பதக்கத்தைச் சூட்டித் திரு. செட்டியாரவர் களுக்குப் பொன்னாடையும் போர்த்தருளினார்கள்.

பி. டி. இராசன் அவர்கள் ஈடுபட்டுள்ள இயக்கம் மிகப்பயனுடையது. அதற்குத் தமிழ் மக்கள் யாவரும் ஒத்துழைக்க வேண்டும். சங்கம் ஆரம்பித்து 50 ஆண்டுகள் ஆகின்றன. அதற்கு யாவரும் தலைக்கு ஒரு அணா கொடுத்தாவது ஆதரித்தல் மிகுந்த பயனைத்தரும். அதற்கு என்னால் ஆன உதவியும் செய்வேன்.

மண்சுமந்த சொக்கலிங்கப் பெருமான் மதுரையில் பிட்டுக் கூலிக்காகவா மண் சுமந்தார் இல்லை.

டாக்டர், அ சிதம்பரநாதஞ் செட்டியார் அவர்களின் பேச்சு:

(அண்ணாமலைப் பல்கலைகழகத் தமிழ்க்கலைத் துறைத் தலைவர்.)

சொக்கர் திருவருளினாலே ஆதீனத்துத் தலைவர் அவர்கள் எனக்குச் 'செந்தமிழ்க்காவலர்' என்ற பட்டம் அளித்துள்ளார்கள். இதற்குத் தகுதியுடையவர்கள் பலர் இருந்தார்கள். இருக்கின்றார்கள். இதை அளித்த தலைவர் அவர்களே ஒரு பெரிய 'செந்தமிழ்க்காவலர்' ஆவார்கள்.

மறைமலை அடிகள், சுந்தரம் பிள்ளை போன்றவர்களுக்கு அளித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். தலைவர் அவர்கள் சைவத்தையும் தமிழையும் புரக்கின்றவர்கள் அவர்களே. ஒரு செந்தமிழ்க்காவலர் ஆவார்கள். அவர்கள் தாம் இதை (பட்டம்)அளிக்கத் தகுதியுள்ளவர்கள். என் முன்னோர்கள் செய்த தவப்பயன்தான் காரணம். திருநாவுக்கரசர், மணிவாசகர் போன்றவர்கள் எப்பட்டமும் பெற்றார்கள் ஒன்றும் கூறமுடியாது. கண்ணப்பருக்குப் பெயரிட்டவரும் சொக்கலிங்கமே. இம்மடம் பழுத்த தமிழ்மரபில் வேளாண்குலத்துக் குருஞானசம்பந்தரால் துவக்கப்பட்டது. தமிழ்நாட்டுக் கோயில்களில் தமிழ் மொழியில் அர்ச்சனை செய்யவேண்டும். தமிழ்மொழி வாயிலாகச் செய்ய இயலாதென்றும், இறைவன் ஏற்கமாட்டானென்றும் கூறும் பழக்கம் ஒழியவேண்டும். தெய்வத்தோடு இயைபு படுத்தும் பழக்கம் தமிழ் மொழிக்குக் கிடையாது என்ற இழிவை நீக்க வேண்டும்.

தம் உயிர், உடல், உள்ளம் உணர்வு அத்தனையும் ஆண்டவனுக்கே ஆக்கிய மாணிக்கவாசகருக்குக் கனவில் கூறியதுபோல் மகாசந்நிதானத்திற்கும் ஒருநாள் கனவில் தமிழில் அர்ச்சனை செய்யும்படி சொல் என்று ஆண்டவனை வேண்டிக்கொண்டே வந்தேன். கூறின திருவருள் எனக்குச் செந்தமிழ்க் காவலர் என்ற பட்டம் கொடுத்தது உண்மையானால் திருவருள் நடமாடுமிடத்தில் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும். அற்புதச் செயல்செய்யும் சக்தி தமிழுக்கும் உண்டு. 'அமாவாசை நீங்கிப் பௌர்ணமி வந்தது' அபிராமி அந்தாதியின் பெருமைக்கு எடுத்துக்காட்டு தருமையருள் பெறுகோவிலில் முதலில் தமிழில் அர்ச்சனை செய்தால் முதல் தெய்வமாகத் தமிழ்நாட்டு மக்கள் சந்நிதானத்தை வணங்குவர்.

திருக்குறள் உரைவளமும் குறிப்புரையுடைய திருவாசகமும் வெளியிட்ட இம்மடத்தின் தனிச்சிறப்பிற்கோர் எடுத்துக்காட்டு. தேவாரப் பாடசாலை மாணவரைக்கொண்டு கோவிலில் தமிழில் அர்ச்சனை செய்யும் நாள் எந்நாளோ அதுவே பொன்னாளாகும். தலைமை, வாய்ப்பு, நம்பிக்கை, அதிகாரம் உடையவர்கள் சந்நிதானம் அவர்கள் ஒருவரே ஆவார்கள். ஆகவே இவர்கள் வழிகாட்டியாக இருப்பார்கள் என்று கூறி முடித்தார்.

பாராட்டுரை

திரு. P. B K. இராஜா சிதம்பர ரெட்டியார் M. L. A. அவர்கள் பேச்சு:

இது ஓர் நல்நாள்; தமிழ் நாள்; சோமசுந்தரர் அருள் சுரந்த நன்னாள். தமிழ் வளரவேண்டுமென்ற எண்ணமுடைய செட்டியாருக்குச், 'செந்தமிழ்க்

காவலர்' என்ற பட்டம் அளித்தது சிறப்புடைத்து. தமிழ்ப்பண்பு வளர வேண்டும். சந்நிதானத்தின் அன்பினல் தமிழ், உலகம் முழுதும் பரவி வளர இறைவன் அருள் செய்வான் என்று கூறி முடித்தனர்.

தலைவர் முடிவுரை:

குறிப்பிட்ட நேரத்தில் செய்ய ஆரம்பித்தது, ஒழுக்கம். பழக்க வழக்கம் இம்மூன்றும் சிறந்தன. அதன்படி ஆறு கல்வி நிலையங்களைக் காலமறிந்து அமைத்தனர். ஊக்கத்தை வளர்க்கும் சின்னமாகப் பரிசு அமைந்துள்ளது. இவர்கள் உலகப் பரிசுகள் வாங்கி, பெற்றோருக்கும், வளர்த்த கல்வி நிலையங்களுக்கும் உயர்வைத் தரவேண்டும். வருங் காலத்தில் பெண்களே ஆட்சி செய்ய தயாராகவேண்டும். வந்திக்காக அருள் செய்ததுபோல் தமிழ்ப் பற்றிற்காக மதுரைச் சொக்கன் அருள் செய்துள்ளான். அர்ச்சனை செய்யவேண்டிய சாத்திரத்தைத் தமிழில் ஆக்கிக்கொண்டு, மக்களுக்குப் புரியும் அளவில் ஓதவேண்டும். திடீ ரென்று செய்யமுடியாது. மெதுவாக இம்மாறுதல் ஏற்படும், யாவர் களுக்கும் நன்றி சொல்லித் தமிழ் வாழ்க என்று சொல்லித் தம்முடி வுரையை முடித்தனர். திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் நன்றி நவிலக் கூட்டம் முடிந்தது. பின்னர் 'மனுநீதிச் சோழன்' என்ற நாடகம் கல்லூரி மாணவர்களால் நடிக்கப்பட்டது. நாடக முடிவில் தஞ்சை மாவட்டம் நடுவர் திரு. ஐயாசாமி செட்டியாரவர்கள் நாடக நலங்களைப் பாராட்டி வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்.

கவியரங்கத்தின் பாக்கள் முழுதும் கிடைத்த பின்னர் வெளியிடப் பெறும்.

ஜன்ம நக்ஷத்திர அபிஷேக ஆராதனை

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாதஜன்ம நக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவதலங் களில் ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து தலப்பதிகங்களையும் அச்சிட்டு, வழங்கிவருதல்போல இம் மாதத்திலும் 21—8—55 ஞாயிற்றுக்கிழமை திருச்சேறை ஸ்ரீசெந்நெறியப்பர் சுவாமி ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் ஆதீனச்சார்பில் செய்விக்கப்பெற்றன. ஆதீன வெளியீடாக அச்சிட்ட திருச்சேறைத் திருப்பதிக உரையை வழங்கி, திரு. R. வேலாயுத ஓதுவாமூர்த்திகளால் பண் முறைப்படி பதிகம் முழுவதும் பாராயணமாக ஓதப்பட்டது.

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்

திருக்குற்றால யாத்திரை

வித்துவான், ம, சிவசம்பு,
தருமை, கீழைக்கலை உயர்பள்ளித் தமிழாசிரியர்.

4—8—55 வியாழன் அன்று குருவாரமாதலால் ஞான சம்பந்தப்பெருமானைத் தெரிசனம் செய்து யாத்திரை தொடங்கினார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களது உந்தூர்தி விரைந்து சென்று மலைக்கோட்டையை அடைந்தது. மறுநாள் திருவானைக்காசென்று விசேஷ வழிபாடு முடித்துக்கொண்டு உய்யக்கொண்டான்சென்று திரும்பி வந்தார்கள். மறுநாள் மாலை 4-மணிக்கு உந்தூர்தி திருப்பரங்குன்றத்திற்குப் புறப்பட்டது. அங்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை, சிவத்திரு. சுந்தரேச பட்டர் பூர்ணகும்பத்துடன் வரவேற்று உபசரித்தார். முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் தமிழ்க்கடவுள் முருகனை இரவுசென்று வழிபட்டார்கள். இரவே ஆலவாயண்ணல் செந்தமிழ்ச் சொக்கரையும், இறைவன் திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிர் ஓவியமாகிய மீனாட்சி அம்மையையும் தெரிசனம் செய்தார்கள். 6—8—55 அன்று இரவு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் நெல்லைக்கு எழுந்தருளினார்கள். மறுநாள் அங்குள்ள சிப்பந்திகளுக்கும் உடன் வந்திருந்த அன்பர்களுக்கும் புத்தாடை நல்கியருளினார்கள். மாகேசுவர பூசையும் செய்வித்தருளினார்கள். அன்றே திருக்குற்றாலம் நோக்கி எழுந்தருளினார்கள். செந்தமிழின் பின் உதித்த தென்றல் தென்காசியிலேயே வரவேற்கக் குற்றாலம் அடைந்தார்கள்.

குற்றாலம் வந்து நீடுயர் சாரலைக் கண்டு களிப்பு எய்தினார்கள். வானமளாவிய பன்னூறு மரங்கள்; மகிழ்ந்து பாடும் பறவைகள்; ஓங்கி வளர்ந்த வேங்கை மரங்கள்; அதனைச் சுற்றித் தழுவிக்கொண்டிருக்கும் கொடிகள்; சில இடங்களில் கொடிகள் ஒருமரத்திற்கும் மற்றோர் மரத்திற்கும் இடையில் பாலம் அமைத்ததுபோல் இருக்கின்றன.

இப்படிப்பட்ட மலை வளங்களை எல்லாம் கண்டு களித்த நேரத்தில் வருணபகவான் எங்களைக் குளிக்க அழைப்பதுபோல்

பன்னீர் துளிகள்போல் சிறுசிறு நுண்ணிய நீர்த்துளிகளைச் சிதறினன். இதுதானே குற்ருலத்தின் அருமை? அப்படி நுண்ணிய நீர்த்துளிகள் இல்லையானல் "சீசன்" இல்லையாம்.

ஸ்ரீலஸ்ரீ அவர்களும் அவர்களுடன் சென்ற அனைவரும் அருவியில் நீராடினேம். அப்பொழுது சிறை வண்டுகள் செவ்வழிபாடி எங்களை மகிழ்வித்துக்கொண்டே இருந்தது. நீராடி முடிந்தவுடன் குறும்பலா ஈசரைக்கண்டோம். அவரை வணங்கி, குழல்வாய்மொழி அம்மையின் அருள்பெற்ருேம். 8—8—55 அன்று செண்பகாடவி சென்று தேன் அருவி அடைந்தோம். வழியிலே வானரங்கள் கனி கொடுத்து மந்தியோடு கொஞ்சுவதைப் பார்த்தோம். தேன் அருவி திரையெழும்பி வானில் வழி ஒழுகுவதைப் பார்த்தோம். திரிகூட மலையின் அமைப்பை எண்ணி மகிழ்ந்தோம். மலைதான் எவ்வளவு உயரம், கவிராயர் பாடியிருந்த குறவஞ்சிப்பாட்டு எங்கள் காதில் ஒலித்தது. 'செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்' அவ்வளவு பெரியமலை. அந்த மலையில் இருந்து அருவி பாறைகளை உடைத்துக்கொண்டு விழுகிறது. அருவியின் பக்கத்தில் பெரிய பெரிய தேன் கூடுகள். அதில் தேன் ஈக்கள் தேனைக் கொண்டுவந்து சேர்ந்து வைக்கின்றன, தேன் அதிகமாகக் கூட்டில் நிரம்பியவுடன் அதிலிருந்து தேன் சொட்டுச் சொட்டாகத் தண்ணீரில் விழுவதைப் பார்க்கலாம். அப்பொழுதுதான் தேன்அருவி என்று ஏன் பெயர் வைத்தார்கள் என்பது புலனுகும். தேனும் அவ்வளவு உயரத்தில் இருந்து அருவியாகத்தானே விழுகிறது?

மலையின் உச்சியில் இருக்கின்றபொழுது மேகங்கள் மலையின் சிகரத்தை வந்து முத்தமிடுகின்ற காட்சி நன்கு புலனுகிறது. தேன் அருவி செல்லும் பாதைதான் கொஞ்சம் கடினமாக இருக்கிறது. சில இடங்களில் உயிரைப் பணயம் வைத்துத்தான் செல்லவேண்டியிருக்கிறது. நாங்கள் சிற்சில இடங்களில் தடுமாறினுலும் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் கேதாரம் சென்ற அனுபவத்தால் தயங்காது வந்தார்கள்.

ஐந்தருவியும் குளிப்பதற்கு வசதியான இடம். குற்ருலத்திலிருந்து செல்லுவதற்கு மலையானுலும் அருமையான ரோடு

அமைக்கப் பட்டிருக்கிறது. இங்கு, கார்கள் வந்த வண்ணமாக இருக்கின்றது. அங்குச் சென்றும் நீராடினேம்.

புலி அருவி குளிப்பதற்கு மிகவும் வசதியாக இருக்கிறது. என்ன இருந்தாலும் செயற்கை இயற்கையின் முன் நிற்குமா?

குற்ருலம் எப்பொழுதும் இன்பமயமாகத்தான் காட்சி யளிக்கிறது. இரவு பகல் என்று வித்தியாசம் இல்லாமல் மக்கள் குளித்துக்கொண்டே இருக்கிருர்கள். மக்கள் ஆணும் பெண்ணுமாகச் செல்லும் காட்சி கண்டுகளிக்கத் தக்கது. குற்ருலத்தில் துன்பம் என்பதே கிடையாது. குற்ருலத்தில் ஓடுவது பூப்புனல் வெள்ளம் ஒன்றுதான். ஓடுங்கக்காண்பது ஒன்று உண்டானுல் அது யோகியர் உள்ளம்தான். தூங்கக் காண்பது ஒன்று உண்டானுல் அது மாம்பழக் கொத்துத்தான். சுழலக்காண்பது ஒன்று உண்டானுல் அது நீரின் சுழற்சிதான். இவ்வளவு இன்பமயமான குற்ருலத்தில் கூனல் இளம்பிறை முடித்த வேணியலங்காரர் இருந்து காட்சி நல்குகிருர்.

குற்ருலத்திலிருக்கும் ராஜராஜேஸ்வரி சக்தி பீடம் மிகவும் விசேடமானது. வெள்ளிக்கிழமை (12—8—55) அன்று சக்தி பீடத்திற்கு லளிதா சகஸ்ர நாமமும் நவசத்தி அர்ச்சனையும் உரியமுறையில் மிகவும் சிறப்பாக நடந்தன. அன்று அபிராமி அந்தாதி முழுவதும் பாரயணம் செய்யப் பெற்றது.

திருக்குற்ருலத்தில் இருந்துகொண்டே திருமலை, இலஞ்சி திருச்செந்தூர் முதலிய இடங்களுக்குச் சென்று ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் வழிபட்டு வந்தார்கள். குற்ருலத்தில் இருந்தகாலத்தில் இறைவழிபாடோடு ஆதீனத்துக்குச் சொந்த மான நஞ்சை புஞ்சை நிலங்களைப் பார்வையிட்டும் வந்தார்கள்.

19—8—55 வெள்ளியன்று நித்தம் தவம் செய்யும் குமரி கன்னி பகவதி அம்மையை வழிபட்டு 20—8—55 அன்று தருமபுரம் வந்து எழுந்தருளினர்கள்.

809

வருங்காலம்

ஜோதிஷார்ணவம்

பிர்மஸ்ரீ முத்துஜோதிடர் அவர்கள், திருவிடைமருதூர்.

(மன்மதஹு புரட்டாசிமீ 1உ முதல் 31உ முடிய
17-9-55 முதல் 17-10-55 முடிய)

1. மேஷம்: அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

அசுவதி 1, 2, பாதங்கள் சுபம்தரும். உத்தியோகம் கிட்டும். பெரியோர் அன்பு ஏற்படும். 3, 4, பாதமும் பரணி முதல்பாதமும் விசேஷ ராஜயோகத்தையும் இல்லற சுகத்தையும் தரும். பரணி 2, 3. 4 பாதங்கள் பீடைகளை உண்டுபண்ணும். அவமதிப்பும் கஷ்டநஷ்டங்களும் ரோகபீடையும் உண்டாகும். கார்த்திகை முதல்பாதம் மிக சிரமமாய் நடக்கும். ரோகசாந்தியாகும் விவகாரத்தில் பல சிக்கல்களையும் விரோதங்களையும் உண்டுபண்ணி மாதம் பிற்பாதியில் சுபம் தரும். புதன் வியாழன் சுபவாரமாகும்.

2. விருஷபம்: கார்த்திகை ¾ ரோஹினி, மிருகசீரஷம் ½

கார்த்திகை 2, 3, பாதங்கள் லாபகரமாகவும் காரியசித்தியோடும் மனம்சந்தோஷம் அடையும்படியும் நடக்கும். கார்த்திகை 4 ம் பாதமும் ரோகிணி 4 ம் பாதங்களும் கவலையோடும் கஷ்டநஷ்டங்களோடும், அபகீர்த்தியுடனும் நடக்கும். மாதக்கடைசியில் கொஞ்சம் நலன்தரும். மிருகசீரிஷம் 1, 2 பாதங்கள் தொழிலைக் கொடுக்கும். வியாபாரம் ஓங்கும் புதிதாக வாகன யோகங்கள் ஏற்படும் விவகாரம் ஜயிக்கும். சந்தோஷமாய் நடக்கும். சனியும் புதனும் சுபவாரமாகும்.

3. மிதுனம்: மிருகசீரிஷம் ½ திருவாதிரை, புனர்பூசம் ¾

மிருகசீரிஷம் 3, 4, பாதங்கள் தேவகுருபக்தியைத்தந்து சகலகாரியங்களிலும் வெற்றியை உண்டுபண்ணும். திருவாதிரை 1, 2, பாதங்கள் ஜீவன லாபத்தையும் ஆரோக்கியத்தையும் கஷ்டங்களிலிருந்து விடுபடுதலையும் சுபத்தையும் தரும். திருவாதிரை 3, 4, பாதங்சள் வீண் அலைச்சலையும் சத்ருவிருத்தியடையும் ரோகத்தையும் தரும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் தீராதவியாதி பயத்தை உண்டுபண்ணும். கலகங்களும் அபஜயங்களும் உண்டாகும் தேவகோபம் ஏற்படும். சனி, செவ்வாய், ஏலன் தரும்.

4. கடகம்: புனர்பூசம் $\frac{1}{4}$ பூசம், ஆயில்யம்.

புனர்பூசம் 4 ம் பாதம் சுபமாகும் வெற்றிகரமாகவும் நடக்கும் பூசம் 1, 2, பாதங்கள் பெருத்த நஷ்டத்தையும் குடும்ப கலகத்தையும் அவமானத்தையும் உண்டுபண்ணும். பூசம் 3, 4, பாதங்கள் சிரமத்தையும் கொடுத்து முடிவில் நண்மைகளையும் தரும். ஆயில்யம் நான்கு பாதங்களும் மனக்கஷ்டத்தையும் பீதியையும் கொடுத்து மாதக் கடைசியில் பெரிய வெற்றியை உண்டுபண்ணும் சந்தோஷம் ஏற்படும். சனி, புதன் சுப வாரமாகும்.

5. சிம்மம்: மகம், பூரம், உத்திரம் $\frac{1}{4}$.

மகம் நான்கு பாதங்களும் விசேஷ கௌரவத்தையும் உத்தியோக லாபத்தையும் கீர்த்தியையும் இடம்மாறி லாபகரத்தையும் தரும். பூரம் நான்கு பாதங்களும் ரோகத்தை உண்டுபண்ணும். இடம்மாறும் வியாதி சிகிச்சை ஏற்படும். உத்திரம் முதல்பாதம் விவகாரவிருத்தியையும் லாபத்தையும் வியாபார பெருக்கத்தையும் தந்து விவகாரமூலம் பணச்செலவையும் தரும். சனி, புதன் சுபவாரமாகும்.

6. கன்னி: உத்திரம் $\frac{3}{4}$ ஹஸ்தம், சுத்திரை $\frac{1}{2}$.

உத்திரம் 2, 3, 4, பாதங்கள் உத்தியோக மேன்மை பெரியோர் அன்பினுல் அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகுதல். இல்லறசுகம் சந்தோஷம் இவைகளைத்தரும். அஸ்தம் நான்கு பர்தங்களும் நன்மதிப்பையும் ஆரோக்கியத்தையும் எங்கும் நிறைந்த கீர்த்தியையும் எதிர்பாராத லாபங்களையும் தொழில் ஏற்றத்தையும் சாசுவதமான ஸ்திரசா காரியங்களையும் தந்து சந்தோஷத்தை உண்டுபண்ணும். சித்திரை 1, 2, பாதங்சள் என்றும் கண்டிராதபடி சுபசகுனங்களைத் தந்து புத்திராதிகளால் மேன்மையைஉண்டுபண்ணி சத்துருக்களை ஓட்டி சந்தோஷத்தையும் லாபத்தையும் தரும் குடும்பம் ஓங்கும். புதன் வியாழன் சுபவாரமாகும்.

7. துலாம்: சித்திரை $\frac{1}{2}$, சுவாதி, விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்களும் சுவாதி 1, 2, பாதங்களும் மிகுந்த சிரமத்தை உண்டுபண்ணும். கவலைகள் அதிகமாகும் தெய்வபலமுள்ளவர்கள் ஜெயிப்பார்கள். சுவாதி 3, 4, பாதங்கள் கீர்த்தியையும் விசேஷமான தனதான்ய லாபங்களையும் தந்து உலக பிரசித்தியை உண்டுபண்ணும். விசாகம் 1, 2, 3, பாதங்களும் தீராதவியாதி பயத்தையும் கடன் தொல்லைகளையும் தொழில் நஷ்டத்தையும் அபகீர்த்தியையும் தரும். புதன் வெள்ளி நலன் காட்டும்.

8. விருச்சிகம்: விசாகம் $\frac{1}{4}$, அனுஷம், கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் சேன்றமாதம் போலவே இருப்பதோடு சில விசேஷமான நன்மைகளை வியாபாரமூலமாயும் உத்யோக மூலமாயும் விவகார மூலமாகவும் தரும். தானதர்ம பலன் கிட்டும். தீர்த்தயாத்திரை உண்டுபண்ணும் வெகுதூரத்திலிருந்து அழைப்புவரும். வெள்ளியும் திங்களும் சுபவாரமாகும்.

9. தனுசு: மூலம், பூராடம், உந்திராடம் $\frac{1}{4}$.

தனுர்ராசி 9 பாதங்களும் முற்பாதியில் பல கவலைகளை உண்டு பண்ணி சிரமத்தைகாட்டி பிற்பாதியில் எல்லாம் வெற்றிகரமாக நடக்கச் செய்யும். ஆரோக்கியமடைதல் விவகாரம் ஜெயித்தல் காரியசித்தியாகு தல் தொழில் ஓங்குதல் முதலிய நன்மைகள் உண்டாகும் சனியும் புதனும் சுபவாரமாகும்.

10. மகரம்: உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$.

மகரம் சம்பந்தபட்ட 9 பாதங்களும் மாதம் முற்பகுதியில் விசேஷ ஏற்றமாகும் எங்கும் நன்மதிப்பையும் உத்யோகலாபத்தையும் கீர்த்தி பத்திரத்தையும் லாபத்தையும் தரும். பிற்பாதியில் அதிக உழைப்பின் பேரில் ஆயாசம் கொடுக்கும். குடும்பசெலவு அதிகரிக்கும் விவசாயத்தில் கவலையைத்தந்து நஷ்டத்தைத்தரும். முன் ஜாக்கிரதையுடன் இருந்துவர சுபமேதரும். வெள்ளியும் சனியும் சுபவாரமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம், பூரட்டாதி $\frac{3}{4}$.

அவிட்டம் 3, 4 பாதங்கள் குடும்பவிருத்தியைத்தரும். சதயம் நான்கு பாதங்களும் அதிக நஷ்டங்களையும் கஷ்டங்களையும் தரும். பூரட்டாதி 1, 2, 3 பாதங்களும் ரோக நிவாரணத்தை தந்து சந்தோஷத்தைத்தரும். லாபமுண்டாகும். விவசாயம் ஓங்கும் காளை கன்று வாகன விருத்திகள் ஏற்படும் புதன் வெள்ளி சுபவாரமாகும்,

12. மீனம் பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி, ரேவதி.

மீனராசி சம்பந்தப்பட்ட 9 பாதங்களும் பூரணவெற்றியைத் தரும். உத்தியோக லாபத்தோடு இடம் மாறும். பெரியோர் அன்பு கிட்டும் குடும்பம் தழைக்கும். விவசாயத்தாலும் வியாபாரத்தாலும் ஜீவிப்பவர்கள் மாத்திரம் நஷ்டமடைவார்கள் மற்ற யாவரும் சுபபலனையே அடைவார்கள். வியாழன் வெள்ளி சுபவார்மாகும்

குறிப்பு:—ஷ மாதம் ஈதிபாதைகளால் பயிருக்குச் சேதம் விளையும். மழைக்குறையும் கண்டவருஷமாய்ப் பெய்யும். வடநாட்டில் கலகம் அதிக மாகும். தெய்வபலமுள்ள தேசம் சுபமடையும்.

திருக்கேதார யாத்திரை

[முன் தொடர்ச்சி]

ஆர்வமும், ஏனைய பிறவும் கிடைக்கின்றன. பெரியோர்கள் தரிசனம் கிடைக்க வழி ஏற்படும். எல்லாம் செம்மையாகப் பெற்று வையத்தில் வாழ்வாங்கு வாழலாம். பொதுவாக யாத்திரையினால் நமக்குத் தெய்வத் திருவருள் பூரணமாகக் கிடைக்கும். பேரின்பமும் கிடைக்கும் என்று தவஞானிகள் கண்டு சொல்லி வைத்திருக்கிறார்கள்: மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாகத் தொடங்கினோருக்குச் சற்குருவும் வாய்க்கும் என்று தாயுமானவ அடிகள் சொல்லியிருப்பதையும் இங்கு நினைவில் கொண்டு வருதல் நலம்.

யாத்திரை இருவகையாலும் மேற்கொள்ளுதல் உண்டு. வேடிக்கை யாகவும் பொழுதுபோக்காகவும் கருதிப்போதல் ஒருவகை. க்ஷேத்திர யாத்திரை, தீர்த்த யாத்திரை, மூர்த்தி தரிசனம் கருதிச் சேறல் மற்றொரு வகை. இரண்டிலும் நமக்கு அனுபவ அறிவு பெற வாய்ப்புண்டு. ஒரு குறிப்பிட்ட பலனை இச்சித்து யாத்திரை செய்வதைவிட நிஷ்காமியமாகச் செய்வது மிக மேலானது. ஏன் என்றால் இறைவன் நம்முடைய செயல் ஒவ்வொன்றையும் பார்த்துக்கொண்டிருக்கிறான். அவனுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. அவன் செய்விக்க நாம் செய்கிறோம். இங்குக் காமியத்திற்கு இடமில்லை. காமியம் எழுதுவது மலச் சேட்டையினால். காமியத்தழுந்தியவர் கள் அதனால் வரும் சிறு நன்மைகளையும் பெருந்தீமை களையும் அனுபவிக்க வேண்டும். ஆகவே இச்சை கூடாதென்பது தென்க. இதனை மணிவாசகர் “வேண்டத் தக்க தறிவோய் நீ வேண்ட முழுதும் தருவோய் நீ........... வேண்டும் பரிசு ஒன்றுண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே” என்ற திருவாசகத்தில் குறித்துள்ளது ஊன்றி நோக்குவதற்குறியது. வள்ளுவரும் “பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு” என அறிவிக்கிறார். ‘நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே’ என்பதாகச் செயலற்றுத் திருவருள் உணர்வோடு யாத்திரையில் ஈடுபடுவோமானால் அவனருளால் அனைத்துங் கைகூடும். இன்பம் செல்வம் எல்லாமும் அவனேயாகலின் நம் தகுதிக்கேற்ப ஆசை தீரக் கொடுப்பான், மூலபண்டாரம் வழங்குவான். நம்மையாளும் ஈசன் நினையாத முன்வந்து நிறுத்துவான். இறுதியாக அழியாத இன்பத்தை அளிப்பான்.

இவ்வளவு வளத்தையும் நல்கும் யாத்திரையை மேற்கொள்ளும் பொழுது காலத்தை வீணே கழிக்காமல் திருமுறையை ஓதலும், பிறரை

ஓதச்செய்தலும், கேட்டலும், பிறரைக் கேட்பித்தலும் மிக மிக நல்லன. அப்பொழுதுதான் யாத்திரை பாரமில்லாமல் தெளிவாக எளிதாக இருப்பதைக் காணலாம். மக்கள் ஒவவொருவரும் தமது ஆயுட் காலத்தில் ஒரு முறையேனும் யாத்திரைசென்று திருவருள் நலம் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார்களாக,

நமது ஆசாரியப் பெருமக்கள் அக்காலத்திலே தலங்கள்தோறும் சென்றுசென்று பெருமானைப்பாடி வழிபட்ட உண்மைகள் எங்களுக்குப் பெரிதும் புலப்பட்டன. 'ஒரு பெரிய கூட்டுப் பிரார்த்தனை' என்று நான் சொன்னேன். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமும், முறுவலித்தார்கள். 'அப்பெருமக்கள் சென்றவழியே ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமும் அடியேனைப்போன்ற பலரையும் அழைத்துக்கொண்டு இவ்வளவு பெரிய யாத்திரைபோகும் உண்மையைப்பற்றிப் பேசினோம். அது ஒரு முடிவில்லாதபேச்சு.

கல்கத்தா வந்தது:

இங்கே நாங்கள் இறங்கினோம். காசிக்கு வேறுவண்டி மாற்ற வேண்டும். அவ்வண்டி இரவு மணி 8-15 க்குப் புறப்படும். அதுவரை தங்கும் விடுதியிலே (Retiring Room) தங்கினோம். கடும் வெயில். குளிர்ந்த தண்ணீரும் வெந்நீராயிற்று. வெப்பம் உச்சநிலையில் இருந்தது இப்பொழுது நடுப்பகல். மாலை வந்தது. 3 மணி. கொதித்த சூடு அமர்ந்தது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களும் திருமஞ்சனமாடி, வெளியே புறப்பட்டார்கள் போலூர் சென்று இராமகிருஷ்ண மடாலயம், அங்குள்ள ஆலயங்கள் யாவற்றையும் பார்த்துவிட்டுச் கல்கத்தா நகரின் அதிஷ்டா தெய்வமான காளிக்கட்டத்துக் காளியைத் தரிசிக்கச் சென்றோம். சென்ற வழியெல்லாம் நகரப் பெருவணிக நிலையங்களும், பண்டகசாலைகளும் உலக வங்கிகளும், (Banks) சோலைகளும், உயரமான கட்டிடங்களும் மலிந்த தெருக்கள். காளிதரிசனம் முடிந்தது. மீண்டும் இரயிலுக்கு வந்தோம்.

ஊர் விசாரணை:

கல்கத்தாவைப்பற்றி நினையாமல் இருக்க முடியுமா? கல்கத்தா உலகப் பெருநகரங்களில் ஒன்று, ஹூக்ளி நதிக்கரையின் கீழ்க்கரையே கல்கத்தாப் பெருநகரம். ஜனத்தொகை அதிகம். கப்பல் ஏற்றுமதி இறக்குமதிக் கிடங்குகள் உள்ளன. நகருக்குள் கப்பல்கள் வரவும் போகவும் வசதியாக உள்ளது ஹூக்ளிநதி. ஒரு பெரிய இருப்புப்பாலம் இருக்கிறது. அந்தப்பாலம் வலுவானது. வனப்பு வாய்ந்தது, பார்க்கத்

தகுந்தது. கல்கத்தா இரயிலடியில் பிளாட்பாரங்கள் இருக்கின்றன. அன்னை காளியின் அருள்தான் இன்று கல்கத்தாவைக் கண்கவர் வனப்பு வாய்ந்ததாகச் செய்திருக்கிறது.

காளிகட்டம் என்ற சிறு ஊர்தான் இன்று கல்கத்தாவாக விளங்கி நிற்கிறது. நல்ல வணிகவளம், ஞானவளத்திலும் தனக்கு ஒப்பின்றி விளங்குவது இந்நகரம். உலக சர்வதேச அரங்கில் ஒப்புயர்வற்று விளங்கிய சமய வீரர் விவேகாநந்தரையும், கீதாஞ்சலி மூலம் நோபல் பரிசுபெற்ற பேரறிஞர் இரவீந்திரநாத தாகூரையும், தேசியராணுவப்படை அமைத்த தீரர் சுபாஷ் சந்திரபோசையும், விஞ்ஞான நல்லாராய்ச்சி மேதையான ஜகதீச சந்திரபோசையும், சித்தரஞ்சன்தாஸ் போன்ற தேசிய வாதிகளையும் பெற்றுக்கொடுத்துப் பெருமிதம்கொண்டது வங்காளத்துள்ள இப் பெருநகரமே. வங்காளிகள் மொழிப்பற்று மிகுந்தவர்கள். நல்ல உழைப்பாளிகள். அறிவாளிகள், வங்காளிகளின் தேசப்பற்று வார்த்தை யளவில் அடங்காது. அவ்வளவு பற்றுள்ளவர்கள். தங்கள் தேசத்தில் சணல் தொழிற்சாலை, இஞ்சின் தொழிற்சாலை போன்ற எத்தனையோ தொழிற்சாலைகளால் தொழில்வளம் பெருக்கியிருக்கிறார்கள். டில்லிக்கு முன் இந்தியாவுக்குத் தலைநகரமாயிருந்தது. உலகப்பெரு வானவழிகளில் ஒன்றாகவும் இது அமைந்திருக்கிறது. தரைப்படை, கடற்படை வாகனங் கள் இங்கு உண்டு. வானவீதியிலே செல்லும் வெளிநாட்டு விமானங் களும் இங்கு வராமற் போவதில்லை. அந்த அளவுக்கு இன்றியமையாத தளமாகவும் இருந்துவருகிறது இப்பெரு நகரம். இப்படியெல்லாம் கல்கத்தாவைப் பற்றி ஓடியது எங்கள் சிந்தனை.

கல்கத்தாவில் டேராடூன் எக்ஸ்பிரசில் இரவு 8-10 க்கு இரயிலேறி னோம். வழியிலே அசன்சால் என்னும் தொழிற்பெருநகரமும் மற்றும் பலவும் இரவு நேரமாதலின் எங்களுக்குத் தெரியாமலே சென்றுவிட்டன. பொழுது விடிந்தது; கயாவை நெருங்கிக்கொண்டிருந்தது எங்கள் இரயிலும்.

கயா:

அன்று வெள்ளிக்கிழமை. வழக்கம்போலத் திருமஞ்சனம். வழிபாடுகள் நடைபெற்றன. கயாவும் வந்தது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மௌனவிரதம் நிறைவேறியது. திருமுறைப்பாராயணம், திருமுறைச் சிந்தனை எல்லாம் வழியிலே நிறைவுற்றன. கயை பீஹார் மாகாணத்தில் மாவட்டத் தலைநகரம். இந்துக்கள் பிண்டதர்ப்பணம் சிரார்த்தம் முதலின செய்து பிதுரர்க்குக் கடன் கழிக்கும் பெருந்தலம் அதனோடு அங்கே சித்தார்த்தர் ஞானோதயம் உண்டாகிப் புத்தரானார். அந்தப் பகுதிக்குப் புத்தகயா எனப்பெயர் வழங்கப் பெறுகிறது. இந்துக் களைப் போலவே பௌத்தர்களும் ஏராளமாக இங்கு வருகிறார்கள்.

டெஹ்ரி ஆன்சோனி:

சோனநதியெனப் பிரசித்திபெற்றது. இங்கு நதியின் அடித்தளத்தி லிருந்து சோண விநாயகர் என்னும் சாளக்கிராமம் சுயம்புமூர்த்தி எடுக்கப் படுகிறது. நல்ல வாய்ப்பாக உள்ள மூர்த்தி கிடைத்துவிட்டால் இந்துக்கள் அதைப் பெரும்பாக்கியம் என்று சொல்லுகிறார்கள். ஆற்றின் குறுக்கே அணைகட்டி, நீர்தேக்கி, ஜலமின்னாதாரம் உண்டாக்கி இருக்கிறார்கள். காகிதம், சிமிட்டு, பிஸ்கட், எருக்கள் முதலிய பல பொருள்களும் அங்கே தயாராகின்றன. நம் நாட்டு மக்கள் பலரும் அங்கே அலுவலில் இருக்கிறார்கள். 'சிமிட்டுத் தகடுகள்' செய்கிற தொழிற்சாலையிலே இரசாயன நிபுணராக இருக்கும் திரு. வி. ஆர். நடராசன் அவர்கள் இரயிலடியில் வந்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்தார்.

இலக்கியத்தில் கங்கை:

கங்கை ஓர் புண்ணிய நதி. தெய்விகத் திருநதி. தமிழ், மக்கள் தமிழ் நாடு என்றுமே கண்டு, அநுபவித்த திருநதி. 'குமரியோடு வட இமயத்து ஒருமொழி வைத்து உலகாண்ட சேரலாதன்' என்கிறது சிலப்பதிகாரத்து உரைப்பாட்டு. ஒரு மொழியால் (தமிழ் மொழி) பாரதநாடு முழுதுமே ஆண்டான் தமிழன் என்ற பெருமையும் இந்த இடத்தில் எங்களுக்கு நினைவு உண்டாயிற்று, வட இமயம் வரைக்கும் ஆட்சி செலுத்தினான்பழைய காலத் தமிழன். தமிழ்நாட்டு மூவேந்தர்களும் வட இந்தியாவைப் பிடித் தாண்டார்கள். கங்கை கொண்டார்கள். சோழநாட்டுப் பேரசன் 'கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி' என்று பாடுகிறார் இளங் கோவடிகள், பாண்டிய மன்னனும் வடக்கே படையெடுத்தான். கங்கை யைக்கொண்டான். அந்தப் பெருமை நமக்கு என்றும் உண்டு, வட திசைக் கங்கையும் இமயமும் கொண்டு, தென்திசையாண்ட தென்னவன்' என்று இனிக்கப்பாடுகிறார் இளங்கோவடிகள். சேரன் மட்டும் என்ன? இமயத்துக்குச் சென்றான், கல்லெடுத்தான். 'கங்கைப் பெரியாற்றுக் கடும்புனல் நீத்தத்தில் நீர்ப்படை செய்தான்'. இப்படியெல்லாம் இலக்கியங்களில் கங்கையைப்பற்றிய செய்திகளைக் காணலாம்.

கங்கை தீர்த்தம்:

கங்கை புனிதத் தீர்த்தமாகக் கருதப்பட்டது அக்காலத் தமிழர்களா லேயே. 'கங்கைப் பேரியாற்றுக் கடும்புனல் நீத்தம், எங்கோ மகளை ஆட்டிய அந்நாள்' என்ற சிலப்பதிகார வரிகளுக்கு, 'தீர்த்தமாடியது ஒரு கதை' என்று எழுதுகிற அரும்பதவுரையைப் பார்க்கும்போது 'கங்கைத் தீர்த்தம்' என்ற குறிப்பைக் காணுகிறோம்.

'வெறிமலர்த் தீர்த்தத்து எறிபுனல் கங்கை' என்ற பிற்காலச்சோழர் கல்வெட்டுத் தொடரும் கங்கை புண்ணிய நீராடக்கூடிய தீர்த்தம் என்றே சொல்லுகிறது.

ஆழநீர்:

கங்கையின் நீர் ஆழமானநீர்: தெளிவான நீர். இதனை 'ஆழநீர்க் கங்கை' அம்பி கடாவிய' என்ற கம்பர் வாக்கினோடும், தெள்ளுநீர்க் கங்கை' என்ற இளங்கோ மொழியினோடும் ஒப்பிட்டது எங்கள்சிந்தனை.

ஜீவநதி:

நல்ல கோடையிலும் கங்கையிலே தெளிந்தநீர் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆகவேதான் அது ஜீவநதி எனப்படுகிறது. இன்று நேற்று தொடங்கியல்ல எத்தனையோ ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய்· புறநானூற்றிலே குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடுகிறார். அப்போது இந்தக் கருத்தைப் புலவர் வெளியிடுகிறார்;

> ''வளமழைமாறிய என்றூழ்க்காலை, மன்பதையெல்லாம் சென்றுணக் கங்கைக்
> கரைபொரு மலிநீர் நிறைந்து தோன்றியாங்கு''

என்பது அந்தச் சொல்லோவியம் எவ்வளவு அருமையாக அழகாக இந்தக் கருத்தை வெளியிடுகிறார்!.

வாரணவாசிப்பதம்':

கங்கையைப் பற்றிய கருத்தோடு, ஒட்டிக் காசியும் ஓடிவரத்தான் செய்யும். காசியை வாரணவாசி என்பது தமிழ் வழக்கு. காசியில் இருப்போர் பிறர் வருத்தத்தையும் தன் வருத்தம் போற்கருதக்கூடியவர் என்கிறது கலித்தொகை என்ற சங்க இலக்கியம். 'வாரணவாசிப்பம்» என்கிறது அக்கலிப்பாடல். திருக்கோவையாரிலே 'மலயத்து நின்றும்' என்கிற 34ம் பாடல் உரையிலே பேராசிரியர் 'மலயத்து வாழ்வார் பிறர்க்கு வருத்தம் செய்யாராகலின்' என்று எழுதுகிறார். 'பிறர் வருத்தத்தையும் தன் வருத்தம்போற் போற்றுக்கால் அறிவு படைத்ததனால் என்ன பயன் இருக்கிறது?' என்று திருவள்ளுவர் கேட்கிறார், ஆகவே அந்தப் பண்பாட்டிலே ஊறிய பழம் பதிகளாகத் தெற்கே பொதியமும் வடக்கே கங்கையும் பண்டுமுதல் இருந்தன என்ற பெருமை நமக்கு என்றும் உண்டு.

கங்கைகொண்டான்:

தமிழர்கள் வடக்கே சென்று கங்கையைக் கொண்டதை ஒரு பெரு வீரச்செயலாக நினைத்தனர். சோழன் இராசேந்திரன் வடக்கே கங்கை வரை படையெடுத்து வென்றான். அதன் வெற்றிப் பெருமிதம் அவனை ஆட்கொண்டது. கங்கைகொண்ட சோழபுரம் என்ற ஊரைத் தென்னாட்டில் நிறுவினான். கங்கைகொண்ட சோழேச்சரம் கட்டினான். பாண்டியரில் 'கங்கைகொண்டான்' ஒருவனும் இருந்தான். அவன் பெயரால் இன்றும் ஒரு ஊர் இருக்கிறது. தஞ்சைச் சிவகங்கையைத் தெரியாதார் யார்? 'சோழகங்கை' ஏரியைத் தோண்டினான் ஒரு சோழன் இவ்வாறு பழைய காலமுதல் கங்கையோடு தொடர்பு கொண்டு விளங்குகிறது நம் தமிழகம்.

கங்கைப் பாலம்:

கங்கையை இரயில் பாலத்தின் வழியாகக் கடந்தபோது எங்கள் எண்ண அலைகள் இப்படியெல்லாம் வீசின. கங்கையைக் கடக்க இப்போது பாலம் இருக்கிறது. ஆனால் செங்குட்டுவன் வந்தபோது நூற்றுவர்கன்னர் என்ற வடக்கேயிருந்த அரச மரபு வங்கங்களையும் படகுகளையும் கொணர்ந்து கரையேற்றியதைச் சிலப்பதிகாரம் சொல்கிறது. இராம இலட்சுமணர்களை 'ஆழநீர்க்கங்கை அம்பிகடாவிக்' கரையேற்றிய குகனைப்பற்றிக் கங்கைப்படலத்தில் கம்பராமாயணம் கூறுகிறது. பாலத்தின் வழியே போகும்போது இபபடியும் ஒருசிந்தனை கிளைவிட்டது.

காசிச் சிறப்பு:

காசி என்ற வடசொல்லுக்கு மகாபிரகாசம் (பேரொளி) என்று பொருள். அந்தப் பேரொளி பேரின்பத்தைக் கொடுக்கவல்லது.பேரின்பம் திருவடிப்பேரின்பம். ஆகவே காசி என்ற சொல் பேரின்பத்தைத் - திருவடியைச் – சிவபெருமானைக் குறிப்பதாக அமைந்திருக்கிறது. ஊரமைப்பு பகாரவடிவம் என்று சொல்லப்படுகிறது. கங்கை சுற்றிச் செல்கிறது. பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்களில் இதுவும் ஒன்று.

கருடனும் பல்லியும்:

காசியிலே கருடன் வட்டமிடுவதில்லை. பல்லியும் சொல்லுவதில்லை என்று சொல்லுகிறார்கள். நாங்கள் தங்கியிருந்த குமாரசுவாமி மடத்தில் பல்லிகள் இருந்தும் ஒலி இல்லை. அதற்கு ஒரு கதையும் சொல்லுகிறார்கள். இராமேசுவரத்தில் இராமர் சிவலிங்கப் பிரதிட்டைக்கு நல்ல சிவலிங்கம் ஒன்று எடுத்துவரும்படி அநுமனுக்கு ஆணையிட்டார். தேடிவரும்

போது காசி ஒரு பெரியசிவாலயம். அங்கே ஏராளமான இலிங்க மூர்த்தங்கள் கிடைக்கும் என்று சொன்னூர்கள். காசியை அணுகினூர். சகுனங்களிலே மிகவும் மேலானதாகக் கருதப்படும் கருடதெரிசனம் ஆயிற்று. பல்லியும் சொல்லிற்று. இந்த இரண்டும் தான்வந்த காரியத்துக்கு அனுகூலமாக இருக்கவே துணிந்து விசுவநாதரையே எடுத்துச் செல்லத் திர்மானித்தான் அநுமன். பெருமானை வாலால் சுற்றிப் பெயர்த்தெடுக்கவும் முற்பட்டான். பயிரவர் பாதுகாப்பில் உள்ளது காசி. பயிரவர்க்கு இச்செய்தி எட்டியது. பயிரவருக்கும் அநுமனுக்கும் பெரும் போர் மூண்டது. முடிவிலே அநுமன் தோற்ருன். தன் தவறுணர்ந்தான்; மேலே சென்ருன். இவ்வளவும் நடப்பதற்குப் பல்லியும் கருடனும் துணை செய்த செய்தி பயிரவர்க்கு எட்டிற்று. கோபங்கொண்ட பயிரவர் காசி எல்லையிலே கங்கையைத்தாண்டி கருடன் வரக்கூடாது; பல்லியும் ஊமையாகப் போகட்டும் என்று சபித்துவிட்டார். கருடனே காசி எல்லைக்குள் பறக்காது என்ற நம்பிக்கையோடுதான் குமரகுருபரருக்கும் கருடன் பறக்கும் எல்லையில் நிலம்தருவேன் என்று நவாப் தைரியமாகக் கூறினுன். ஆனல் அருள் பெற்றவர்க்கு எதுவும் செய்ய முடியும் என்பதை அவன் உணாந்தானில்லை; மற்றப் பகுதிகள் விளக்கம் தேவையில்லை.

திருமணம் எப்படி?

திருமணங்கள் இரவில் நடைபெறுகின்றன. நடைமுறையில் பெரும்பாலும் நமக்குப் பழக்கமான முறைதான். பாணிக்கிரஹணம், மணமகள் நெற்றியிலே மணமகன் திலகமிடும் 'திலக்' என்ற பழக்கமும் இருந்து வருகின்றன. எந்த வயதுவந்த பெண்ணுக்கும் ஆண்கள் யாரும் திலகமிட்டுவிட முடியாது. அது திருமணத்திலே முக்கியமான சடங்கு ஆதலால் மணமகனைத் தவிர வேறுயாரும் செய்யக்கூடாது. திருமங்கலிய தாரணம் என்பது அங்குப் பழக்கத்தில் இல்லை. மற்ற வைதிகக் காரியங்கள் எல்லாம் அந்த ஊர்ப் பண்டிதர்கள் செய்து வைக்கிருர்கள். அவரவர் தகுதிக்கேற்ற ஆடம்பரமான ஊர்வலங்கள் உண்டு. வரவேற்பும் நடைபெறும். ஆனல் பெரும்பாலும் கங்கைநதிக்கரையிலே இது போன்ற காரியங்களுக்காக விடப்பட்டிருக்கும் பெரிய படகுகளை வாடகைக்கு எடுத்துக்கொண்டு மேல்தளத்தில் கூடாரம் அமைத்து, அலங்காரம் செய்து, மணமக்களை இருத்தி, ஆடல் பாடல் இன்னிசை முதலியன நிகழ்த்தப்பெறும். கல்யாணம் விசாரிக்க வருவோர் கீழ்தளத்தில் சிற்றுண்டி அருந்தி மேல்தளத்திலே நடைபெறும் இசைநிகழ்ச்சியிற் கலந்துகொண்டு சந்தன தாம்பூலம் பெற்றுப்போவர். நம் நாட்டிலேயும் கரம் பற்றுதல் உண்டு. ஆண்டாள் வாக்கிலும் ''கைத்தலம் பற்றக் கனக்கண்டேன் தோழி நான்'' என்ற பகுதி இதனைச் சித்தரிக்கும்

காசி ஸ்டேஷன் வந்தது. அதையும் கடந்து 'பனரஸ் கண்டோன் மெண்ட்' ஸ்டேஷனில் இறங்கினோம். முற்பகல் 10-45 மணி. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் ஆணைப்படி ஏஜண்ட், திரு கல்யாணசுந்தரம் பிள்ளை வந்திருந்தார்கள். ஏற்பாடுகள் சிறப்பாகச் செய்துவைக்கப் பெற்றிருந்தன. இரயிலடியில் காசியைச்சேர்ந்த தொழிலதிபர் திரு. முத்துவீரப்ப முதலியார் அவர்கள், பிர்மஸ்ரீ சூரியநாராயண சாஸ்திரிகள் அவர்கள், மற்றும் பல அன்பர்கள் மாலை மரியாதைகளோடு வரவேற்றார்கள். வந்திருந்த அன்பர்களோடு ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் அளவளாவிக் கொண்டிருந்தார்கள்.

வரவேற்பு:

நடுப்பகல் 12-மணிக்குமேல் குமாரசாமி மடத்துக்கு ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானமவர்கள் எழுந்தருளியானார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் இருக்க வசதி செய்யப்பட்டிருந்தது சடையப்பமுனிவர் கட்டிய குருமடம். தெருக் கடைசியிலே பெரிய வரவேற்பு. எங்கும் தோரணங்கள்; ஆலவட்டங்கள் வரவேற்புக் கொடிகள்; மேளம்; இப்படியெல்லாம் இருந்தது வரவேற்பு. கொலுவும் அமைக்கப்பெற்றிருந்தது; தருமபுர ஆதீனம் சென்னைப் பிரசார நிலையத் தலைவர் வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் ஆதீன முறைப்படி வழிபாடு நிகழ்த்தினார்கள். பின்னர் ஒரு வரவேற்பு காசிமடத்தில் கல்யாணசுந்தரம்பிள்ளை அவர்களால் வாசித்துக்கொடுக் கப்பட்டது. காசி இந்துப் பல்கலைக்கழகம், சித்தாந்தப் பேராசிரியர் ஸ்ரீ சிவராமன் பொதுமக்கள் சார்பில் ஒரு வரவேற்புரை நிகழ்த்தினார்.

வரவேற்புரையில்:

"ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் ஐந்தாண்டுகளுக்கு முன்பு காசிக்கு எழுந்தருளி அருளாசி வழங்கினார்கள். இப்பொழுது யாத்திரை மிகப் பெரியது. வழியில் இங்கு எழுந்தருளி விசுவநாதர் தரிசனம் செய்து நமக்கும் அருளுரை வழங்குவது போற்றுதற்குரியது. இது நம்தவப்பயன். இரயில் பிரயாணத்தால் மிக்க களைப்புற்றிருப்பார்கள். மற்றொருநாள் வந்து அருளுரை கேட்டுத் தெளிவோம், அவர்கள் யாத்திரை வெற்றிகரமாக முடியவேண்டும். இந்த ஞானயாத்திரை ஞானவெற்றியைக் கொடுத் தருளுமாறு ஸ்ரீ கேதாரீசுவரரை வேண்டுதல் நம் கடமை" என்று ஸ்ரீ சிவராமன் அவாகள் கூறினார்கள். வரவேற்பு விழா முடிந்தது. வரவேற்பு விழாவுக்கு ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீமத் சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்கள் பிரதிநிதி, நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரம் ஏஜண்டுச் செட்டியார் முதலிய பலரும் வந்திருந்தார்கள். வந்திருந்தோருக்கு அன்று மாகேசுவரபூஜை சிறப்பாக நடைபெற்றது.

தருமபுர ஆதீன நூலகத்திற்கு வரப் பெற்றுக்கொண்ட நூல்களின் விபரம்.

தொடர் எண்	புத்தகப் பெயர்	பதிப்பு	
7877	திருமயிலைப் பிரபந்தங்கள்	சென்னை அரசாங்கம்.	1953
7878	கச்சியப்ப முனிவர் பிரபந்தங்கள் முதற்பகுதி	திருவாவடுதுறை ஆதீனம்.	1953
7879	,,	,,	
7880	,, இரண்டாம் பகுதி	,,	1954
7881	,,	,,	
7882	தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் பிரபந்தங்கள் 1-ம் பகுதி	,,	
7883	,,	,,	
7884	இரட்டையர் பிரபந்தங்கள்	,,	1953
7885	,,	,,	
7886	சீகாழிச் சிற்றம்பலநாடிகள் கலித்துறை முதலியன	,,	1954
7887	,,	,,	
7888	காசிகண்டம்	,,	1953
7889	,,	,,	
7890	அரிகரதாரதம்மியம் பரப்பிரம விளக்கம்	,,	
7891	,,	,,	1954

7892	சதாசிவ ரூபம் பழைய உரை	,,	
7893	,,	,,	1953
7894	சங்கற்ப நிராகரணம் பழையவுரை	,,	
7895	,,	,,	1954
7896	உண்மைவிளக்கம் முதலியன	,,	
7897	சிவஞானசித்தியார் சுபக்கம்	,,	
7898	,, பரபக்கம் மூலமும் உரையும்	,,	1955
7899	,,	,,	
7900	திருவுந்தியார் உரையுடன்	,,	
7901	,,	,,	1951
7902	திருக்களிற்றுப்படியார் விளக்கக் கட்டுரை	,,	1954
7903	மெய்கண்ட சாத்திரம் போற்றிப் பஃறொடை முதலியன	,,	
7904	,, திருவருட்பயன் முதலியன	,,	1953
7905	,,	,,	
7906	சிவஞானபோதம் சிற்றுரை	,,	1954
7907	,,	,,	
7908	சிவஞானபோதமும் பன்னிரு திருமுறையும்	,,	
7909	,,	,,	
7910	இருபா இருபஃது விரிவுக்கட்டுரை	,,	
7911	,,	,,	
7912	சிதம்பரம் கண்கட்டி-மடம் மறைஞானசம்பந்த நாயனார் சைவச் சிறுநூல்கள்	,,	

ெ

7913	திருமந்திரம் கயிலாய சித்தர் உரை	,,	
7914	,, சிவயோகப்பகுதி	,,	
	பழையவுரை	,,	
7915	,,	,,	
7916	திருவாய்மொழி வாசகமாலை எனும் விவரண சதகம்	தஞ்சை சரஸ்வதி மகால்	1952
7917	திருநாவுக்கரசர் பதிற்றுப்பத்தந்தாதி	திருவண்ணுமலை ஆதீனம் குன்றக்குடி	1952
7918	,,	,,	
7919	ஈங்கோய்மலை அந்தாதி	கே. எம். பாலசுப்பிரமணியம்	1953
7920	காரைக்கால் அம்மையார் அந்தாதி	பாகம்பிரியாள் மாதர் கழகம்	1954
7921	திரிசிராமலை அந்தாதி	தருமபுர ஆதீனம்	1953
7922	,,	,,	
7923	,,	,,	
7924	சாத்திரங்களும் தோத்திரங்களும்	,,	1954
7925	,,	,,	
7926	,,	,,	
7927	எக்காலக் கண்ணி	காசிமடம், திருப்பனந்தாள்	1953
7928	,,	,,	
7929	அறுவகைச்சமயம்	தருமபுர ஆதீனம்	1954
7930	,,	,,	
7931	சமயபோதச் சொற்பொழிவுகள்	,,	
7932	,,	,,	
7933	,,	,,	
7934	கழகச் சைவவினுவிடை 1-ம் பாகம்	சை. சி. நூ. கழகம்	1951
7935	,,	,,	

7936	குருஞானசம்பந்தர் வரலாறு	தருமபுர ஆதீனம்	1953
7937	”	”	
7938	ஞானசம்பந்தம் தொகுதி 12	”	1952-53
7939	”	”	
7940	”	”	
7941	” தொகுதி 13	”	1953-54
7942	”	”	
7943	”	”	
7944	தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார ஆண்டறிக்கை	”	
7945	”	”	
7946	வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தான நிர்வாக அறிக்கை	”	
7947	”	”	
7948	தருமபுரஆதீனக்கல்விநிலையங்களின் 8-ம்ஆண்டு அறிக்கை 1953-54	”	
7949	”	”	
7950	ஆதீனக் கல்விநிலையங்களின் 8-ம் ஆண்டு அட்டவணை	”	
7951	”	”	
7952	செந்தமிழ்க் கல்லூரி 10-ம் ஆண்டு அறிக்கை	காசிமடம், திருப்பனந்தாள்	1953-54
7953	காஞ்சிப்புராணம் 2ம் காண்டம்	திருவள்ளுவர் செந்தமிழ் பாடசாலை, காஞ்சி.	
7954	கந்தபுராண வசனம்	சை. சி. கழகம்	1950
7955	”	ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள்.	1953
7956	”	”	

திருவிளையாடற் புராணம் உரைநடை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடு பக்கங்கள்; (658) ஆக்கியோர் வித்துவான், திரு. தி. பட்டுசாமி ஓதுவார் அவர்கள் திருச்சிராப்பள்ளி, மன்மத-ஆண்டு ஆவணிமூல விழா நன்னாளின் நினைவு மலராக வெளியிடப் பெற்றது.

தருமபுர ஆதீனம் 25-ஆவது குருமுதல்வர் அவர்களின் வாழ்த்துரையோடு தொடங்குவது இந்நூல். இதனை வெளியிட்டருளியவர்கள் அறப்பணிபல புரியும் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அருளாணையின் வண்ணம் ஸ்ரீ காசி மடம் இளவரசு வித்துவான், ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஆவார்கள், பலகலைச் செல்வர், திரு. தொ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை எழுதியுள்ளார்.

திருவிளையாடற் புராணம் பரஞ்சோதி முனிவரால் அருளிச் செய்யப் பெற்றது. பரஞ்சோதியாரின் திருவிளையாடல் தலையெடுத்த பிறகு ஏனைய திருவிளையாடல் நூல்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன. இஃதொன்றே இவர் தம் பாடல்களுக்குள்ள பெருமையைப் புலப் படுத்தும். இவ் வுரை நடை நூல் எல்லாவற்றிலும் சிறந்துள்ளது.

வி. சா. குருசாமி தேசிகர்.

வையம் போற்றும் வனிதையர்

இந்நூற்பொருள் பெரியபுராணத்துப் பெண் மணிகளின் வரலாறுகள். சேக்கிழாருடைய சொல், பொருள் அமைப்புக்களின் நயத்தை எடுத்துரைத்துப் பல பழமொழிகளையும் பொன்போற்போற்றும் பண்புற நன்கு விளக்கியுள்ளார். இக்காலத்திலுள்ள பழக்கவழக்கங்கள் சில முற்காலத்திலேயே இருந்தவாற்றை விளக்கியுள்ளார். சேக்கிழார் சொற்றொடர் களையே ஆசிரியர் பல இடங்களில் உரைநடைப் படுத்தி ஆளுகிறார். கலையர், அப்பூதி, சங்கிலி முதலிய பெயர்களுக்கு அழகிய பொருத்தமான பொருள் உரைக்கின்றார். வனிதையரின் காலம் சுருக்கமாகக் கடைசியில் விளக்கப்பட்டுள்ளது. கட்டுரைத் தலைப்புகள் பொருத்தமும் சிறப்பும் அழகும் உற அமைந்துள்ளன. பலரும் படிக்கத்தக்கது. உபபாடமாக வைக்கப்பெறின் மாணவர்களுக்கு முற்காலத்திய பண்பாடுகளும் சைவப்பற்றும் உண்டாகும். ஆசிரியர் வித்துவான். பாலூர் கண்ணப்ப முதலியார், தமிழ்ப்பேராசிரியர், புதுக் கல்லூரி சென்னை. விலை ரூ. 2—0—0.

K. இராஜகோபால சாஸ்திரியார்.

உ

குருபாதம்

தருமபுர ஆதீன வெளியீடுகள்

எண்	புத்தகம்	விலை	தபாற்செலவு
		ரூ.அ.பை.	ரூ.அ.பை.
1.	திருஞானசம்பந்தர் தேவாரம் முதல் திருமுறை (ராப்பர்)	3—8—0	1—5—0
2.	இரண்டாந்திருமுறை (காலிகோ)	5—0—0	1—8—0
3.	சமயபோதச்சொற்பொழிவுகள்	1—0—0	0-13—0
4.	பரமாணு புராணம்	1—4—0	0—9—0
5.	நித்தியபூஜா லக்ஷண சங்கிரகம்	1—8—0	0—9—0
6.	திருக்குறள் உரைவளம் பொருட்பால் (காலிகோ)	13—8—0	2—4—0
7.	காமத்துப்பால் ,,	6—0—0	1—8—0
8.	திருவாசகம் ,,	2—0—0	0-14—0
9.	நால்வர் நான்மணிமாலை	0—4—0	0—4—0

தொகையை முன்பே அனுப்பிப் பெறல்வேண்டும்.

கிடைக்குமிடங்கள் :-

1. மானேஜர், தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயூரம் போஸ்ட்.
2. தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலயம். 41, உஸ்மான் ரோடு, தியாகராயநகர், சென்னை-17.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram). 10—9—1955.